உலகைக் காட்டும் பலகணி

யுனெஸ்கோ

கூரியர்

ஜனவரி 1971 ஆண்டுச் சந்தா ரூ. 10·50 தனிப்பிரதி ரூ. 1·00

கார்த்தேஜ் அழியக்கூடாது

Photo © Roger Viollet - National Palace Museum, Taipei

உலகக் கலைக் கருவூலங்கள்

50 சீனா

வானுலக இசைவாணர்

மத்திய ஆசிய கோபி பாலையிலுள்ள டுன்-ஹுவாங்கில் பாறைகளில் வெட்டப்பெற்ற 469 புத்த கோயில்களுள் ஒன்றிலுள்ள ஓவியம். 7-8 நூற்றாண்டைச் சேர்ந்த இந்த டாங் கால ஓவியம் வானுலக இசைவாணர்களைச் சித்தரிக்கிறது. அனில் டி சில்வா தமது 'சைனீஸ் லாண்ட்ஸ் பெயின்டிங் கேப் இன் தி கேவ்ஸ் ஆப் டுன்-ஹுவாங்' (மெதூவான், லண்டன்; கிரௌன் பதிப்பாளர், நியூயார்க், 1967) எனும் நூலில், ''டுன்-ஹுவாங்கிலுள்ள டாங் ஓவியத்தின் சிறப்பியல்பு அதன் ஆற்றலும் உயிர்த்துடிப்புமே... இச்சுவரோவியங்களில் உயிரோட்டத்தின் பொலிவைக் காணலாம்'' என்கிறார். கி. பி. நான்காம் நூற்றாண்டில் வெட்டப்பெற்ற இந்த டுன்-ஹுவாங் கோயில்கள் சீனாவில் புத்தசமயக் கல்வியின் நிலைக்களனாகவும், 1,500 ஆண்டுகள் இடையறாது நிலவிய சீன ஓவியத்தின் கருவூலமாகவும் இலங்கின. இச்சித்திரம் டைப்பெயில் (சீனக்குடியரசு) தேசிய மாளிகை பொருட்காட்சி மனையிலுள்ள ஓவியத்தின் ஒரு பகுதி.

யுனெஸ்கோ கூரியர்

ஜனவரி 1971

யுனெஸ்கோவுடன் கூட்டுறவுக்கான இந்திய தேசியக் குழுவுடன் செய்துகொண்டுள்ள ஏற்பாட்டின்படி தென் மொழிகள் புத்தக டிரஸ்டினால் வெளியிடப்படுகிறது.

யுனெஸ்கோவினால்
பதின்மூன்று பதிப்புகளாக
வெளியிடப்படுகிறது.

ஆங்கிலம்	ஜப்பானிஸ்
ஃபிரெஞ்சு	இத்தாலியன்
ஸ்பானிஷ்	ஹிந்தி
ரஷ்யன்	தமிழ்
ஜெர்மன்	ஹீப்ரு
அராபிக்	பெர்சியன்

அமெரிக்க ஐக்கிய நாடு

விற்பனை, விநியோக அலுவலகம் :
458, பூந்தமல்லி நெடுஞ்சாலை, சென்னை-10.

ஆண்டுச் சந்தா ரூ. 10.50

யுனெஸ்கோ கூரியர், செப்டம்பர்—அக்டோபர் மாதங்களில் தவிர மாதந்தோறும் வெளியிடப் படுகிறது. செப்டம்பர்—அக்டோபரில் ஒரே இதழாக வெளிவரும் (ஆண்டுக்கு 11 இதழ்கள்) பதிப்புரிமை அல்லாத தனிப்பட்ட படங்களையும், கட்டுரைகளையும் யுனெஸ்கோ கூரியரிலிருந்து எடுத்துப் பிரசுரிக்கப்பட்டது என்ற அறிவிப்புடன் இதழ் தேதியைக் குறிப்பிட்டு வெளியிட்டுக் கொள்ளலாம். அவ்வாறு வெளியிட்ட இதழின் மூன்று பிரதிகள் ஆசிரியருக்கு அனுப்பப்படவேண்டும். ஆசிரியர் பெயருடன் கூடிய கட்டுரைகளைத் திரும்பப் பிரசுரிக்கும்போது அதில் ஆசிரியர் பெயர் இடம் பெறவேண்டும். பதிப்புரிமை அல்லாத புகைப்படங்கள் வேண்டுவோருக்கு அனுப்பித் தரப்படும். கேட்டுப் பெருத கட்டுரைகளைப் போதிய தபால் தலை இல்லாமல் திருப்பியனுப்ப இயலாது. ஆசிரியர் பெயருடன் கூடிய கட்டுரைகள் அவரது கருத்தை வெளியிடுவதாகும். யுனெஸ்கோவின் அல்லது யுனெஸ்கோ கூரியர் ஆசிரியர்களின் கருத்தைப் பிரதிபலிக்க வேண்டிய அவசியம் இல்லை.

ஆசிரியர் அலுவலகம் :
யுனெஸ்கோ, பிளேஸ் தஃபாண்டினுய்
பாரிஸ்-7. ஃபிரான்ஸ்.

பிரதம ஆசிரியர் : ஸாண்டி காஃப்ளர்

உதவிப் பிரதம ஆசிரியர் : ரெனி காலோஸ்

பிரதம ஆசிரியருக்கு உதவியாளர் :
லூஸியோ அட்டினெல்லி

நிர்வாக ஆசிரியர்கள் :
ஆங்கிலப் பதிப்பு : ரொனால்ட் ஃபென்டன் (பாரிஸ்)
ஃபிரெஞ்சுப் பதிப்பு : ஜேன் ஆல்பர்ட் ஹெஸ்ஸே (பாரிஸ்)
ஸ்பானிஷ் பதிப்பு : அர்ட்டுரோ டெஸ்பூயே (பாரிஸ்)
ரஷ்யன் பதிப்பு : விக்டர் கோலியச்காவ் (பாரிஸ்)
ஜெர்மன் பதிப்பு : ஹான்ஸ் ரீபன் (பெர்ன்)
அராபிக் பதிப்பு : அப்தல் மோனியம் எல் ஸாவி (கெய்ரோ)
ஜப்பானிஸ் பதிப்பு : ஷின்-இச்சி ஹஸகாவா (டோக்கியோ)
இத்தாலியப் பதிப்பு : மரியா ரெமிட்டி (ரோம்)
ஹிந்திப் பதிப்பு : கர்த்தார் சிங் துக்கல் [டில்லி]
ஹீப்ரு : அலெக்ஸாண்டர் பெலி [ஜெருசலம்]
பெர்சியப் பதிப்பு : ஃபெரெதூன் ஆர்தலன் [டெஹ்ரான்]
தமிழ்ப் பதிப்பு : நெ. து. சுந்தரவடிவேலு [சென்னை]
தமிழ்ப் பதிப்பு நிர்வாக ஆசிரியருக்குத் துணைவர்கள் :
எஸ். கே. தம்பா, மீ. முகம்மது முஸ்தபா

ஆராய்ச்சி : ஓல்கா ரோடல்

அமைப்பு, சித்திரம் : ராபர்ட் ஜாகுமின்

எல்லாக் கடிதங்களும் பிரதம ஆசிரியர் விலாசத்துக்கே எதமுப்பட வேண்டும்.

The UNESCO Courier

JANUARY 1971 No. 42

பக்கங்கள்

4	கார்த்தேஜ் அழியக் கூடாது — ஜெலால் எல் காஃபி
9	கார்த்தேஜ் நகர அரசின் பொலிவும் நலிவும் — ஹெலி ஸ்லிம்
14	கப்பலோட்டி ஹனோவின் வீரப் பயணம்
17	எட்டு நூற்றுண்டுகளாக நிலவிய கார்த்தேஜ் நாகரிகம் — கில்பர்ட் சார்ல்ஸ் பிகார்ட்
21	பன்னிரண்டு வண்ணப் பக்கங்கள்
29	கார்த்தேஜ் பற்றி கிரேக்க, ரோமானிய அறிஞர்கள் — மகமது ஃபான்டார்
34	துனீஸ் — இஸ்லாமின் அணிகலன் — ஜியார்ஜஸ் ஃப்ரேடியர்
45	ஜீன் பெரின் தற்கால பௌதிகத்தின் முன்னோடி — பியர் ஆகெர்
2	உலகக் கலைக் கருவூலங்கள் வானுலக இசைவாணர் (சீனு)

No 12-1970 MC 70-2-261 A

அட்டைப்படம்

இச்சிறு அரிய கார்த்தேஜ் கலைப் பொருள் கார்த்தேஜ் கல்லறையில் கண்டெடுக்கப்பெற்ற குவளையின் கைப்பிடியை அலங்கரிக்கிறது. இது கார்த்தேஜின் பெருமையும் புகழும் உச்ச நிலையை அடைந்திருந்த கி. மு. 5 அல்லது 6ஆம் நூற்றுண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படுகின்றது.

Bardo Museum, Tunis
Photo Luc Joubert © Archaeologia Viva

கார்த்தேஜின் அடையாளமாக விளங்கும் ஒ சின்னம் உண்டென்ருல், அதுதான் ''டான சின்னம்''. இதற்குப் பல நூற்ருண்டுகளாக பற்பல விளக்கங்கள் தரப்பட்டன. முதலில் ஒரு கிடைநிலைக் கோடும் வட்டமும் மேலே யுள்ள இணைகரமாகவிளங்கின. அதன் மற்றெரு வடிவத்தில் (வலப்புறம்) பிறை மதியும் ஞாயிறும் மேலே காணப்பட்டன. டானிட் பண்டைய கார்த்தேஜின் பெருங் கடவுளாகிய பால் ஹாமனின் துணைவி. அ செழுமை வழங்கி, இறந்தோரைக் காக்கும் இறைவி. கி. மு. நான்காம் நூற்ருண்டின் சிறிய சின்னத்திலும் (நடுப்படம்) அவளது அடையாள உருவைக் காணலாம். இதில் பிறை, ஞாயிறு ஆகியவற்றிற்கு மேலே செழுமையின் சின்னமான கொங்கைகள் உள்ளன. பிற டானிட் சின்னங்களை 40ஆ பக்கத்தில் காணலாம். வலப்புறம்: (கி. மு 6—7 நூற்ருண்டுகளில்) மதச் சடங்குகளில் பயன்படுத்தப்பெற்ற மூக்கு வளையமணிந்த முகமூடி. இதில் கண்விழிகளும் இமைகளு கருமையாகவும் முகம் சிவப்பாகவும் இருந் பண்டைய கார்த்தேஜில் ஆணும் பெண்ணு மூக்கு வளையம் அணிவர். பிற பேயுரு முகமூடிகள் வழிபாட்டு நடனங்களில் அணியப்பெற்றன. (24ஆம் பக்க வண்ண படங்களைப் பார்க்க.)

Photo Georges Viollon © Rapho, Paris

கார்த்தேஜ் அழியக்கூடாது

2000 ஆண்டுகளுக்கு முன் ரோமானிய செனட் மார்கஸ் போர்சியுஸ் கேட்டோ ''கார்த்தேஜ் அழிய வேண்டும்'' என முழங்கினுர். விரைவில் ரோமானியப் படைகள் கார்த்தேஜைத் தாக்கித் தரை மட்டமாக்கின. இன்று மத்திய தரைக் கடலின் கரையில் துனீசுக்கு அருகிலுள்ள பண்டைய கார்த்தேஜின் எஞ்சிய பகுதிகளும் துனீசின் எழில்மிகு மதினுவும் நகரின் கான்கிரீட் கடலில் அமிழ்ந்து அழிந்து போகும் புதிய ஆபத்தான நிலையிலுள்ளன. யுனெஸ்கோவும் துனீசிய அரசாங்கமும் இதை எதிர்த்து கார்த்தேஜ் - துனீஸ் பகுதியைக் காத்துச் சீர்படுத்த பெரும் திட்டமொன்றைத் தொடங்கி யுள்ளன. கார்த்தேஜின் கடந்த கால மாண்பையும் மதினுவில் காணப்படும் பண்பாட்டு மரபையும் ''யுனெஸ்கோ கூரியரின்'' இவ்விதழ் விளக்குகிறது.

ஜெலால் எல் கா:ஃபி

துனீசியாவைச் சேர்ந்த ஜெலால் எல் கா:ஃபி துனீஸ் — கார்த்தேஜ் பகுதியின் வளர்ச்சித் திட்டத்தின் (யுனெஸ்கோ, ஐ. நா. வளர்ச்சித் திட்டம்—தனி நிதி) துணை இயக்குநர். நகரமைப்பு வல்லுநரான இவர் துனீஸ் மதினுவின்-பாது காப்பு சங்க இயக்குநர். மதினுவைப் பாதுகாக்கும் சிக்கல்கள் பற்றிப் பல நூல் களும் கட்டுரைகளும் எழுதியுள்ளார்.

Photos Luc Joubert © Archaeologia Viva, Paris

தற்போது துனீசியாவாக விளங்கும் வட ஆஃப்ரிக்கப்பகுதியின் வரலாற்றில், மத்திய தரைக்கடல் உலகில் பண்டை நாகரிகச் சந்திப்பாக மிளிர்ந்த கார்த்தேஜ் பெருநகரம், பல்லாயிரக் கணக்கான ஆண்டுகட்கும் மேலாக நீண்டு கிடக்கும் ஒரு கலாச்சார நிலப் பரப்பினின்று கிளர்ந்தெழு சிகரமாகும். எனினும், கார்த்தேஜ் என்பது வெறும் நினைவுக்குரிய ஒரு பொருள் என்கிற அளவுக்கு ஒரு நாளைக்கு ஆகிவிடும் நிலையில், அந்நகரையும் அது அமைந்துள்ள இடத்தையும் அழித்து வருகிற ஒரு போக்கின் வளர்ச்சியை கார்த்தேஜில் வாழும் நாங்கள் துவக்கத்திலிருந்தே பார்த்து வருகின்றோம்.

கார்த்தேஜின் நிலை, தனித்ததன்று. உலகின் எல்லாப் பகுதிகளிலுமே, பல பண்டைய இடங்களும் நகர்களும் மறைந்தாக வேண்டும் விதியுடையனபோல் தோன்றுகின்றன. மனிதனின் கலாச்சாரப் பாரம்பரியச் செல்வங்களான—ஈடிணையற்ற இவற்றை மீட்பதும், எப்படியும் பரவி வளரும் நகர்கள் மற்றும் தொழில்களின் காரணமாக இவை சுவடு தெரியாமல் அழிக்கப்படுவதைத் தடுப்பதும் தலையாய தேவைகளாகும்.

நமது சுற்றுப்புறத்திற்கு நாம் செய்து கொண்டிருக்கின்ற நாசமானது, உலகந் தழுவிய பிரச்சினையாகியிருக்கிறது. இயற்கைக் கெதிராகப் புதிய புதிய பலாத்காரச் செயல்கள் நிகழ்வதை நித்தநித்தம் படிக்கின்றோம். தொடர்ந்து நிகழும் இந் நாசச் செயலைப் பார்க்கின்ற ஒருவருக்கு—அவர் விஞ்ஞானியாக இருந்தாலும் சரி, சாதாரண மனிதராயினும் சரி—இக் கொள்ளைகளினால், தனக்கு ஏதோ சொந்தமாகவே தீங்கிழைக்கப்பட்டது போன்றும் தானே நட்டப்பட்டது போன்றும்—ஓர் உணர்வு தோன்றுகிறது.

இருப்பினும் நகரங்கள் பரவப் பரவ, உடன் சீரழிவுப் போக்கும் விளையும் என்பதைப் பொதுமக்கள் இறுதியாகக் கருதி ஏற்றுக் கொள்ள வரும் வரைக்கும், இயற்கையெழில் வாய்ந்த இடங்கள் உருக்குலைவதும், எஞ்சியுள்ள வரலாற்றுத் தொல்பொருள் ஆய்வுச் சின்னங்கள் அழிவதும் தடையின்றித் தொடர்ந்து கொண்டே இருக்கும் போல்தான் தோன்றுகிறது. இதைக் கண்டும் நாம் ஒதுங்கியிருந்தால், கட்டுப்படுத்தற்கில்லா ஒருவகை நகர்ப்புற வளர்ச்சியின் ஆக்கிரமிப்புக்குத் தொல்பொருள் ஆய்வு இடங்களைத் தாரை வார்த்து விடுவதில்தான் போய் முடியும்; உடனே அவ்விடங்களை மறைக்கும் வகையில் தாறுமாறான வீடுகளும் விடுதிகளும் விரைவாக எழுப்பப்பட்டுவிடும்.

இந்த அழிவின் விளைவுகள் எங்கணும் தெளிவாகவே தென்படுகின்றன. இருந்தும், மக்களின் கருத்து, இந்த நகர்ப்புற—தொழில் துறை ஆக்கிரமிப்புக்கு இசைவதாகத் தோன்றுகிறது. அதன் முடிவு, மனிதன் அவனது இயற்கையான சுற்றுப்புறத்துடன் கொண்டுள்ள உறவைத் தீவிரமாக மாற்றிவிடுவதுடன், அவனது பண்டைய வரலாற்றின் எஞ்சிய சின்னங்களாக உள்ளனவற்றையும் அது அழித்து விடுகிறது.

இன்று கார்த்தேஜ் நகரும் அதன் சுற்றுப்புறப் பகுதியும், விரல்விட்டு எண்ணிடக் கூடிய—சிதறிக் கிடக்கும் சில சின்னங்கள் என்கிற அளவுக்குச் (அவைகளும் வேகமாக மறைந்து வருகின்றன) சிதைந்த ஒரு பகுதியாகவும், கவர்ச்சியற்ற கட்டடங்களால் அழகு கெட்ட ஒரு நாட்டுப்புறப் பகுதியாகவுமே ஆகியுள்ளது. பண்டை பியூனிக் துறைமுகங்கள் இன்னமும் தொன்மை கார்த்தேஜின் கம்பீரத்தைப் பிரதிபலித்துக் கொண்டுள்ளன. ஆனால் வருந் தலைமுறையினரோ, இப் பியூனிய மற்றும் ரோமரது பட்டணங்களின் அடையாளங்களைக் கூடக் காண முடியாது போகலாம். ஏனெனில் குழப்பமான—நவீன வீடுகட்டும் முறையின் கட்டட வேலையாலும், செங்கல்லின் கீழும் அப் பட்டணங்கள் புதைந்துவிடும் என்றே அநேகமாகத் தோன்றுகிறது.

இன்னும் அதிக நாள் கூட ஆகியிருக்காது. நூபியாவில் உள்ள அபூ சிம்பெல்லின் கோவில்கள், நைல்நதியின் நீரால் அழிக்கப்பட்டுவிடுமோ என்கிற அச்ச நிலை ஏற்பட்டபோது, இன்றைய மனிதன் தனக்காக ஒருபுறமிருக்கட்டும்—தனது சந்ததியாருக்காகக் கூட, தன்து முன்னோர்களால் தனக்கு வழங்கப்பட்ட பாரம்பரியச் சொத்துக்களை ஏனோ காப்பாற்றி வைப்பதில்லை—இதைப் புரிந்து கொள்ளவும் முடிய

துனீசிலிருந்து கார்த்தேஜ் வரை—கான்கிரீட் வரிப்பட்டை

வில்லையே என்று, யுனெஸ்கோவின் தலைமை இயக்குநர் ரெனே மேகு வியந்தார். அதைத் தொடர்ந்து அனைத்துலக இயக்கமொன்றை யுனெஸ்கோ மேற்கொண்டது; அபூ சிம்பெல் காப்பாற்றப்பட்டது.

ஆனால் நமக்குத் தெரிந்தவரை மத்திய தரைக்கடல் உலகின் வரலாற்றிலும், துனீசிய வரலாற்றிலும் முக்கியத்துவம் வாய்ந்த—மனிதனின் கலாச்சாரப் பரம்பரைச் சொத்துக்கு இன்னொரு களஞ்சியமாக விளங்குகிறதே—இந்த இதழ் யுனெஸ்கோ கூரியரில் நினைவூட்டப்படுகிறதே—அக் கார்த்தேஜின் நிலைமை என்ன ?

எப்படி கார்த்தேஜைக் காப்பாற்றுவது? இக் கேள்விக்குத்தான்; துனீசிய—கார்த்தேஜ் திட்டத்தில் இணைந்து செயல்பட்டு வருகிற துனீசிய அரசும் யுனெஸ்கோவும் பதில் காண முயன்று வருகின்றன. அந் நகரைப் பழைய நிலைக்குக் கொண்டு வந்து, பின் பாதுகாப்பதற்கான ஒரு திட்டத்தைத் தீட்டுவதற்கு முன், நகரின் இடங்கள் மற்றும் புராதனச் சின்னங்களின் தற்போதைய நிலையை முறையாக ஆராயத் தொடங்கியுள்ளார்கள்.

கலாச்சார மீட்புப் பணிகளில், அது வெள்ள ஆபத்து நெருக்கடியின் கீழ் அஞ்சிக் கொண்டிருக்கும் வெனீஸ் பகுதியானாலும் சரி, அல்லது நகர்ப்புற வளர்ச்சி விரிவின் நெருக்கத்தைச் சந்திக்க வேண்டியுள்ள துனீசிய மதினாவானாலும் சரி, பணிகள் அனைத்திற்கும் அடிப்படைப் பிரச்சினைகள் ஒன்று போன்றவையே. ஆனால் பாதுகாக்கின்ற முறையும், அதற்குள்ள சாத்திய நிலையும் தாம், கிடைக்கின்ற ஆதாரங்களைப் பொறுத்து மாறுபடும்.

சுற்றுப்புறத்திற்கு அழிவு என்பதே, அரசு ஆகட்டும் அன்றி உள்ளாட்சி அமைப்புகளாகட்டும் — முரண்பாடில்லாத ஒரு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்துடன் வேகமான வளர்ச்சியைத் தடுத்திடத் தவறியதால் ஏற்பட்ட விளைவாகவே அநேகமாகத் தோன்றுகிறது. இடம் எதுவாயினும், இதே பிரச்சினைகள் தாம் எழுகின்றன. மக்கள் தொகைப் பெருக்கமும் அதனால் விளைகிற கட்டுப்படுத்த முடியாத நகர்ப்புற வளர்ச்சியும்; தொழில் துறைகட்கு நிலத்தைக்—கட்டுப்பாடற்ற முறையில் தாறுமாறாக உபயோகப்படுத்திக் கொள்வது; இரக்கமற்ற வகையில் பழைய இடங்கள் அழிக்கப்பட்டு, நெடுஞ்சாலைப் பணிகள் விரிவடைந்து கொண்டே செல்வது—இவைதான் அப்பிரச்சினைகள்.

இன்னும், கட்டடங்கள் மற்றும் நினைவுச் சின்னங்களுக்கென்றே அமைந்த குறிப்பான மற்ற பிரச்சினைகளும் உள்ளன. காலத்தின்—தட்பவெப்ப நிலைகளின் விளைவுகளால் மேலும் சீரழிக்கப்படுகிற கற்களின் சிதைவு—மரங்களின் பிணிகள் ஆகியவை குறித்த சிக்கல்களும் உள. தன்னைக் காப்பாற்றுவதற்கான திட்டமெதுவும் இல்லை என்றாலும் சரி, அல்லது இன்னும் மோசமான நிலைக்குச் செல்வதென்றாலும், நல்லதோ கெட்டதோ எந்தவித வளர்ச்சியையுமே ஏற்க மறுக்கிற சட்டங்கள் இல்லை

Photo © Archaeologia Viva, Paris



Photo © Andre Martin, Paris

வலப்புறம் : ரோமானிய கார்த்தேஜின் அழிந்த அழகு. இத்தூண்களும் சிற்பங்களும் இடிந்த சுவர்களும், ரோம் கி. மு. 146இல் கார்த்தேஜை அழித்த பிறகு நிறுவிய குடியேற்றத்தில் கி. பி. 3ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கட்டிய மாளிகையின் எஞ்சிய பகுதிகளாகும்.

Photo © Roger, Viollet, Paris

யென்றாலுஞ் சரி, அவற்றை விட, தனது மூப்பின் காரணமாக விளையும் ஊறுகளைக் கல்லானது தாங்கிக் கொள்ள இயலும்.

இதற்கு கார்த்தேஜ் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும். அரணை நிலத்தின்இருமருங்கும் அமைந்த கொத்தளங்களுக்கிடையே—அழிக்கப்படாத சூழலில் பியூனியத் துறைமுகங்கள் விளங்கியதை, இந்நூற்றாண்டின் துவக்கத்தில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் காட்டுகின்றன. இன்றோ, தாறுமாறாக எழும்பியுள்ள சாலைகளும் வீடுகளும் சுற்றிலும் இரு படுகைகளை வளைத்திருக்கின்றன. அதுமட்டுமல்ல, உணவு விடுதிகளைக் கட்ட நினைக்கின்ற எந்த ஒருவருக்கும், அதைச் சுற்றுலா நிலையமாக மாற்ற விழையும் இடமாக, அவ் விரு கழிகாற் பரப்புகளும் ஆகியுள்ளன.

எந்த விதச் சுற்றுலா அபிவிருத்தி வடிவத்தையுமே ஒரேயடியாக ஒதுக்கிவிடுவதும் அறிவீனமே. ஆனால் பியூனியத் துறைமுகங்கள் உருவாக்கியுள்ள—சிறப்பு வாய்ந்த பகுதியை சுற்றுலா விடுதிகளுக்கும் பங்களாக்களுக்குமான ஓர் இடமாக முடிவில் ஆவதென்பது—(அதிலும் இந்த் இடத்தில் நடைபெற்று வரும் தொல்பொருளாய்வும் நிதிப்பற்றாக்குறை காரணமாக முடிவதாக இல்லாத நிலையில்)—கோரமான விபத்தாகத்தான் போய் முடியும்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகட்கு முன்னமேயே துனீசிய மண்ணில் தனது சுவட்டைப் பதித்திருக்கின்ற ஒரு நாகரிகத்தின் குறிப்பிடத்தக்க எஞ்சிய சின்னங்கள், மிகவும் முக்கியம் வாய்ந்தவை; அவற்றின் முக்கியத்துவத்தை நூல்களில் எழுதி முடியாது. அவைகளை விஞ்ஞான ரீதியில் ஆராயவேண்டும்; அனைத்திற்கும் மேலாகக் காப்பாற்றவும் வேண்டும். அப்போதுதான், எதிர்காலத் தலைமுறையினர், அவ்வாராய்ச்சியைத் தொடர்ந்து நடத்துவர். இதற்காக, இணக்கமானதொரு தொல்பொருளாய்வுத் திட்டமும், புதை பொருள்களைத் தோண்டியெடுக்கும் பணிக்கான ஒழுங்கு முறைகளும், போதுமான நிதி ஒதுக்கீடும் தேவை.

ஆனால் எந்தவித ஆய்வு முறையை மேற்கொள்வது என்று முடிவெடுக்க வரும்போது, ஒரு சிக்கலான பிரச்சினையைச் சந்திக்கின்றோம். முறையோடு கூடிய இயக்கத் திட்டம் எதுவுமின்றி மேற்கொள்ளப்பட்ட தனித்த ஆராய்ச்சியானது பக்குவமற்ற முயற்சிகளாக ஆகி, வேதனை தரும் விளைவுகளைத்தான் உருவாக்கியிருக்கின்றது. ஒரு இடத்தை அதனுடைய மேற்பரப்பைக் காப்பாற்றி வைப்பதுதான், அதைத் துண்டு துண்டாகக் கூறுபோடுவதைவிடச் சிறந்ததாகும்.

உதாரணமாக துனீசியாவின் பண்டை இடங்களில் காணப்படும் பியூனியப் பொருள்களையும் ரோமரது பொருள்களையும் எடுத்துக் கொண்டால், அவற்றுள் சில பரவலாகச் சிதைந்திருந்தாலும், உள்ளூர் பொருட்காட்சிச்சாலைகளிலோ அல்லது ஐரோப்பா இன்னும் மற்ற இடங்களிலுள்ள பொருட்காட்சிச் சாலைகளிலோ பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. ஆனால் பிற பொருள்களோ, தொன்மைப் பொருள் விற்பனையாளரின் கைகளுக்கு மாறியிருக்கின்றன. இதைவிடவும் மோசமான நிலை என்னவெனின், வர்த்தகர்களின் கைகளுக்கு அப்பொருள்கள் சென்றிருப்பதுதான். அவர்களிடம் தான், ஏதோ தனது பகுத்தறிவு விசாலத்தைக் காட்டிக் கொள்வதுபோல், வெளியூர்ப் பயணி தனது பயண 'ஞாபகார்த்தப் பொருள்களை வாங்கச் செல்கின்றான்.

இவ்வாறு, வரலாறு மற்றும் இனவழி ஆய்வுகட்கு முக்கிய ஆதாரங்களாக உள்ளனவற்றிற்கு ஊறு விளைவிக்கும் வகையில், தொல்பொருளாய்வுக்குகந்த பொருள்கள் ஒரு வணிக மதிப்பைப் பெற்றுவிட்டிருக்கின்றன. துனீசியக் கடற்கரை நெடுகிலும் பியூனியப் பழம் பொருள்கள், உடைந்த புட்டிகள் மற்றும் ரோம மட்பாண்டங்கள் விலைக்குப் பெற இயலும்.

ஏதோ பெரும் புதையலொன்றை வேட்டையாடுவதைப் போன்ற தோற்றமெல்லாங் கொண்ட—ஆனால் முக்கியமாகப் பழம் பொருட்களைத் தேடுவதிலேயே நாட்டங் கொண்ட, இன்னுஞ் சொன்னால், இந்தத் தொன்மையான நகரைக் குறித்து எந்தவித உண்மையான ஆர்வமும் இல்லாத ஒரு தொல்பொருள் ஆராய்ச்சி காலங் கடந்த முறையில் இங்கே நடந்து தோல்வியைக் கண்டதைக் காண்கிறோம். ஆய்வுக் குறிப்பை வெளியிட்டுவிட்டு, 'பழம் பொருட்களைப் பொருட்காட்சிச் சாலையில் வைத்துவிட்ட பின்னர், தோண்டி எடுக்கப்பட்ட பகுதி காப்பாற்றப்படாமலும், ஒழுங்கற்ற முறையிலும் விடப்பட்டு விட்டதே, அது எப்படிப்போனால் யாருக்கு என்ன கவலை ?

ஏற்கனவே கொள்ளையடிக்கப்பட்டு, புறக்கணிக்கப் பட்டுள்ள கார்த்தேஜுக்கு, நகர்ப்புற வளர்ச்சியைத் தடுத்து நிறுத்துவதென்பது அரிதாகவே

சிறந்த கப்பல்களைக் கட்டிய கார்த்தேஜ் மக்கள் துறைமுகப் பொறியியலில் வல்லுநர்களாக விளங்கினர். வாணிக கப்பல்களும் அவற்றைக் காத்த போர்க் கப்பல்களும் நிற்பதற்காக கார்த்தேஜில் இரு துறைமுகங்களைக் கட்டியிருந்தனர். அவர்களது போர்த் துறைமுகம் முன்னிருந்த வட்டவடிவிலே இன்னும் இருக்கின்றது (இடப்புறம்). அங்கு 220 கப்பல்கள் நிற்க முடியும். போர்க் காலத்தில் பெரும் சங்கிலிகளால் தடுக்கப்படக் கூடிய ஒரு குறுகிய கால்வாய் அதை வெளியேயுள்ள வாணிகத் துறைமுகத்துடன் இணைத்திருந்தது. நடுவிலுள்ள தீவிலிருந்து கடற்படை நிலையம் எக்காளங்கள் மூலமாகவும் கதிரவன் ஒளியைப் பிரதிபலிக்கும் கண்ணாடிகள் வாயிலாகவும் அங்குள்ள கப்பல்களுக்கு கட்டளைகளை அனுப்பியது. துறைமுகத்திற்கு தெற்கிலுள்ள தீபகற்பத்தில் இன்று வீடுகள் மலிந்த லே கிராம் எனும் சிறுநகர் அமைந்துள்ளது. மேலே வலப்புறம் துனீஸ் ஏரி காணப்படுகிறது. துனீஸ் வரை செல்லும் ஒரு நீண்ட மேட்டுப்பாலம் இதைக் கடலிலிருந்து பிரிக்கின்றது (இது வலக்கோடியில் மறைந்துள்ளது). தற்கால கட்டடங்கள் செறிந்துள்ள கார்த்தேஜை வானிலிருந்து எடுத்த இப்படம் காட்டுகிறது.

Photo © Pietro Mele, Paris

பைர்சா மலையில் கி. மு. 4ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்ட நாணயச் சாலையில் கார்த்தேஜின் முதல் நாணயங்கள் அச்சிடப் பெற்றன. இடப்புறம் : கார்த்தேஜின் போர்ச் சின்னமான போர்க்குதிரை கி. மு. 3ஆம் நூற்றாண்டின் நாணயத்தில் காணப் படுகிறது. குதிரைக்கு மேலே புனிதப் பாம்பின் இரு உருவங்களுடன் கூடிய ஞாயிறு பொறிக்கப் பட்டுள்ளது. இப்பாம்புருவ அணிமுடி பண்டைய அரசர்களின் இறைமைச் சின்னமாக இலங்கியது.

கார்த்தேஜின் கடலோர வாழ்க்கை இப்பன்னிற மணி ஓவியத்தில் திகழ்கின்றது (வலப்புறம்). இது துனீசுக்கு அருகில் 3ஆம் நூற்றாண்டில் கட்டப்பெற்ற ரோமானிய மனையின் மழை நீர்த் தொட்டியை அலங்கரித்தது. மீனவர் இருவர் வலையை இழுக்க, மற்றொருவர் எண்கால் கடல் விலங்கின் மேல் ஈட்டி எறிகின்றார். இவ்வோவியமும் நாணயமும் (இடப்புறம்) துனீசிலுள்ள பார்டோ பொருட்காட்சி மனையில் உள்ளன.

தோன்றுகிறது. தொல்பொருளாய்வுப் பகுதியின் தேவைகளுக்கும், நகர்ப்புற இடப்பரப்பின் தேவைகளுக்குமிடையே உள்ள பிணக்கு, எங்கணும் தெளிவாகத் தெரிந்த ஒன்றே. இத்தொன்மையான நகர் குறித்த ஆராய்ச்சிக்கு முக்கிய கருவாக விளங்கும் தொல் பொருளாய்வு முகாமின் நிலப்பரப்பில் மாதந் தவறினாலும், புதிய கட்டடங்களுக்கான அடிக்கல் நாட்டப்படுவது தவறுவதே இல்லை.

1930ஐத் தொடர்ந்த ஆண்டுகளிலேயே, துனீசியா தனது நகர எல்லைகளிலிருந்து தன்னைப் பிரித்துக்கொள்ள முயன்று கொண்டிருந்தது. கடற்கரையோரமாக நகரம் பரவத் துவங்கி, அதைத் தொடர்ந்து, கார்த்தேஜின் பகுதி மீதே ஆக்கிரமிப்பு விரைந்தது; எங்கு பார்த்தாலும் பங்களாக்கள் எழுந்தன.

தொல்பொருளாய்வு இடத்தை அபிவிருத்தி செய்வதைவிட நகர்ப்புற வளர்ச்சிப் பிரச்சினைதான், (அவை இரண்டும் மிக நெருக்கமாக இணைக்கப் பட்டுள்ளன என்றாலும்) இப்போது தீவிரமாகியுள்ளது என்பது தெளிவாகிறது. எனவே துனீசிய கார்த்தேஜ் திட்டம் வெற்றிகரமாகச் செயல்படவேண்டுமாயின் இடப்பரப்பு முழுவதும் காணப்படும் சீரழிவை ஆராய்ந்து, மேலே சொன்னவற்றுள் எதற்கு முதல் முக்கியத்துவம் தருவது என்று முதலில் நிறுவ வேண்டும்.

இணைந்த அபிவிருத்திக்கான திட்டமொன்றை மேற்கொள்ளாவிடில், தொல் பொருளாய்வு, வரலாற்று இயற்கை நிலப்பரப்பின் மீதுள்ள தற்போதைய ஆக்கிரமிப்பானது, 1985-க்குள் இடம் அனைத்தையுமே அழித்து முடித்துவிடும்.

மக்கள் தொகைப் பெருக்கத்தினால் உந்தப்படும் நகர்ப்புற வளர்ச்சி பரவப் பரவ, அது கார்த்தேஜை—துனீசிய மதினாவை—சிதி பௌ செட். எழிலோவியப் பகுதியை, துனீசிய நெய்தல் நில மணல்மேடுகள்—ஒலிவமரத் தோப்புகளை—இவையனைத்தையுமே ஈடுகட்ட இயலாத அளவிற்கு அழித்து நாசஞ் செய்துவிடும்.

1985-க்குள் துனீசிய மக்கள்தொகையானது, 16,00,000க்-கும் 20,00,000-க்கும் இடைப்பட்ட அளவுக்கு-அதாவது தற்போதைக்குக் குறைந்த அளவு இரட்டிப்பாக ஆகிவிடும். அதற்குள், கடற்கரையோரப் பகுதியானது செங்கல்லினாலும் கான்கிரீட்டினாலும் ஆன கட்டடங்கள் நிறைந்த நிலப்பரப்பாகவும், அதற்கு மத்தியிலே எந்தவித அக்கறைக்கும் உரியதற்றதாக—சின்னஞ் சிறிய பரப்பைக் கொண்டதாகத் தொல் பொருள் ஆய்வு இடமும் இருக்கும். அப்படிப்பட்ட ஒருநிலை வருவதைவிட, அந்நிலப்புரப்பு முழுவதுமாகவே அழிந்துவிட்டால்கூட, நல்லதுதான்.

மேலும், தொல் பொருளாய்வு மண்டலம் மறைந்து விடுமானால், துனீசியப் பகுதியில் அது ஒரு பயங்கர விளைவை ஏற்படுத்தும். மத்தியிலே மண்டலம் அமைந்து ஓர் ஆபத்தான நிலைக்கு உயருகிற அதே நேரத்தில், மண்டலத்தைச் சுற்றி உருவாகும் நாடானது, புதிய நகர்ப்புறப் பகுதிகள் தாறுமாறாகப் பரவுவதன் காரணமாகத் தனது தோற்றத்தையே அழித்துக் கொண்டுவிடும்.

நகர்ப்புறப் பகுதிக்குள் தொல்பொருளாய்வு மண்டலத்தை இணைப்பதென்பது, மேலெழுந்த வாரியாகப் பார்த்தால், பொருளாதார அபிவிருத்தி என்னும் அவசரப் பணிக்கு முன்னே, முக்கியம் குறைந்ததாகத் தோன்றக் கூடும். ஆனால் மண்டலமானது, சுற்றுலாப் பயணிகளுக்கேற்ற சக்தி வாய்ந்த இடமாகத் திகழ்கின்றது. ஆகவே பொருளாதார வளர்ச்சியில் ஓர் அம்சமென்கிற வகையிலும், முழுக்க முழுக்க கலாச்சார அடிப்படையின் மீது அவ்விடத்தை முன்னேற்றுவது நியாயமானதே.

உள்ளபடியே, கார்த்தேஜின் இடப்பரப்பைப் புறக்கணிப்பது, பொருளாதார அபிவிருத்தியையே பாதிப்பதாகத்தான் முடியும். ஏனெனில் மிகவும் தேவைப்படும் அன்னியச் செலாவணியைத் தேடித்தரும் சுற்றுப்பயணத் துறையானது எல்லா வகையிலும் அதன் மூலம் சீரழியும்.

இந்த இணைந்த வளர்ச்சிக் கட்டுக்கோப்பிற்குள் துனீசிய—கார்த்தேஜ் திட்டமானது, கீழ்க்காணும் அம்சங்களைக் கணக்கெடுத்துக் கொண்டு, இடத்தை ஒழுங்காக அமைப்பதற்கு ஒரு திட்டத்தை உருவாக்கியுள்ளது.

- தொல்பொருளாய்வு மற்றும் வரலாற்று மண்டலங்கள் (கார்த்தேஜும் துனீசிய மதினாவும்),
- கலாச்சாரச் சுற்றுலாவை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான விடுதி அபிவிருத்தி,
- மக்கள் தொகைப் பெருக்கமும், திரும்பவும் மாற்றமுடியாத—வேகமான நகர்ப்புற விரிவுப் போக்கும்.

இந்த மூன்று அம்சங்களுமே பிரிக்க முடியாதவை; மற்றவைகளில்லாமல் ஒன்றைத் தீர்ப்பதென்பது, பொருளற்றதாகும். 1985இல் இடப்பரப்பின் அளவு

(தொடர்ச்சி 46 ஆம் பக்கம் பார்க்க)

கார்த்தேஜ் நகர அரசின் பொலிவும் நலிவும்

ஹெடி ஸ்லிம்



Photo © Roger Violet, Paris

தென் நடு நிலக்கடல் பகுதியில் பினீசியப் பேரரசின் முயற்சிகளுள் புகழ் மிக்க காவியமாகத் திகழ்வது கடற்படை வலிமையினால் கார்த்தேஜ் உயர்ந்ததே என்று உறுதியாகக் கூறலாம்.

பன்னாட்டு வாணிகம், நாவாய்ப் போக்குவரத்து ஆகிய துறைகளில் முயன்று பெற்ற வெற்றியினாலும், எழுத்து முறையைக் கண்டுபிடித்ததினாலும் இரண்டாவது நூற்றாண்டு முடியு முன்பே பினீசியர்கள் வரலாற்றில் இடம் பெற்றுவிட்டனர். வட அமெரிக்க கடற்கரைப் பகுதிகளை அவர்கள் ஆராயத் தொடங்கி, மெள்ள மெள்ள டார்டிஸாஸ் பகுதியைப் பிடித்து செல்வம் மிக்க தெற்கு ஸ்பெயின் பகுதியை அடைந்தனர். அடுத்த சில காலத்திற்குள் இவ்வாராய்ச்சியாளர் சென்ற பாதையில் வழிநெடுக வணிக நிலையங்கள் தோன்றின. துனீசியாவில் தோன்றிய முதல் பீனிசிய குடியிருப்பு ‘‘யுடிகா’’ வாகும். இது கி.மு. 1101 இல் ஏற்பட்டது. முன்னூறு ஆண்டுகள் கழித்து கி.மு. 814இல் கார்த்தேஜ் தோன்றிற்று. அரச வமிசத்துடன் தொடர்பும், அது தோன்றிய விதமும், அதன் பெயரின் பொருளும் கார்த்தேஜின் எதிர்காலம் புகழ் மிக்கதாய்த் திகழும் என்பதை எடுத்துக்காட்டின. டைரி, யுடிகா ஆகியவற்றின் தலைமையை கார்த்தேஜ் நீண்டகாலம் ஏற்ற தென்றால், அது அவற்றை எடுத்தெறிய காலம் கருதிக் காத்திருந்திருந்தது என்பதே பொருள். பிற்காலத்தில் கார்த்தேஜ் தன்னுடைய சுய பலத்தாலேயே வளர்ந்தது. பினீசியாவையும் கிழக்கு நாடுகளையும் கலக்கிய பேரழிவு இந்த சுய முயற்சிக்கு உறுதுணையாக அமைந்து விட்டது.

டைரி பாபிலோனிடமிருந்து நழுவிய போதிலும் பாரசீகத்தினிடம் சிக்கியது.

ஹெடி ஸ்லிம் புகழ் பெற்ற துனீசிய தொல் பொருளாய்வாளர். இவர் துனீசிய தொல்பொருளாய்வு தேசிய நிலையத் துணை இயக்குநர். துனீசியாவிலுள்ள ரோமானிய உறைவிடமாகிய எல் ஜெம்மில் தொல்பொருளாய்வை இயக்கிவருகின்றார். இவர் இவ்விடத்தில் நிகழும் அகழாய்வுகள் பற்றியும் துனீசியாவின் நாகரிகம் பற்றியும் பல கட்டுரைகள் எழுதியுள்ளார்.

சங்கம் 1969—இல் வெளியிட்ட ட்யூனீசிய வரலாற்றின் முதல் தொகுதியில் ‘‘ட்யூனீசியா: தோற்றம் முதல் ரோமானிய படையெடுப்பு வரை’’ எனும் பகுதியை எழுதினார்.

மத்தியதரைக்கடலில் தழைத்தோங்கிய வாணிகம்

இச்சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு கார்த்தேஜ் தனக்கென தலைநகர் ஒன்றை ஏற்படுத்திக் கொண்டது.

நடு நிலக்கடல் பகுதியின் உச்சநிலையில் வசதியான இடத்தைப் பிடித்த கார்த்தேஜ், டைரியின் கடல் வாணிக மரபைப் பின்பற்றி, தொடர்ச்சியாக சங்கிலிபோல் கடற்கரை முழுவதும் வாணிக நிலையங்களை ஏற்படுத்திற்று. இவ்வாறாக பினீசியர்கள் தென் நடுநிலக் கடல் பகுதியில் ஊடுருவ அது வழி செய்தது. மெல்ல மெல்ல எவரும் அஞ்சத்தக்க அளவுக்கு படை வலிமையைப் பெருக்கிக் கொண்டு உலகத்தின் தலைவிதியையே நிர்ணயிக்கும் அளவுக்கு அது உயர்ந்து விட்டது.

தனக்குக் கிடைத்த பெரிய பேரரசை சீர் அமைப்பதே கார்த்தேஜின் முதல் வேலையாயிற்று. மேற்கு பினீசிய நகரங்கள் தனது தலைமையை ஏற்கச் செய்வதில் கார்த்தேஜுக்குத் தொல்லை ஏற்படவில்லை. அந்நகரங்கள் பலவும் நடுநிலக் கடல் பகுதியில் காலூன்றத் துடிக்கும் மற்ற அரசுகளிடமிருந்து தலைநகரைக் காத்திட தமது சுதந்திரத்தையும் விட்டுக் கொடுத்தன.

சிசிலி பகுதியில் தன் ஆட்சியை சீரமைத்த பின் கார்த்தேஜின் அடுத்த நடவடிக்கை பேரரசின் எல்லைகளை விரிவாக்குவதாக அமைந்தது.

மோட்யாவிலிருந்து தளபதி மால்கஸ் தலைமையில் கார்த்தேஜின் பெரும் படையொன்று வடக்காகச் சென்று எரிக்ஸ் மலைப் பகுதியைப் பிடித்து, அங்குள்ள பழங்குடி மக்களை ஒடுக்கி, செஜெஸ்டா, பாலர்மோ, சொலண்டோ முதலான இடங்களை ஆக்கிரமித்தது. கிரேக்க சிசிலியின் எல்லையிலுள்ள ஹிமிரா, செலினஸ் பகுதி வரை இப்படை பீடுநடை போட்டது.

பிறகு கார்த்தேஜின் பார்வை சார்டினியா பக்கம் திரும்பிற்று. கி.மு. 6 நூற்றாண்டில் சார்டினியாவின் முக்கியமான நகரங்களான நோரர் தரோஸ், கராலிஸ் முதலியவை பிடிபட்டன. பின்னர் நாட்டை பிடிக்க இவை தளங்களாக பயன்பட்டன. இத் தீவில் பல நூற்றாண்டுகள் ஓங்கிய பியுனிக் பண்பாட்டின் சின்னங்களை இன்றும் காணலாம். இதே காலத்தில், கார்த்தேஜ் தெற்கில் தனது பிடியை உறுதிப்படுத்துவதில் முனைந்தது. மொராக்கோவிலுள்ள லைசஸ், ஸ்பெயினிலுள்ள கேடிஸ் (தற்போது காடிஸ்) ஆகிய நகரங்கள் பினீசியரிடம் முன்னரே சிக்கியிருந்தன. இவற்றுடன் பாலீரிக்ஸ் பகுதியிலுள்ள இபிட்ஜாவில் ஒரு புதிய குடியிருப்பும் ஏற்படுத்தப்பட்டது.

இவ்வாறு கி.மு. 6ஆம் நூற்றாண்டின் இறுதிக்குள், டிரிபோலிடானியா முதல் அட்லாண்டிக் வரையிலுள்ள வட ஆப்பிரிக்கப் பகுதியிலிருந்த எல்லா பினீசிய குடியிருப்புக்களும் கார்த்தேஜை பேரரசாக ஏற்றன. சிசிலி, சார்டினியா, ஸ்பெயின், பாலியாரித் தீவுகள் ஆகியனவும் கார்த்தேஜின் ஆட்சிக்குட்பட்டன.

பேரரசு அமைந்த காரணத்தால் கார்த்தேஜ் மேற்கு நடு நிலக்கடல் பகுதியில் செல்வம் கொழிக்கும் தன்னாட்சி பெற்ற நகரமாகத் திகழ்ந்தது. அப்போது வலிமை மிக்கதாகத் திகழ்ந்த எட்ருஸ்சான்சுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தால் அதன் ஆட்சி நிலைப்பட்டது. இவர்களுக்கு எதிராக பொது எதிரியாக கிரேக்க நாடு உருவானபோது இவ்வுறவு மேலும் நெருக்கமுற்றது.

கி.பி. 600இல் மாசிலாவை (மார்செலிஸ்) நிறுவிய போசியர்கள் விரைவில் அச்சுறுத்தும் அளவுக்கு படைபலம் பெருக்கிவிட்டனர். அந்நிலையில் வெள்ளிச் சுரங்கத்தலைவன் என்னும் புகழ் பெற்ற டார்டிசாஸ் மன்னனின் நன்மதிப்பைப்பெற்று ஸ்பெயினில் அண்டாலூசியா என்றழைக்கப்படும் பகுதியில் மற்றொரு போசிய குடியிருப்பு அமைக்கக் கருதினர். கார்சிகாவிலும் காலூன்றிக் கார்த்தேஜையே அச்சுறுத்தினர்.

பியூனிக் மற்றும் எட்ருஸ்கன் கடற்படைகள் இணைந்து கி.மு. 535இல் அலாலியாவில் (கார்சிகாவிலுள்ள அலேரியா) போரிட்டு போசியப் படைகளின் முன்னேற்றத்தைத் தடுத்தன. கார்சிகா, ஸ்பெயின் ஆகிய இடங்களிலிருந்து கிரேக்கர் வெளியேற்றப்பட்டனர். லயன்ஸ் வளைகுடா தவிர வேறு எதுவும் கிரேக்கரிடம் எஞ்சவில்லை. அது முதல் தமது பொதுவான பாதுகாப்பிற்காக கார்த்தேஜியரும், எட்ருஸ்கன்களும் வணிக இராணுவ ஒப்பந்தங்கள் செய்து கொண்டு ஒன்று பட்டிருந்தனர்.

என்றாலும் சிறிது காலத்தில் எட்ருரியா வீழ்ச்சியுறத் தொடங்கவே கார்த்தேஜியர் ரோம் நாட்டுடன் உடன்படிக்கை செய்து கொண்டனர். கி. மு. 509லேயே ஏற்பட்டது. உடன்படிக்கை செய்து கொண்டபோதிலும் தனது செல்வாக்குப் பகுதிகளில் ரோம் புகுவதை கார்த்தேஜ் விரும்பவில்லை. இது வருவதுரைக்கும் சகுனமாகப் போய் விட்டது. சில ஆண்டுகளுக்குள் பழங்கால வரலாற்றிலேயே மிகக்கொடிய போர் கார்த்தேஜியருக்கும் ரோமானியருக்கும் இடையில் மூண்டு விட்டது.

முதல் உடன்படிக்கை, ரோமானியர்களுக்கு சார்டினியா, சிசிலி ஆப்பிரிக்கா பகுதிகளில் வணிக உரிமைகள் வழங்கியபோதும், தொன்றுதொட்டு வளம் மிக்கப் பகுதிகளாகத் திகழும் மத்திய தெற்கு துனீசியக் கடற்கரைப் பகுதிகளைச் சுற்றிச்செல்ல ரோமானிய கப்பல்களுக்கு உரிமை வழங்கவில்லை. இரண்டாம் உடன்படிக்கையில், தவிர்க்க முடியாத சில சந்தர்ப்பங்களைத் தவிர, மற்ற நேரங்களில் ரோமானியர் சார்டினியா, ஆப்பிரிக்கா, அண்டாலூசியா பகுதிகளில் இறங்கவே கூடாது என்று சற்றுக் கடுமையான நிபந்தனைகளை கார்த்தேஜியர் விதித்தனர். இவ்வாறெல்லாம் இராணுவ, அரசியல் துறைகளில் கார்த்தேஜ் சிறிதும் விட்டுக் கொடுக்காமல் பேரரசின் எல்லைகளை விரிவாக்கவும், நிர்வாகத்தை உறுதிப்படுத்தவும் தொடர்ந்து முயன்று வந்தது.

கி.மு. 5ஆம் நூற்றாண்டில் உச்சநிலையிலிருந்த கிரேக்கப் பேரரசுடன் கார்த்தேஜ் மோத வேண்டியதாயிற்று. சிசிலிக்கு அருகிலுள்ள ஹிமிராவில் கி.மு. 480இல் கிரேக்கப் படைகள் பியூனிக் படைகளை படுதோல்வியுறச் செய்தன. இது கார்த்தேஜின் கடலாதிக்கத்தில் ஒரு திருப்பு முனையாக மாறிற்று. மத்திய தரைப் பகுதியில் கிரேக்கர் ஆதிக்கம் வலுக்க வலுக்க கார்த்தேஜியரின் வாழ்விலும் ஆடம்பரம் குறைந்து சுருக்கம் மிகுந்தது. அகழ்வாராய்ச்சியாளர்கள் இக்கால கார்த்தேஜிய கல்லறைகளில் காரின்தியன், மற்றும் அட்டிக்மட்கலங்கள், எகிப்திய கல்லறை ஆடம்பரப்பொருட்கள் முதலியன பெருமளவுக்குக் காணப்படாமையைக் கண்டு வியந்து குறிப்பிட்டுள்ளனர்.

ஒதுங்கி வாழ நேரிட்டதாலும், வாணிகம் குறைந்ததனாலும் கார்த்தேஜில் அத்தியாவசியப் பொருட்களுக்குக்கூடப் பற்றாக்குறை தோன்றிற்று. தனது பிரச்சினைகளைத் தீர்க்கவும் படையினர் கிரேக்கர்களையும் எதிர்க்குமளவுக்கு புதுவலி கூட்டவும் வட ஆப்பிரிக்க பின் நிலங்களைப் பிடிக்குமளவிற்கு (தற்போதைய பினீசிய எல்லைக்கு ஏறத்தாழ சமமான பகுதியை) பிடிக்க படைப் பெருக்கத்தில் கார்த்தேஜ் ஈடுபட்டது.

இம்முயற்சியில் பெற்ற வெற்றி கார்த்தேஜியர்களை ‘டைரியர் என்ற நிலையிலிருந்து ஆப்பிரிக்கர் என்ற நிலைக்கு’ மாற்றிற்று. அதே நேரத்தில் பியூனிக் பொருளாதாரத்திற்கு வேளாண்மைப் பொருட்களின் அளவற்ற உற்பத்தியினால் புத்துயிரளித்தும், புகழ்மிக்க மறவர் பலர் அடங்கிய படைக்குச் சிறப்புக் கூட்டியும், இவ்வெற்றி பலவகைகளிலும் பயன் மிக்கதாயிற்று. பண்டைப் பெருமை மிக்க பின்சியாவுக்கு இதனால் பியூனிக் நாகரிகத்தின் நன்மைகளும் வந்தடைந்தன. இன்றைய தேசிய பின்சியப் பண்பாட்டிலும் கார்த்தேஜின் செல்வாக்கைக் காணலாம்.

கிரேக்க நகரங்கள் முடிவற்ற உட்பூசல்களினால் தொடர்ந்து இழிந்து கொண்டே சென்ற அதே காலத்தில் பினீசியாவின் வளர்ச்சியினாலும், ஆப்பிரிக்காவில் புதிதாகத் தோன்றிய வியாபாரச் சந்தைகளினாலும், அலெக்ஸாண்டரின் வெற்றிக்குப் பிறகு தலைநிமிர்ந்த கிழக்கு அரசுகளுடன் செழித்து வளர்ந்த வியாபாரத்தினாலும், இவை அனைத்தையும் விட முன்னேறியே ஆகவேண்டும் என்ற சலியா முயற்சியினாலும் கார்த்தேஜ் தனது பழைய வலிமையைத் திரும்பப் பெற்றுவிட்டது.

நுண் முகமூடி

சவக் கழுத்தணிப் பதக்கமாகிய இந்நுண் முகமூடி கண்ணாடியில் (கி. மு. 3ஆம் நூற்றாண்டில்) செய்யப் பெற்றது. இதன் அளவு 2·5x3 செ. மீ. இறந்தோரை தீய ஆவிகளிடமிருந்து காப்பதற்காக கல்லறைகளில் வைக்கப்பெற்ற பல வண்ண முகமூடிகளை நுண்ணிய அளவில் கண்ணாடியில் செய்வதில் கார்த்தேஜியக் கைவினைஞர்கள் வல்லுநர்களாக விளங்கினர்.

Bardo Museum, Tunis
Photo Luc Joubert © Archaeologia viva

தொல்பெரும் கப்பற்படை

தான் இழந்ததனைத்தையும் திரும்பப் பெற கார்த்தேஜ் கிடைத்த வாய்ப்புக்கள் அனைத்தையும் பயன்படுத்திக் கொண்டது. சைரகாஸின் கொடுங்கோலன் அகதோகிளிஸ், பியூனிக் படைகளை தனது நகரக் கோட்டைக்குள்ளிருந்தவாறே போரிட்டுத் தடுத்து நிறுத்த முயன்று படுதோல்வியடைந்தான். இழந்துவிட்ட கிரேக்கப் பண்பாட்டின் காவலனாக தன்னைக் கருதிக் கொண்ட இபிரஸ் நாட்டுமன்னன் பைரஸ் சிசிலியிலுள்ள கிரேக்க நகரங்களின் உதவிக்கு விரைந்தான். ஆயினும் அவன் தோற்றான். கார்த்தேஜ், தீவு முழுவதையும் தன் செல்வாக்குக்கு உட்படுத்தியது. இன்னும் சிறிது முயன்றிருந்தால் கி. மு. 3ஆம் நூற்றாண்டுக்கும் முன்னரே கார்த்தேஜ் மெசீனாவையும் பிடித்திருக்கக் கூடும். ஆனால் அதன் மனம் நீண்டகாலம் ஊசலாடி கி.மு. 269இல் அது மெசீனாவை முற்றுகையிட்ட பொழுது, அதற்குள் பெரிய நடுநிலக்கடல் பகுதி வல்லரசாக வளர்ந்துவிட்ட ரோமாபுரியுடன் நேருக்கு நேர் மோதவேண்டியதாயிற்று. மூன்று நிலைகளில் இந்த மோதல் மிகக்கொடிய போராக மாறி, பழங்காலப் போர்களுடன் ஒப்பு நோக்கும்பொழுது உலகப் பெரும்போர் என்று சொல்லத்தக்க அளவிற்கு வளர்ந்துவிட்டது.

முதலாம் பியூனிக் போருக்கும் இரண்டாம் பியூனிக் போருக்கும் இடைப்பட்ட காலத்தில் கார்த்தேஜ் நடுநிலக்கடல் பகுதி வல்லரசாகும் முயற்சியில் இறுதிக் கட்டம் தோன்றிற்று எனலாம். முதலாவது போரில் தோற்றபோது சிசிலியிலிருந்து கார்த்தேஜ் வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதற்கும் முன்னரே கார்த்தேஜ் வேறு சில காரணங்களால் வலிவிழந்து வந்தது. கார்த்தேஜை ஆண்டு வந்த வகுப்பினர் தன்னலம் மிக்கோராயும் புரட்சிகரமான மாறுதல்களை எதிர்ப்போராயும் இருந்தனர். ஹமீல்கார் பர்கா என்னும் பெயர் கொண்ட கார்த்தேஜிய தளபதி ஒருவர் தோல்விகளிலிருந்து படிப்பினை பெற்று தம் நாட்டைப் பற்றியுள்ள நோய்களை நீக்க முயன்றார். இவருடைய முயற்சியாலேயே தொடர்ந்து கார்த்தேஜியப் பேரரசு நடுநிலைக்கடல் பகுதியில் பரவிற்று எனலாம். இவருடைய செயல்முறைகள் கார்த்தேஜியரின் அரசுக் கொள்கைகளை நோக்க புரட்சிகரமானவையே ஹெலனிய மன்னர்களின் முறைகளை இவர் கையாண்டார். அரசின் அதிகாரத்தையும், இராணுவ பலத்தையும் இவர் ஒருங்கிணைக்க விரும்பினார். அதே நேரத்தில் கார்த்தேஜியர் முடியாட்சியை விரும்பமாட்டார்கள் என்பதை நன்கறிந்து ஹமீல்கார் ஸ்பெயினில் தனது அரசை நிறுவ முடிவு செய்தார். பினீசியர்களும், கார்த்தேஜியரும் முன்னரே ஸ்பெயினில் வேண்டிய அளவுக்கு வளம் பறித்தமையாலும் ரோமாபுரிக்கும், கார்த்தேஜுக்கும் அது தொலைவிலிருந்தமையாலும் அவர்கள் தன் நாட்டை சந்தேகக்கண்களுடன் பார்க்கமாட்டார்கள் என்று ஹமீல்கார் சரியாக எடை போட்டார். போர்க்காலங்களில் பிற இடங்களுடன் கார்த்தேஜ் துண்டிக்கப்பட்டபோதும் அதன் பொருளாதாரம் நலிவடையாமல் பாதுகாக்க இவ்வரசு உதவி செய்ய முடியும் என்று அவர் கருதினார்.

தன்னிடமுள்ள ஆயுதங்களைக் கொண்டும், படைகளைக்கொண்டும் ஸ்பெயினில் இராணுவ — முடியாட்சியை நிறுவ முடியும் என்று ஹமீல்கார் உணர்ந்தார். உடனடியாகப் படையெடுத்துச் சென்று ஸ்பெயின் ஒருபகுதியை தனதாக்கிக் கொண்டார். அலெக்ஸாண்டர் முதலானோரைப் பின்பற்றியும், இராணுவ ஆட்சியை நம்பியும், யாரும் எதிர்த்து வெல்ல முடியாதவர் என்று தன்னைப்பற்றி வீரக்கதைகளை உலவவிட்டும், அவர் வென்று நின்றார். அதே நேரத்தில் அவர் தன்னை எதிர்த்துத் தோற்ற படைகளையும் தன்னுடன் சேர்த்துக்கொண்டு ஆங்காங்கு வாழ்ந்த பழங்குடிகளுடன் கலப்புத் திருமணங்களை ஆதரித்து வந்தார். அவருக்குப் பின் வந்த ஹஸ்ட்ருபல் அவர் வழிபற்றி நின்று கார்த்தேஜினா என்னும் புதுத்தலைநகரை நிறுவினார். அங்கு ஓர் அரண்மனையைக்கட்டி தனக்கு அரசன் என்ற பட்டத்தையும் சூட்டிக்கொண்டார். இதனால் 'ஒரே ஒரு புதிய டைரி' என்ற பட்டத்தை கார்த்தேஜ் இழந்துவிட்டது.

பியூனிக் உலகம் ஸ்பெயினை வென்றதனால் பெருநன்மை அடைந்தது. இருபதே ஆண்டுகளுக்குள் ஹமீல்கார், ஹஸ்ட்ரூபல், ஹானிபல் ஆகியோர் (அனைவரும் பாரிசைட் குடும்பத்தினர்) தமது கஜானாக்களில் பொருள் குவித்தனர். இழந்தவற்றையெல்லாம் மீட்டு பொருளாதாரத்தைப் புதுப்பித்து படைவலிமையை பன்மடங்கு பெருக்கிக் கொண்டனர் கார்த்தேஜியர். இன்னும் எவ்வளவோ பிடிக்க முடியும் என்ற வாய்ப்பு கார்த்தேஜின் கண்முன் நிழலாடிக்கொண்டிருந்தது. இதன் விளைவாக ஏற்படக்கூடிய அபாயங்களை நன்குணர்ந்து ரோமப்பேரரசு கார்த்தேஜின்மீது உடனடியாகப் போர் தொடுத்தது.

கி. மு. 202இல் ஆப்பிரிக்க மண்ணில் ஹனிபால் அடைந்த தோல்வி நடுநிலக் கடல் பகுதியில் கார்த்தேஜுக்கு இருந்த கொஞ்சநஞ்ச செல்வாக்கையும் அழித்துவிட்டதெனலாம். இதற்குப் பின். கி.மு. 146-இல் அது அழியும் நாள்வரை, அந்நகரத்திற்கு தனது உள்விவகாரங்களில் தன்னாட்சி உரிமையே கிடைக்கவில்லை எனலாம்.

பேரரசின் அமைப்பிற்கும், நீண்ட வாழ்விற்கும் உறுதுணையாக அமைந்தது அதன் கடற்படையே.

பியூனிக் கடற்படையில் கனமான வட்டவடிவ கப்பல்கள் பொருட்களைச் சுமக்கவும், ஒரேதளம் கொண்ட நீண்ட குறுகிய விரைவு கப்பல்கள், எதிரியைச் சுற்றித் தாக்கவும் பயன் படுத்தப்பட்டன. இவை எல்லா திசைகளிலும் மிக எளிதில் சென்றன. அவற்றில் துடுப்பு போட்டவர் கூட நிபுணர்களே. ஏதேனும் ஒரு கப்பலை எதிரி பலமாக தாக்க முற்பட்டால் அது ஆபத்திற்குள்ளாகாமல் எளிதில் பின்னடைந்தது. எடை குறைந்தனவாய் இவை இருந்தமையால் இவ்வாறு ஆழ்கடலில் மீன் குஞ்சு போல் செல்வது இவற்றுக்குச் சுலபமாக இருந்தன. எதிரிக் கப்பல் துரத்துமேயானால் அவை சடக்கெனத் திரும்பி பக்கவாட்டில் பலமாகத்தாக்கின. இத்தகைய ஓரடுக்குக் கப்பல்களையே அவர்கள் போரில் பயன்படுத்தினர். வியாபாரக் கப்பல்கள் பெரும்பாலும் ஊர்ந்து செல்லும் தோணிகளாகவே இருந்தன.

கார்த்தேஜியக் கடற்படையிலிருந்த பல்லாயிரக்கணக்கான கப்பல்கள் கைத்திறனும், அனுபவமும் மிக்க தொழிலாளர்களால் கட்டப்பட்டவை. அவர்களின் துறைமுகங்கள் பண்டைய உலகில் புகழ்பெற்றவை. திசை காட்டும் கருவி இல்லையென்ற போதிலும் கார்த்தேஜிய மாலுமிகள் தமது கடல் அறிவால் மிகச் சரியான பாதையில் கலங்களைச் செலுத்தினர். போர்க்காலங்களில் அரசு வியாபாரக் கப்பல்களை தமதாக ஏற்று படைகளையும் பொருட்களையும் எடுத்துச் செல்லப் பயன்படுத்தின. அமைதிக் காலங்களில் கடற்படை கப்பல்கள் வியாபாரக் கப்பல்களை கடற்கொள்ளைக்காரர்கள் அணுகாவண்ணம் பார்த்துக்கொண்டன. அத்துடன் கார்த்தேஜின் வாணிகச் சந்தைகளை வேற்று நாட்டுக் கப்பல்கள் அணுகாவண்ணமும் செயல்பட்டன. கார்த்தேஜுக்கும் முன்பாகவே கடற்செலவு, புதிய இடங்களைக் கண்டுபிடித்தல் ஆகிய துறைகளில் பலர் ஈடுபாடு கொண்டிருந்தனர். 26-வது வமிசத்து பாரோ மன்னனான நிகோ கேட்டுக்கொண்டதன் பேரில், பினீசியர்கள் கடல் வழியாக ஆப்பிரிக்காவைச் சுற்றி வந்து புகழ் பெற்றனர். செங்கடலிலிருந்து புறப்பட்டு தற்போது நாம் நன்னம்பிக்கை முனை (அல்லது ஹெர்குலிஸின் தூண்கள்) என்று அழைக்கும் முனையைச் சுற்றிக் கொண்டு ஜிப்ரால்டர் ஜலசந்தி வழியாக அவர்கள் எகிப்துக்குத் திரும்பினர். அட்லாண்டிக் கடல் மார்க்கமாக கி. மு. 5ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற இருகடற் பயணங்களைத் தவிர வேறு எதுவும் கார்த்தேஜியர் வரலாற்றில் காணமுடியவில்லை. கிரேக்க பரம்பரையில் "ஹனோ" என்பவர் தலைமையில் நடைபெற்ற முதல் கப்பல் பயணம் பற்றிய குறிப்புகள் உள்ளன. இது மொராக்கோ கடற்கரைப் பகுதியிலுள்ள பியூனிக் நகரங்களின் பாதுகாப்பைப் பலப்படுத்

கார்த்தேஜின்
கண்ணாடிக் கைவினைஞர்

பண்டைய கார்த்தேஜில் "பேரளவில் செய்யப்பெற்ற" கண்ணாடித் தாயத்து முகமூடிகளுக்கு மூன்று எடுத்துக்காட்டுகள். இந்நுண் பதக்கங்களில் வெள்ளை, கருநீலம், மஞ்சள் ஆகிய நிறங்கள் சிறப்பாகக் காணப்படுகின்றன. சிரியாவின் கலைத்தோற்றமுள்ள முகமூடி (மேலே) மிகத் தொன்மையானது. இது வெள்ளை, பழுப்பு வண்ணங்களுடையது; கி. மு. 4ஆம் நூற்றாண்டின் இறுதியைச் சேர்ந்தது. மேல் பரப்பை சொரசொரப்பாக்கித் தாடியமைத்துள்ளனர். ஆனால் பல முகமூடிகளில் அழகிய சுருள் வளையங்கள் தாடையைச் சூழ்ந்துள்ளன. கார்த்தேஜின் கண்ணாடிக் கைவினைஞர் முத்துக்களினாலும் நுண்ணிய வாசனைப்பொருள் குவளைகளையும், எழில் பொருள்களையும் அணிகலன்களையும் திறமையுடன் செய்தனர்.

Bardo Museum, Tunis
Photo Luc Joubert © Archaeologia viva

கப்பலோட்டி ஹனோவின் வீரப்பயணம்

பினிசியா, கார்த்தேஜியக் கப்பலோட்டிகளின் பயணங்களைப் பற்றிய சான்றேடுகள் மிகச் சிலவே கிடைத்துள. அவற்றுள் ஜிப்ரால்டர் ஜலசந்தியை கடந்து அட்லாண்டிக்கில் ஆ:ப்ரிக்காவின் மேற்கு கரை வரை சென்ற கார்த்தேஜ் மன்னன் ஹனோவின் கடற்பயணமே புகழ் மிக்கதாகும். இவ் வீரப் பயணத்தின் விவரங்கள் கார்த்தேஜில் குரோனாஸ் கோயிலில் செதுக்கப் பட்டிருந்த குறிப்புக்களின் கிரேக்க மொழி பெயர்ப்பிலிருந்து (கி.மு. 3 ஆம் நூற்றாண்டு) கிடைக்கப் பெற்றவை. பிளினி "கார்த்தேஜின் ஆற்றல் உச்ச நிலையில் இருந்தபோது" இப் பயணம் நடைபெற்றதாக குறிப்பிடுகிறார். கீழே : ஹனோவின் வீரப்பயணம் பற்றி அவரே கூறுவது போன்ற விளக்கம்.

இப்படத்தில் காணப்படும் வழிகள் பண்டைய நூல்கள், புதை பொருள்கள் ஆகியவற்றின் அடிப்படையில் தாம் கணிச்கப்பட்டுள்ளன.

.........கி. மு. 3000

ட்ராய்க்கும் கிரீட்டுக்கும் இடையே பொன்வழி; பிப்லாஸி லிருந்து நைல் வரை செவ்வகில் வழி; பாரசீக வளைகுடா வழியாக இந்தியாவுக்கு இன்ப நுகர்வுப்பொருள் வழி; (மெசொபோடேமிய உலோகம், இந்திய தந்தம் போன்றவை); செங்கடல் வழியாக எகிப்து, அரேபியா, சொமாலியாவிற்கிடையே வாசனைப் பொருள் வழி.

.........கி. மு. 2000

.........கி. மு. 400 வரை

கிரீஸிலிருந்து வெளிச்செல்லும் வழிகள்; ஹோமரின் காவிய வீரர்கள் ட்ராய்க்குச் சென்ற வழி; யுலிஸஸ் சிசிலிக் சென்ற வழி; கார்சிக்கா, மார்சேல், ஸ்பெயின், ஜிப்ரால்டர், வட ஐரோப்பா ஆகியவற்றிற்கு கிரேக்கர்கள் சென்ற வழி; ஏட்ரியாட்டிக் வழியாகச் செல்லும் அம்பர் கிளை வழி.

+ + + + + **ஹானோயின் பயணம்**

கார்த்தேஜியரான ஹானோ (கி. மு. 5ஆம் நூற்றாண்டில்) ஜிப்ரால்டர் ஜலசந்தி வழியாக ஆப்பிரிக்காவின் மேற்கு கரைச்குச் சென்ற வழி.

கி. மு. 3ஆம் நூற்றாண்டு

○ ○ ○ ○ ○ **கி. பி. 2 ஆம் நூற்றாண்டு வரை**

மத்திய தரைக் கடலின் நடுப்பகுதியின் புதிய கடல் வழிகள்; கார்த்தேஜிலிருந்து, சிசிலி, சார்டீனியா, கார்சிக்கா, பலியாரிக் தீவுகள், ஜிப்ரால்டர், அட்லாண்டிக்கடற்கரை ஆகியவற்றிற்குச் செல்லும் மேற்கு வழிகள்.

ஹனோ ஜிப்ரால்டர் பாறைகளைக் கடந்து சென்று கார்த்தேஜின் நகர்களை அமைக்க வேண்டுமெனக் கார்த்தேஜியர்கள் தீர்மானித்தனர். அவர் 30,000 பேர்களுடனும் தேவையான பொருள்களுடனும் 60 கப்பல்களைத் திரட்டிச் சென்றார்.

நாங்கள் ஜிப்ரால்டரைக் கடந்து இரு நாட்கள் பயணம் செய்தபிறகு முதல் நகரை நிறுவி அதற்கு தைமெட்டீரியன் எனப் பெயரிட்டோம். அதைச் சுற்றி பரந்த சமவெளி இருந்தது.

பிறகு மேற்கு திசையில் சென்று மரங்கள் அடர்ந்த சோலாயிஸ் எனும் லிபிய முனைக்கோடியை அடைந்தோம். அங்கு போசிடானுக்கு கோயில் அமைத்து கீழ்த்திசையை நோக்கி அரை நாள் பயணம் செய்து நாணல் செறிந்த கடற்கழியை அடைந்தோம். யானைகளும் பிற பல விலங்குகளும் அவற்றை உண்டு கொண்டிருந்தன. அங்கிருந்து புறப்பட்டு இன்னொரு நாள் பயணம் செய்து காரியன்வால், கிட், அக்ரா, மெலிட்டா, அராம்பிஸ் ஆகிய கடற்கரை நகர்களை நிறுவினோம்.

பிறகு லிபியாவிலிருந்து வரும் லிக்சாஸ் ஆற்றை அடைந்தோம். அதன் கரைகளில் நாடோடிகள் மந்தைகளை மேய்த்துக் கொண்டிருந்தனர். நாங்கள் அவர்களுடன் சில நாள் தங்கிப் பழகினோம். சற்று தொலைவில் பிறருடன் பழகாத எத்தியோப்பியர் வாழ்ந்தனர். அங்கு வன விலங்குகளும் மலைகளும் மிகுதி. அம்மலைகளில் தான் லிக்சாஸ் உற்பத்தியாகிறது என்றும் குதிரைகளை விட வேகமாக ஓடுவதாக கருதப்படும் ட்ராக்லோடைட்டுகள் வாழ்வதாகவும் அவர்கள் கருதுகின்றனர்.

அந்நாடோடிகள் சிலரை அழைத்துக் கொண்டு பாலை நிலத்தின் ஓரமாகவே தெற்கு திசையில் இரு நாட்களும், கீழ்த்திசையில் ஒரு நாளும் பயணம் செய்தோம். ஒரு கடற்கழியின் கோடியில் ஒரு சிறு தீவைக் கண்டோம். அதற்கு சௌர்ன் எனப் பெயரிட்டு ஒரு சிலரை அங்கு குடியேற்றினோம். அது கார்த்தேஜுக்கு எதிர்ப்புறத்தில் இருக்க வேண்டுமென ஊகித்தோம். ஏனெனில் கார்த்தேஜிலிருந்து ஜிப்ரால்டருக்கு சென்ற தூரமே, ஜிப்ரால்டரிலிருந்து சௌர்னுக்கும் செல்ல வேண்டியிருந்தது.

அங்கிருந்து க்ரெட்டீஸ் ஆற்றில் பயணம் செய்து சௌர்னைவிட பெரிய 3 தீவுகளுள்ள ஓர் ஏரியை அடைந்தோம். அவற்றைக் கடந்து ஒரு நாள் பயணம் செய்து மலை சூழ்ந்த ஏரிக் கரைக்கு வந்தோம். அங்கு விலங்குத்தோல் அணிந்த காட்டுமிராண்டிகள் கற்களை வீசி எங்களைக் கரை இறங்காதவாறு தடுத்தனர். ஆகவே அகலமான வேறொரு ஆற்றை அடைந்தோம். அதில் முதலைகளும், நீர் யானைகளும் மிகுதியாக இருந்தன. அங்கிருந்து சௌர்னுக்குத் திரும்பினோம்.

தவும் புதிய குடியிருப்புக்களை அமைக்கவும் மேற்கொள்ளப்பட்டது. இரண்டாவது பயணம் ஆப்பிரிக்கக் கரையிலுள்ள பகுதிகளை கண்டுபிடிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது. ஹனோவின் கடற்பயணம் பற்றியும் அவர்தாம் சென்றதாகக் குறிப்பிட்டுள்ள இடங்களை நிறுவுவதிலும் கருத்து வேறுபாடுகள் மலிந்துள்ளன. பெரும்பாலானவர் "கடவுளரின் தேர்" என்று அவர் குறிப்பிட்டுள்ளது மவுண்ட் சாமெரோன் என்றும் அவர் தொட்டுத் திரும்பிய கடைசி இடம் கினி வளைகுடா என்றும் கருதுகின்றனர். வரலாற்று அறிஞர் சிலர் அவர் அத்துணை தொலைவு சென்று திரும்பினார் என்பதை ஒப்பினாரில்லை. இவ்வாறு அவர் சென்ற இடங்களைக் கண்டறிவதில் உள்ள சிக்கல்களை நோக்கும்போது சிலர் ஹனோ வேண்டுமென்றே தான் சென்ற இடங்களை மறைத்து எழுதியிருக்கக் கூடும் என்றும் பொன் வாணிகத்திற்கு வழிகாட்டும் வகையில் அவை அமைந்துள்ளமையால் அவர் அவ்வாறு எழுதியிருக்கக்கூடும் என்றும் கருதுகின்றனர். ஹிமில்கோவின் தலைமையில் சென்ற இரண்டாம் பயணக் குழு பற்றி நமக்கு முதல் குழுவைப் பற்றி தெரிந்ததைவிடக் குறைவாகவே தெரிகிறது. நமக்குத் தெரிந்ததெல்லாம் அவர் மேற்கு ஐரோப்பாவின் அட்லாண்டிக் கடற்கரையில் வெள்ளி, வெள்ளீயம் ஆகியவற்றைக் காணப்புறப்பட்டு பிரிட்டிஷ் தீவுகளை அடைந்தார் என்பதேயாகும்.

இவ்வாறான கடற்பயணங்களால் 'கடல்வாணிகர்' என்று புகழ் பெற்ற கார்த்தேஜியர் தமது வாணிபத்தை மேலும் பெருக்க முயன்றனர். அட்லாண்டிக் பகுதி போக்குவரத்தில் தன்னிகரில்லாமல் அவர்கள் நீண்டகாலம் இரு திசைகளில் முன்னோடிகளாகத் திகழ்ந்தனர். முதலாவதாக ஆஃப்ரிக்க கடற்கரைக்கும் இரண்டாவதாக ஐரோப்பியக் கடற்கரைக்கும்—அதிலும் குறிப்பாக பிரிட்டனி, இங்கிலாந்து, அயர்லாந்து ஆகியவற்றுக்கும் சென்றனர். ஹிமில்டனும், கார்த்தேஜிய வணிகரும் வெள்ளி, வெள்ளீயம் ஆகியவற்றைக் கண்டுபிடிப்பதற்காகவே இத்தொலை தூரப் பகுதிகளுக்கெல்லாம் சென்றனர்.

இருப்பினும், மத்திய தரைக்கடல் நாடுகளுடனும் குறிப்பாக கிரேக்க நாட்டுடன் கார்த்தேஜ் இடையறாத் தொடர்பு கொண்டிருந்தது. கி. மு. 4, 5 நூற்றாண்டுகளில் வணிகத் தொடர்பு முற்றிலும் முறிந்துபோன போதிலும் பிற்காலத்தில் அலெக்ஸாண்டரின் வெற்றிச் சுற்றுலாவுக்குப் பிறகு மீண்டும் தொடங்கப்பட்டு செழித்து நிலைத்தது. அலெக்ஸாண்டரிய காலத்துப் பொருட்களும், ரோட்ஸ்



Map by Willem van Malsen © Archives Robert Laffont, Paris

பிறகு எத்தியோப்பியர் வாழ்ந்த கரையோரமாக தெற்கு நோக்கிச் சென்றோம். அவர்கள் எங்களைக் கண்டு ஓடினர். எங்களுடன் வந்த நாடோடிகளுக்குக் கூட அவர்களது மொழி விளங்கவில்லை. இறுதியில் பல வண்ணமுள்ள நன் மணம் கமழும் மரங்கள் அடர்ந்துள்ள உயர்மலைகளின் அருகில் இறங்கினோம். இம்மலைகளைச் சுற்றி 2 நாட்கள் பயணம் செய்து, விரிகுடாவை அடைந்தோம். அதற் கப்பால் சமவெளி இருந்தது. அங்கு இரவில் எப்புறமும் இடையிடையே தீ மூண்டதைக் கண்டோம்.

நீரைச் சேகரித்துக்கொண்டு கரையோரமாக 5 நாட்கள் பயணத்தை தொடர்ந்தோம். அதற்குப்பின் ஒரு பெரிய கடற்கழிக்கு வந்தோம். அதை நாடோடிகள் 'மேற்கின் கொம்பு' என்று அழைத்தனர். இவ்வளைகுடாவில் பெரிய தீவு ஒன்று இருந்தது. அத்தீவில் மற்றொரு தீவுள்ள கடற் கழி இருந்தது. அங்கு இறங்கினோம். பகலில் எங்கும் காடுகளே தோன்றின. இரவில் பல இடங்களில் தீ தோன்றியது. குழலோசையும் முரசுகளின் பேரொலியும் கேட்டன. நாங்கள் அஞ்சவே எங்களுடன் வந்த நிமித்திகர்கள் எங்களை புறப்படுமாறு கூறினர். நாங்கள் விரைவில் புறப்பட்டு நன் மணம் கமழும் எரி நிலத்தின் ஓரமாகப் பயணம் செய்தோம். அங்கு தீப் பிழம்புகள் எழுந்து கடலில் மூழ்கின. வெப்பத்தின் காரணமாக கரை இறங்க முடியவில்லை. நாங்கள் அஞ்சி ஓடினோம். 4 நாள் பயணத்தில் இரவில் அந்நிலம் முழுவதும் தீ பரவியிருப்பதை கண்டோம். அதன் நடுவில் உயர்ந்த தீப் பிழம்பு வானைத் தொடுவது போல் கொழுந்து விட்டு எரிந்தது. அது கடவுளரின் தேர் என்று அழைக்கப் பெற்ற உயர்ந்த மலையென பகலில் கண்டோம்.

அக்கரையோரமாகவே 3 நாள் பயணம் செய்து 'தெற்கு கொம்பு' எனப்படும் வளைகுடாவை அடைந்தோம். அதன் கோடியில் ஒரு தீவு இருந்தது. அங்கு காட்டுமிராண்டிகள் இருந்தனர். அவர்களில் பெரும்பாலோர் பெண்கள். அவர்களது உடலில் முடி வளர்ந்திருந்தது. நாடோடிகள் அவர்களைக் கொரில்லாக்கள் என்று அழைத்தனர்.

நாங்கள் ஆண்களைத் துரத்திச் சென்றோம். ஆனால் ஒருவரையும் பிடிக்க முடியவில்லை, ஏனெனில் அவர்கள் மரமேறி எங்களை வன்மையாகத் தாக்கினர். ஆயினும் 3 பெண்களைப் பிடித்துக் கொண்டோம். அவர்கள் தம்மைப் பிடித்தவரிடமிருந்து விடுபட அவர்களைக் கடித்துக் கிழித்தனர். ஆகவே அப்பெண்களை நாங்கள் கொன்று, கார்த்தேஜுக்கு எடுத்துச் செல்வதற்காக அவர்களது தோலை உரித்தோம். உணவுப் பொருள் குறைந்துவிட்டபடியால் நாங்கள் தொடர்ந்து பயணம் செய்ய முடியவில்லை.

தீவின் பொருட்களும், பியூனிக் கல்லறைகளில் காணப்படுவதே இதற்குச் சான்று.

கம்பானியா, எட்ருரியா, ஸ்பெயின், சிசிலி, டிலோஸ் முதலான பகுதிகளுடன் சீராக வாணிகம் நடைபெற்றது. மூலப் பொருட்கள், ஆயுதங்கள், கலங்கள், வேளாண்மைப் பொருட்கள் முதலியவைகளில் கார்த்தேஜுக்கும், முற்குறிப்பிட்ட நாடுகளுக்கும் கொடுக்கல் வாங்கல் இருந்து வந்தது. கார்த்தேஜின் செல்வச் செழிப்புக்கு அதன் வாணிகமே தலையாய காரணம். இதனால் அரசு சில பிரத்தியேக வாணிகச் சந்தைகளுக்கு தனது கப்பல்கள் சென்றுவரும் வழிகளையும் ஆங்காங்கு அவை தங்கிச்செல்லும் இடங்களைப் பற்றியும் உண்மைகளை மறைத்தே வைத்தது. முன்னர் குறிப்பிட்டவாறு கார்த்தேஜ் தனது வாணிக இரகசியங்கள் வெளிப்படாமலிருக்க இராணுவ நடவடிக்கையும் எடுத்ததுண்டு. தம்மைத் தொடர்பவர்களை மிரட்ட கார்த்தேஜிய மாலுமிகள் தங்கள் கடல் வழிகளைப் பற்றி பயங்கரமான வதந்திகளைக் கிளப்பி விடுவதுமுண்டு. இவ்வாறெல்லாம் தமது ஏகபோக உரிமையைக் காத்துக்கொண்டனர் கார்த்தேஜியர்.

இந்தக் கண்காணிப்புக்கு கார்த்தேஜியக் காவியங்களிலேயே சிறந்த எடுத்துக்காட்டு ஒன்று உள்ளது. ஒரு கார்த்தேஜிய வாணிகக் கப்பலை ரோம் நாட்டுக் கப்பலொன்று விடாது பின் தொடர்ந்து வந்ததாம். பின் தொடர்பவர்கள் எப்பாடு பட்டாவது தம் வாணிகச் சந்தையை அறியாமல் செய்துவிட வேண்டும் என்ற நினைப்பில் தனது கப்பலையே தரை தட்டச் செய்து விட்டானாம் கார்த்தேஜியக் கப்பல் தலைவன்!

அட்லாண்டிக் மற்றும் நடு நிலைக்கடல் பகுதியில் பல குடியேற்றத் தீவுகளைக் கொண்டு அமைந்த கார்த்தேஜியப் பேரரசு முன்கூறியவாறு பண்டைய உலகத்தின் போக்கையே பெருமளவிற்குக் கட்டுப்படுத்திற்று என்றால் மிகையாகாது. வட ஆஃப்ரிக்கா மற்றும் பிற இடங்களிலிருந்த பியூனிக் நகரங்கள், நடுநிலக்கடல் பகுதி பண்பாடுகள் கலக்கும் இடங்களாகப் பயன்பட்டன. கார்த்தேஜிய வியாபாரிகள் கிழக்கு மேற்கு பகுதிகளிலுள்ள ஊர்களில் இத்தகைய பண்பாட்டு பரிமாற்றங்களுக்குப் பெருந்துணை நல்கினர்.

தொலை கிழக்கு, ஆஃப்ரிக்கா, நடுநிலக்கடல் பகுதி ஆகியவற்றின் மரபுகளைக் கொண்டு வளர்ந்த பழம்பெரும் நகரமான கார்த்தேஜ், பண்டைய உலகில் மிகச்சிறந்த நாகரிகத்தின் தாயகமாகத் திகழ்ந்தது. அதன் தொண்டு பல காலம் குறைத்து மதிப்பிடப்பட்டு வந்ததெனினும் தற்போது அகழ்வாராய்ச்சித்

Photo Luc Joubert © Archaeologia Viva

பண்டைய உலகில் கார்த்தேஜ் வாணிக, பண்பாட்டுப் பொருள்களை ஏற்றுமதி, இறக்குமதி செய்யும் மைய மாக விளங்கியது. இடப்புறம்: தீக்கோழி முட்டை ஓட்டில் வரையப்பெற்ற முக மூடி. இறந்தோரைக் காப்பதற்கான இத்தகைய முகமூடிகள் பல சிசிலி, சார்டீனியா ஸ்பெயின் நாடுகளில் கார்த்தேஜியரின் கல்லறைகளில் கண்டு எடுக்கப்பட்டுள்ளன. கீழே இடப்புறம் கார்த்தேஜ் கலைத் தொடர் புள்ள ஐபீரியச் சிலை. இது கி. மு. 3ஆம் நூற்றுண்டைச் சேர்ந்தது. (பிராடோ பொருட்காட்சிமனை, மாட்ரிட்.) ஸ்பெயினில் கண்டெடுக்கப்பெற்ற இடத்தின் பெயரால் ‘எல்ஷ் சீமாட்டி’ என்று அழைக்கப் படுகிறது. நடுப் படமும் வலப்புறப் படமும் : துனீசியாவில் கார்த்தேஜியர் வாழ்ந்த பகுதிகளிலுள்ள இரு மண் சிலைகள் : கி. மு. 6ஆம் நூற்றுண்டின் எகிப்து - கார்த்தேஜிய ஸ்பிங்சும் அதே காலத்திய அயோனியக் கலை சார்ந்த தாய் கடவுளும். இவை இறக்குமதி செய்யப்பட்டவை அல்லது கார்த்தேஜ் கலைஞரால் பார்த்துச் செய்யப்பட்டவையாக இருக்கலாம். கார்த்தேஜ் தேசியப் (பொருட்காட்சி).

Photo © Roger-Viollet, Paris

துறையின் முன்னேற்றத்தினுலும் வரலாற்று ஆராய்ச்சிகளாலும் மெல்லமெல்ல அறிந்து போற்றப்பட்டு வருகிறது.

கி. மு. 146இல் ரோமானிய தளபதி சிபியோ அமிலியானஸ் என்பாருக்கு கார்த்தேஜை அழிக்கக் கட்டளையிட்ட போது அத்தளபதியின் கண்களில் நீர் பெருக்கெடுத்ததாம். அவன் வாய் திறந்து ஹோமரின் புகழ் பெற்ற கவிதையைப் பாடினுனும்.

பண்டைய கார்த்தேஜின் சின்னங்களாக இன்று எஞ்சியிருப்பவை மிகச் சிலவே தான். இன்று அவை அமைதியும் சாந்தமும் தவழும் ஒரு மாவட்டத்தின் அழகுச் சின்னங்களாகக் காட்சியளிக்கின்றன.

துனீஸ் வளைகுடாவில் கடலை எட்டிப் பார்ப்பது போல் அமைந்துள்ள ஒரு நிலப்பகுதி பூங்காக்கள் நிறைந்தது. வெள்ளை அடிக்கப்பட்ட வீடுகள் இங்குமங்குமாக காணப்படும் இவ்விடம் உலகின் இயற்கை அழகு மிக்க பகுதிகளில் ஒன்ருகும். இதன் அடிவாரத்தில் துனீஸ் துறைமுகங்களின் சின்னங்கள் உள்ளன. அவற்றுள் சிறிய தீவுபோல் காணப்படும் ஒன்றில் கடற்படை நிலையம் இருந்ததற்கான சின்ன்ங்களும் உள்ளன. பண்டைய உலகின் மாபெரும் கடற்படை இங்குதான் நங்கூரம் பாய்ச்சி நின்றிருத்தல் வேண்டும். பேரரசு அமைத்தவர்களும் கடலாராய்ச்சி செய்தவர்களும் இங்கிருந்தே புறப்பட்டிருக்க வேண்டும். இன்று அந்த துறைமுகங்களில் மண் மேடிட்டுள்ளன. இவற்றைப் பார்த்துப் பண்டைய பெருமையை புரிந்துகொள்ள முடியாது. இவற்றையும் இங்குள்ள வேறு பல சின்னங்களையும் முறையாகப் பாதுகாத்துச் சீர்படுத்தினுல் வரலாற்றுக் கோயில் எனத்தக்க இவ்விடம் தனது பண்டைய பெருமையை ஒரு சிறிதேனும் பிரதிபலிக்கும் என நம்பலாம்.

தமிழில் : ‘அறிவியல் நம்பி’

எட்டு நூற்றாண்டுகளாக நிலவிய கார்த்தேஜ் நாகரிகம்

கில்பர்ட் சார்லஸ் பிகார்ட்

கில்பர்ட் சார்லஸ் பிகார்ட் மக்டாரிலுள்ள (துனீசியா) பிரெஞ்சு தொல்பொருளாய்வுக் குழுத் தலைவர்; பாரிஸிலுள்ள சோர்போனில் ரோமானிய தொல்பொருளாய்வுப் பேராசியர்; மத்திய பிரான்ஸின் வரலாற்றுப் பழமைக்கலை இயக்குநர். 1941 முதல் 1955 வரை துனீசியாவில் பழமைக்கலை இயக்குநராக இருந்த இவர் கார்த்தேஜில் குறிப்பாக அண்டோனியஸின் குளிமணையில் புதைபொருளாய்வை மேற்பார்வையிட்டார். கார்த்தேஜின் வரலாற்றையும் தொல்பொருளாய்வையும் பற்றி விரிவாக எழுதியுள்ளார். இவற்றுள் (கொலெட் பிகார்டுவுடன் இணைந்து எழுதிய) 'தி லைப் அண்டு டெத் ஆப் கார்த்தேஜ்' (கார்த்தேஜின் வாழ்வும் மறைவும்) சிட்ஜ்விக் அண்டு ஜாக்சன் லிமிட்டெட் இலண்டன் 1968, ''கார்த்தேஜ்'' எலக் புக்ஸ், லண்டன் 1964, எஃப். உங்கர் வெளியீடு, நியூயார்க், 1965 ஆகியவை ஆங்கிலத்தில் வெளியானவை.

கார்த்தேஜ் வரலாற்றில் தன்னிகரில்லாத ஓரிடம் வகிக்கிறது. கீழ்த்திசை நாடுகளில் ஐரோப்பியர்கள் குடியேறி, எல்லாக் காலங்களிலும் புதுக் குடியிருப்புக்களைத் தோற்றுவித்திருக்கின்றார்கள். என்றாலும், ஆசியாவிலிருந்து வந்த ஒரு செமித்திய இன மக்கள் மத்தியதரைக் கடலின் மேற்குப் பாகம் சென்று குடியேறி ஒரு தனிக் குடியமைப்பை நிறுவினார்கள் என்பது ஒரு புதுமையான நிகழ்ச்சியாகும். மேற்கத்திய நாடுகளில் கீழ்த்திசை மக்கள் குடியேறிய மிகச் சில சந்தர்ப்பங்களையும் வரலாற்றுக் காலத்தில் காண்கிறோம். சான்றாக ஸ்பெய்னில் முஸ்லிம்கள் குடியேறியதைக் கூறலாம்; வரலாற்றுக் காலத்துக்கு முன்னர் இம்மாதிரி நிகழ்ந்திருக்கலாம்; ஆனால் அதற்குத் தெளிவான சான்றுகளில்லை.

இஸ்லாமியப் பண்பாட்டின் அம்சங்களையும், ஆக்கக்கூறுகளையும் மேற்றிசை நாடுகளுக்குக் கொண்டு வந்ததில் கர்தூபாவில் இருந்த கிலாபத் ஆட்சியும், கர்நாதா அரசும் பெருமளவில் கருவிகளாக இருந்த போதிலும், மத்திய கால ஐரோப்பிய வாழ்க்கையில் ஓரங்கமாக இவை ஆகவில்லை. ஐரோப்பாவின் தென் கோடியில் வேற்று நாட்டவரின் எல்லைக்குட்பட்ட நிலப்பகுதிகளாகவே இவை நின்று விட்டன. ஐரோப்பிய மக்கள் தங்கள் மத்தியில் இவர்கள் இருப்பதை ஏற்றுக் கொள்ளவேயில்லை. தங்கள் ஆற்றல் முழுவதையும் ஒருங்கிணைத்துப் போராடி இறுதியில் வெளியி

Photos Luc Joubert © Archaeologia Viva

எலிசா இளவரசியின் கற்பனைக் கடற்பயணம்

லேயிருந்து வந்த இக்குடியேற்ற நாட்டவரை ஐரோப்பியர்கள் வெளியே ஓட்டிவிட்டார்கள். ஆனால் கார்த்தேஜோ வட ஆஃப்ரிக்க நாட்டு மக்களுடனும், இத்தாலியிலிருந்து பல்வேறு வழியில் வந்த — பல்வகைப் பண்பாடுகளையுடைய மக்களோடும், கெல்ட், ஐபீரிய மக்களோடும் ஐந்தாறு நூற்றாண்டுகள் நெருங்கிய தொடர்பு கொண்டு வாழ்ந்தது. நூற்றாண்டு காலப் போராட்டத்தின் விளைவாக ஏற்பட்டதல்ல அதன் அழிவு. பண்பாட்டுப் பகைகளோ, இனவெறுப்புகளோ இடம் பெறாத ஒரு பெரும் அரசியல் நிகழ்ச்சிதான் அதன் அழிவுக்குக் காரணமாக இருந்தது. பதினாறும் நூற்றாண்டு ஸ்பெயினில் நடந்தது போல, கார்த்தேஜின் அழிவினால், அதன் பண்பாடு திட்டமிட்டு வேரோடு அழிக்கப்படவில்லை. பியூனிக் பண்பாடு மெல்ல, மெல்ல வன்முறையில்லாது தேய்ந்து, இறுதியில் ரோமப் பண்பாட்டுடன் கலந்து விட்டது.

கார்த்தேஜ் நகரை நிறுவியவர்கள் அது வகிக்கப் போகும் சிறப்பான பங்கு எத்தகையதென எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். அந்நகரின் அடிப்படையே பல முக்கிய மாறுதல்கள் பெற்ற ஆறு நூற்றாண்டுக் கால கட்டத்தின் சரித்திர பூர்வமான வளர்ச்சி தான் அதற்கு அத்தகைய சிறப்பை நல்கிற்று.

அந்த முதல் கால கட்டத்தில் கார்த்தேஜைப் பற்றி மிகக் குறைவாகவே தெரிய வருகிறது. வெள்ளிய வாணிபத்துக்காகத் தோன்றிய நெடுஞ்சாலையில் அமைந்திருந்த வணிக வழி நிலைகளில் ஒன்றாகவே அது அப்பொழுது இருந்ததாகத் தோன்றுகிறது. செம்பு, வெள்ளியம் ஆகியவற்றின் கலவையாகப் பித்தளை கண்டுபிடிக்கப்பட்டதும், கி.மு. இரண்டாயிரம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த மக்கள் வணிகத் தொடர்புகள் ஏற்படுத்தும் கட்டாயத்துக்குள்ளானார்கள். போக்குவரத்துச் சாதனங்கள் மிக அரிதாகயிருந்த அந்தக் காலத்தில், அவ்வாணிபத் தொடர்புகள் வியத்தகு தொலைவுக்கு விரிந்திருந்தன. மத்தியதரைக் கடல் பகுதியின் பண்பாட்டுக் கேந்திரங்களாக அன்று விளங்கியவை எகிப்தும் மேற்கு ஆசிய நாடுகளுமாகும். மேற்கு ஆசியாவின் அந்நாடுகளில் செம்பு பெருமளவில் கிடைத்தது. ஆனால் கிழக்கு மத்தியதரைக் கடலை ஒட்டியிருந்த நாடுகளில் வெள்ளீயம் அநேகமாகக் கிடைப்பதில்லை. மேற்கு ஐரோப்பாவிலும், வடமேற்கு ஐரோப்பாவிலும், ஸ்பெயின், பிரிட்டன், பிரிட்டிஷ் தீவுகளிலும் தான் அக்காலை வெள்ளீயம் அகழ்ந்தெடுக்கப் பட்டது. கீழ்த்திசை மக்களுடன் வணிகத் தொடர்பும் ஏன் பண்பாட்டுத் தொடர்பும் கூட வைத்திருந்த அபூர்வமானதும் நெடுந்தொலைவு புகழ் பெற்றதுமான மெகாலித்திக் பண்பாடு அட்லாண்டிக்கை ஒட்டியிருந்த இந்நாடுகளில் தான் வளர்ச்சியடைந்து, வளம் பெற்றது. இன்றைய அந்த லூசியா (பண்டைய டார்டெஸ்ஸோஸ்) அரசு தான் இவ்வாணிகத்தின் தொடுமுனையாக யிருந்தது. அந்த நாட்டின் கனிப் பொருள் வளம் கண்டு கி.மு. ஆறும் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த கிரேக்கர்கள் பயந்து நின்றனர். ஆசியாவிலிருந்தும், ஏஜியன் பகுதிகளிலிருந்தும் கடற்கரைகளின் வடபுறத்திலிருந்தும் வந்த வணிகர்கள் இங்குதான் சந்தித்தனர்.

கி.மு. இரண்டாயிரம் ஆண்டு வாக்கில் நெடுங்காலம் மைஸீனியர்களின் ஆதிக்கத்துக்குள்ளிருந்த இவ்வாணிபத்தை போனீஷியர்கள் கைப்பற்றினர். தங்கள் வாணிபப் பொருள்களை அந்த அந்த வட்டார மக்களால் திருடப்படாமல் காக்கவும், தங்கள் கடலோடிகளுக்குக் குளிர்காலக் குடியிருப்புக்களை ஏற்படுத்தவும், ஆங்காங்கே வாணிபப் பேட்டைகளும், தங்கும் இடங்களும் இவர்கள் தோற்றுவித்தனர்.

வழிவழி வந்த செய்திகள் மூலமாக இத்தகைய வாணிபப் பேட்டைகளும், தங்குமிடங்களும் எந்தெந்தக் காலங்களில் தோற்றுவிக்கப்பட்டன என்னும் தகவல் நமக்குக் கிடைக்கிறது. இவற்றில் மிகத் தொன்மை வாய்ந்தது கி.மு. 1200 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப் பட்டது. துனீசியாவின் வடக்குக்கரையோரமாக ஊட்டிகா கி.மு. 1178ஆம் ஆண்டிலும், கார்த்தேஜ் கி.மு. 814ஆம் ஆண்டிலும் தோன்றின.

துரதிருஷ்டவசமாக இந்த ஆண்டுகள் இன்றைய தொல் பொருள் ஆராய்ச்சிகளால் உறுதிப்படுத்தப் படவில்லை. கிரேக்கக் குடியேற்றங்களில் கண்டெடுக்கப்பட்ட பொருள்களை வைத்து, அவை கிரேக்கர்கள் குடியேறிய காலத்தைச் சார்ந்தவைதான் எனக் கணிக்க முடிகிறது. ஆனால் போனீஷியன் நகரங்கள் இருந்த மனையிட எல்லைகளில் அகழ்ந்தெடுக்கப்பட்ட பொருள்கள் அந்த நகரங்கள் தோன்றிய காலத்துக்குப் பிற்பட்டவையாகும்.

சான்றாக, கார்த்தேஜின் சமாதிகளிலும், புனித இடங்களிலும் கண்டெடுக்கப்பட்ட மண்பாண்டங்கள் அதிகபட்சம் கி.மு. 750ஆம் ஆண்டைச் சார்ந்தவை என்று முக்கிய ஆய்வாளர்கள் கணிக்கின்றனர். அதாவது கார்த்தேஜ் நகரைத் தோற்றுவித்ததாகக் கருதப்படும் போனிஷிய இளவரசி எலிஸ்ஸா, ஆஃப்ரிக்காவில் வந்து சேர்ந்ததாக மிகத் தொன்மைகால ஆசிரியர்கள் குறிப்பிடுகிறார்களே அதற்கு அறுபது ஆண்டுக்குப் பிந்திய காலத்தைச் சார்ந்தவை அம் மண்பாண்டங்கள். யுட்டிகாவையும், காடேயையும் பொறுத்த வரை இந்த இடைவெளி குறைந்தது மூன்று, நான்கு நூற்றாண்டுகளாகும்.

இத்தகைய கால முரண்பாடுகள் பல சிக்கல்களை எழுப்புகின்றன. தொல் பொருள் ஆய்வாளர்கள் இது பற்றி நெடுங்காலமாகச் சர்ச்சை செய்து வருகின்றார்கள். ஆனால் திருப்திகரமான ஒரு முடிவும் இதுவரை கிட்டவில்லை. இந்நகரங்கள் தோன்றிய காலங்கள் பற்றிய ஏடுகள் தவறானவையா? இன்னும் தீர்க்கமான அகழ்வாராய்ச்சிகள் செய்ய வேண்டுமா? புதை படிவங்கள் பற்றிய காலக்கணிப்பை மீண்டும் ஆய்ந்து பார்க்க வேண்டுமா? உண்மையில் இப்பிரச்சினை இன்னும் தீர்வு காண முடியாத ஒன்றாகவே இருக்கிறதென் பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

இதுபற்றி நமக்குக் கிடைத்திருப்பவையெல்லாம் முற்றிலும் சரியென ஏற்றுக் கொள்ளப்பட முடியாத - பண்டைய இலக்கிய ஏடுகளிலிருந்து பெறப்பட்ட துண்டு, துண்டான தகவல்கள் தாம. இவற்றில் தொன்மையான சமயக் கற்பனைகளும், அவற்றை எழுத்தில் வடித்தோரின் புனைந்துரைகளும், வரலாற்று உண்மைகள் என்று ஏற்றுக் கொள்ளத்தக்க சில செய்திகளும் இத்தகவல்களில் பிரிக்க முடியாதபடி பின்னிப் பிணைந்து இருக்கின்றன. மற்றக் குடியேற்றங்கள் போல கார்த்தேஜ் முழுக்க, முழுக்க பொருளாதார வாய்ப்புகளுக்காகத் தோற்றுவிக்கப் படவில்லை என இத்தகவல்கள் குறிக்கின்றன. நாடு கடத்தப்பட்ட ஓர் இளவரசியால் தாம் பிறந்த நாட்டை விட்டு — அவருக்குத் திரும்ப முடியும் என்ற உறுதி இல்லாது - வெளியேற்றப்பட்ட அரசியல் அகதிகளுக்காக ஒரு புகலிடமாக கார்த்தேஜ் நிறுவப் பட்டதாகவே தோன்றுகிறது.

ஆனால் அக்குடியேற்றக் காரர்களின் வழி வாய்ப்புக்கள் அவர்களுடைய பேரார்வங்களின் அளவுக்கு எட்டவில்லை. போனீஷியச் சொற்றொடரான ''கர்து ஹதஷ்ட்'' என்பதற்குப் ''புது நகரம்'' என்பது பொருள். இந்த 'கர்து ஹதஷ்ட்'' என்னும் பெயர் தான் பின்னர் ரோமர்களால் சிதைக்கப்பட்டு கார்த்தேஜ் என்று உருமாற்றம் பெற்றது. இப் புது நகரம் நிறுவுவதற்கு வேண்டிய இடத்தை, லிபியர்கள் சுலபமாகக் கொடுத்து விடவில்லை. பெரும் பேரத்துக்குப் பின்னர் கப்பம் கட்ட வேண்டுமென்ற நிபந்தனையுடன் தான் லிபியர்கள் இடம் கொடுப்பதற்கு ஒத்துக் கொண்டனர்.

கி.மு. ஏழாம் - எட்டாம் நூற்றாண்டைய கார்த்தேஜின் சமாதிகளையும், புனித இடங்களையும் அகழ்வாராய்ச்சி செய்ததில் கிடைத்த தொல் பொருள்களிலிருந்து, கார்த்தேஜ் ஒரு சுதந்திர நாடாக இயங்குவதற்குரிய சக்தியைப் பெற்றிருக்கவில்லை என்பது புலனாகிறது. இவ்வாறிருக்க அது அக்காலத்தில் ஒரு வல்லரசாக இருந்திருக்க முடியாது.

அதன் பொருளாதாரமே, அதன் தாய் நகரத்தை நம்பித்தான் இருந்தது. எனினும் அணிகலன்களும், அருமையான தந்த வேலைப்பாடுள்ள பொருள்களும் ஓர் உயரிய வாழ்க்கைத் தரம் இருந்ததற்குச் சான்று கூறுகின்றன. ஆனால் நிலவியல் அம்சங்களும் சுற்றுச், சார்புகளும் இதர போனீஷியக் குடியேற்றங்களை விட, கார்த்தேஜ் விரிந்து வளர்ச்சி பெறுவதற்குப் பெரும் வாய்ப்புகளை அளித்தன. இதர போனீஷியக் குடியேற்றங்கள் பொதுவே கடற்கரையை ஒட்டிய சிறு தீவுகளிலும், அல்லது குன்றுப் புறங்களிலுள்ள நிலக் கூம்புகளிலும் நிறுவப் பட்டிருந்தன. இந்த மனை நிலங்கள் போதிய பாதுகாப்பை அளித்தாலும், கிட்டத்தட்ட கடலையே நம்பியிருந்த அவர்கள் வாழ்க்கைத் தேவையை நிறைவு படுத்த முடியவில்லை.

ஆனால் கார்த்தேஜோ ஒரு தீபகற்பத்தின் கீழ்க்கரைப் பகுதியில் அமைக்கப் பெற்றது. அதன் முனை இருபது சதுர கிலோ மீட்டர் (ஏறத்தாழ எட்டு சதுர மைல்) அளவில் வளைந்த குன்றுத் தொகுதிகளின் இரு



Photo.Rabat Museum

கார்த்தேஜின் பெருந் தளபதியும் அரசியல் வல்லுநருமான ஹனிபாலின் (கி. மு. 247-183) இவ்வரிய வெண்கல மார்பளவுச்சிலை 1944இல் மொராக்கோவில் மெக்னீசுக்கு வடக்கிலுள்ள வாலுபிலிஸ் ரோமானிய வழிபாடுகளுடன் கண்டெடுக்கப் பெற்றது. கி. மு. 221-219இல் அச்சிடப்பெற்ற நாணயங்களிலும் ஹனிபாலின் உருவத்தைக் காணலாம். மேலும் இரு சலவைக் கற்சிலைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மருங்கிலுமிருந்த வளம் நிறைந்த, நீர் வசதி படைத்த, சமவெளிகளைத் தழுவி நின்றது. துனீஸ்—கார்த்தேஜ் விமான தளம் முன்னர் ஆரியானு காயல் என்று பெயர் பெற்றிருந்தது. இக்காயலுக்கும், துனீசிய ஏரிக்கும் இடையேயிருந்த தலை நிலைப்பரப்பை இணைத்து நின்ற மணல் நிறைந்த பூசந்தியை— இரு பெரும் நிலக்கூறுகளை இணைக்கும் நில இடுக்கை — தங்கள் ஆதிக்கத்தின் கீழ் வைத்திருந்ததே, அவர்களுடைய சின்னஞ்சிறிய, சுயநிறைவு பெற்றிருந்த உலகின் மீது பூரண அதிகாரம் வகிப்பதற்குத் தேவையான வலிமையை கார்த்தேஜ் குடியேற்றக்காரர்களுக்குக் கொடுத்தது.

இம்மிக முக்கியமான ஆதிக்கம் கார்த்தேஜ் மக்களுக்கு எப்பொழுது கிடைத்தது என்று துல்லியமாகச் சொல்ல முடியாவிட்டாலும் கூட, இக்குடியேற்றம் தோன்றிய வெகு சிறிது காலத்திற்குள்ளேயே அவர்கள் இந்த ஆதிக்க நிலையை எய்தினர் எனத் தோன்றுகிறது. இதன் மூலமாக அந்த வட்டார மக்களுடனும் தங்களுடைய தாய் நகரத்துடனும் பூரண சுதந்திரத்துடன் நடந்து கொள்ளும் தகுதியை அவர்கள் பெற்றனர்.

கி. மு. 1200ஆம் ஆண்டில் தோரியப் படையெடுப்பால் மைசீனிய அதிகாரம் உருக்குலைந்து அழிவுற்றது. கடல் சார்ந்த தன் பேரரசை நிறுவ இந்நிகழ்ச்சியைச் சாதகமாக்கிக் கொண்டது டையர் நகரம். ஆனால் தங்கள் தலைவர்கள் கடலோரத்தில் புரிந்த வீர, தீரச் செயல்களை அழகுறப் பாடிய கவிஞர்கள், அவற்றை கிரேக்க மக்களிடையே, இடைக்காலத்தில் பன்னூறு ஆண்டுகள் நிலைத்திருக்கச் செய்தனர்.

உலிஸஸீம், ஆர்கோநாட்ஸும் ஒரு முறை வருகை தந்த துறைமுகங்களின் மறு கண்டுபிடிப்பையும், மறு பற்றுட்சியையும் அகேயன், யூபோயியன், ரோட்ஸ் மக்கள் முதலானோரும், அவர்களைப் பின்பற்றிய கோரிந்தியரும், அனடோலிய அயோனியரும் கி. மு. 800 இல் மீண்டும் கண்டு பிடித்துக்கைப் பற்றினர். இத்தாலி, சிஸிலி போன்ற கடற்கரைப் பகுதிகளில் வலுவான அடித்தளங்களை அமைக்காமல் கடற்கரையில் தங்கிய திருப்தி கொண்டனர்.

ஆனால் பெருமளவில் பெருகிவிட்ட மக்கள் குடியேற்றம் இக்குடியிருப்புக்களில் இட நெருக்கடியைத் தோற்றுவித்தது. இதனால் புதிதாக வந்தவர்கள் மேலும், மேலும் முன்னே செல்லவேண்டி வந்தது. இம்மக்கள் கி. மு. 600 ஆண்டில் நிறுவப்பட்ட மார்ஸெய்க்கும், கௌல் கரைக்கும், கேட்லோனியாவுக்கும், அவற்றையும் தாண்டி அளப்பரிய வளங்களுடன் விளங்கிய டார்டெஸ்ஸோல் அரசை நோக்கியும், தெற்கே ஸ்பானியக் கரை வரையிலும் செல்லத் தலைப்பட்டனர். சைர்பீ குடாக்கடல், மேற்கே சிஸிலி, ஐபீரியக் கிழக்குக் கடற்கரைப் பகுதி கார்ஸிகா போன்ற இடங்களில் — அதாவது எக்கெல்லாம் கிரேக்க, போனீஷிய நிலங்கள் சந்தித்தனவோ அங்கெல்லாம் தொடர்ந்து சச்சரவுகள் முளைத்தன. இவை அடிக்கடி நேர்ந்த பல சிறிய மோதல்களுக்குக் காரணமாயமைந்தன.

தங்கள் நிலையைப் பாதுகாத்துக் கொள்ள மேற்கத்திய போனீஷியர்கள் ஒன்றுபடவும், தங்களைப் போன்றே, கிரேக்கர்களின் பேரரசினால் அச்சுறுத்தப்பட்ட மக்களின் நட்பைத் தேடி ஓர்

இராணுவச் சக்தியை உருவாக்கவும் வேண்டியிருந்தது. இது ஆங்காங்கே சிற்சில கடற்கொள்ளைகள் நிகழ்ந்திருந்தாலும்,—பொதுவே அமைதியான ஒரு வணிக மரபையே கொண்டிருந்த மக்களின் போக்கிலே ஒரு மாறுதலைத் தோற்றுவித்தது. இந்த உருமாற்றம் கி. மு. 550-லிருந்து கி. மு. 530 வரை ஆட்சி செலுத்திய மாகோ அரசர் போன்று வரலாறு கண்ட கார்த்தேஜின் துவக்க கால அரசியல் தலைவர்களின் வழித்துணையின்பேரில் நிகழ்வுற்றது.

மாகோ உருவாக்கிய இராணுவத்தில் கார்த்தேஜ் மக்கள் குறைவாகவே இருந்தார்கள். இராணுவம் பெருமளவுக்குக் கூலிப் பட்டாளமாகவே இருந்தது. ஆனால் நன்கு பயின்ற ஒரு கப்பற்படை இராணுவத்துக்குத் துணை செய்தது. அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் கார்த்தேஜையே நம்பியிருக்கும் சில இடங்களைக் கவனமாகத் தேர்ந்தெடுத்து, அங்கேயுள்ள இராணுவத் தளங்களின் மீது ஆதிக்கம் செலுத்த அவர் முற்பட்டார்.

வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்தவரை அவர் என்டுருஸ்கர்களுடன் ஏற்கனவேயிருந்த உடன்படிக்கையை வலுப்படுத்தினர். இம்மக்கள் ஒருவேளை சிறிய ஆசியாவிலிருந்து வந்திருக்கலாம். கீழ்த்திசை நாடுகளின் பாரம்பரியம்தான் இவர்களிடம் பெருமளவில் செல்வாக்குப் பெற்றிருந்தது. இவர்களும் கிரேக்கர்களின் திடீர்த் தாக்குதல்களினால் தொல்லைப்படுத்தப்பட்டு வந்தனர். எனவே, என்டுருஸ்கர்களுக்கும் கார்த்தேஜிய மக்களுக்கும் இடையே உருவான ஒத்துழைப்பின் முதல் விளைவு சிறிய ஆசியாவிலுள்ள ஃபொசியாவைச் சார்ந்த கிரேக்கர்கள் கோர்சிகாவில் இடம் பெறுமல் மறுக்கப்பட்டது தான்.

மாகோவின் செயல்கள் உள் அரசியல் நடவடிக்கைகளிலும், பண்பாட்டு முறைகளிலும் முக்கியமான எதிரொலிகளை எழுப்பின. இந்தக் காலத்தில் கார்த்தேஜிய ஆட்சியின் தன்மை பற்றி மிகக் குறைவான தகவல்களேயுள்ளன. நாட்டின் தலைவராக இருந்தவர், சமயத் துறைகளில் அதிகாரங்கள் பெற்றவராகக் கருதப்பட்ட அரசர் ஆவார். மக்களுடைய வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் கடவுள்களே மேலோங்கியிருந்த காலத்தில், சமயத் துறையில் அரசர் பெற்றிருந்த அதிகாரங்கள் அளப்பரியனவாக இருந்தன. ஆனால் அரசர் உயர்குடி மக்களின் கருத்துக்கும் மதிப்பளிக்க வேண்டியிருந்தது. இவ்விருதரப்பார்க்கும் கருத்து வேறுபாடு ஏற்படுமானால் அதுபற்றித் தீர்ப்பளிக்க மக்கள் குழு அழைக்கப்பட்டது. இராணுவத் தலைவராகவும், அதே நேரத்தில் சமயத் துறையின் தலைவராகவும் ஆனமையால் அரசனின் அதிகாரங்கள் மிகுந்தன.

அரசுரிமை பாரம்பரியமாகவோ, அல்லது ஒருவனின் ஆயுட்காலம் முழுவதற்காகவோ அமைந்திருக்கவில்லை என்றாலும், நடைமுறையில் ஒரே குடும்பத்தைச் சார்ந்த உறுப்பினர்களுக்கே அது ஒதுக்கப்பட்டது. இந்தக் காலத்தில் அரசுரிமை வகித்த எவரும், தன் ஆயுட்காலத்தில், அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டதில்லை. மோகாவும் அவருக்குப் பின் வந்தோரும் நாட்டுப்பற்று, சமய வெறி ஆகிய இரண்டையும் தூண்டி விட்டுத் தங்கள் அதிகாரத்தை ஓர் மர்மச் சூழலில் அமைத்துக்கொண்டனர்.

(தொடர்ச்சி 42ஆம் பக்கம் பார்க்க)

வண்ணப் பக்கங்கள்

பக்கம் 21

அண்டோனியஸின் குளிமனைகள் கி. பி. 2ஆம் நூற்றுண்டின் மத்தியில் ரோமானிய மன்னர் அண்டோனியஸ் பயஸ் கட்டிய பெரிய குளிமனைகளின் எஞ்சிய பகுதிகள் கார்த்தேஜ், ஆப்பிரிக்காவில் ரோமானியப் பேரரசின் தலைநகரானபோது பெற்றிருந்த பெருஞ்சிறப்பைக் காட்டுகின்றன. 4ஆம் நூற்றுண்டில் புதுப்பிக்கப்பட்ட அம்மனைகள், 5ஆம் நூற்றுண்டில் மிலேச்சர் படையெடுப்பினுல் பெரும்பாலும் அழிந்து போயின. இப்போது அவை யுனெஸ்கோ திட்டமாகிய ஐ. நா. வளர்ச்சித் திட்ட உதவியினுல் புதுப்பிக்கப் பெற்று காக்கப்படும்.

Photo Michel Desjardins © Realites, Paris

பக்கம் 22

கல்லில் வழிபாடு: சனிக்கடவுளுக்கு உயிர்ப்பலி கொடுத்ததன் நினைவாக கார்த்தேஜில் நடப்பெற்ற புதிய கார்த்தேஜிய நடுகற்கள். ரோமானிய வெற்றிக்குப் பிறகு கார்த்தேஜில் பால் ஹாமனின் இடத்தை சனி பெற்றது. 8 நூற்றுண்டுகளாக பால்ஹாமனும் டானிட் தேவதையும் கார்த்தேஜின் பெருங் கடவுளாகத் திகழ்ந்தனர்.

Photo Michel Desjardins © Realites, Paris

பக்கம் 23

இறக்குமதியான இன்ப நுகர்வுப் பொருள்கள்: கி. மு. 6ஆம் நூற்றுண்டைச் சேர்ந்த இம்மூன்று மட்பாண்டப் பொருள்களும் கிரேக்க செல்வ நகராகிய கோரிந்திலிருந்து கார்த்தேஜுக்கு கொண்டுவரப் பெற்றன. ரோமானியர் கோரிந்தையும் கார்த்தேஜை அழித்த காலத்திலேயே அழித்தனர். மேலேயுள்ள இரண்டும் வாசனைப் பொருள் குவளைகள். இவற்றை அன்னமும் பறவையணங்கும் அலங்கரிக்கின்றன. கீழேயுள்ள கிண்ணத்தில் பறவை வேலைப்பாடுகள் காணப்படுகின்றன.

Bardo Museum, Tunis
Photos Luc Joubert © Archaeologia Viva

பக்கம் 24—25

இறுதிப் பயணத்திற்கு: 3 கார்த்தேஜிய மண் முகமூடிகள். இடப்புறம்: பேய் முகமூடி. (கி. மு. 4ஆம் நூற்றுண்டு) அக்கால ஸ்பார்ட்டாவின் நாடக முகமூடிகளை நினைவூட்டுகிறது. இத்தகைய முகமூடி, ஒருவேளை தீய ஆவிகளை விரட்டுவதற்காக, பலிபீட முகப்பிலோ சவக்கலங்களின் மீதோ தொங்க விடப்பட்டது. நடுவிலும் வலப்புறமும்: கார்த்தேஜில் தோண்டப்பட்ட மிகப் பழமையான கல்லறையில் கண்டெடுக்கப்பெற்ற முகமூடிகள். (முறையே கி. மு. 5, 6ஆம் நூற்றுண்டு). அவற்றின் அமைதியான தோற்றம் இடப்புற முகமூடியினின்று வேறுபட்டுள்ளது. அவை அக்கால உயர் பெண்ணழகைக் காட்டுகின்றன. அவை ஒருவேளை பெண் தெய்வமாகவும் இருக்கலாம். இறந்தோரின் முகத்தில் வைக்கப்பட்ட எகிப்திய அல்லது மைசீனிய முகமூடிகளைப் போலல்லாமல், அவை சவப்பெட்டியின் மேல் அல்லது அடியில் வைக்கப்பட்டன.

Photos Luc Joubert © Archaeologia Viva

பக்கம் 26

அலங்காரக் கைவினைத் திறன்: கி. மு. 4 ஆம் நூற்றுண்டில் கார்த்தேஜியப் பகுதியில் கண்டெடுக்கப் பெற்ற கார்த்தேஜிய வெண்கலக் குவளையின் கைப்பிடி. இதுபோன்ற கார்த்தேஜியப் பொருள்கள் சிசிலியிலும் இத்தாலிய தீபகற்பத்திலும் கண்டெடுக்கப் பெற்றுள்ளன.

Photo Luc Joubert © Archaeologia Viva



பக்கம் 27

யுல்லிசனின் மருட்சி: துனீசியாவிலுள்ள டௌகாவில் கண்டெடுக்கப்பெற்ற கி. பி. 3ஆம் நூற்றுண்டின் ரோமானிய பன்னிறமணி ஓவியத்தின் சிறுபகுதி. இது ஹோமரின் காவியக் காட்சியைக் காட்டுகிறது. இதில் யுல்லிசஸை அவனது நண்பர்கள் பாய்மரத்தில் கட்டி, அவன் கடலணங்குகளின் கவர்ச்சிமிகு இசையில் மயங்கிவிடாதவாறு அவனது காதுகளை மெழுகினுல் அடைத்துவிடுகின்றனர். பன்னிறமணி ஓவியக்கலை ரோமிலும் அதன் ஆஃப்ரிக்க குடியேற்றங்களிலும் உச்சநிலையை அடைந்திருந்தது. கார்த்தேஜில் இவ்வோவியங்கள் மறையியல், உலகியல் கருத்துக்களைச் சித்தரித்தன. 1962இல் வெளியான யுனெஸ்கோ உலகக் கலை வரிசை இப்பன்னிறமணி ஓவியங்களுக்கென ஒரு தனி ஏட்டிதழை ஒதுக்கியது.

Carthage National Museum, Photo Unesco © World Art Series







கார்த்தேஜ் பற்றி கிரேக்க, ரோமானிய அறிஞர்கள்

மகமது ஃபான்டார்

கடற்பயணங்களை முதன் முதலில் மேற்கொண்ட ஃபோனிசியனின் கதையை, கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் கிரேக்க வரலாற்று அறிஞரான, பைப்லஸைச்சேர்ந்த பைலோ கூறுகிறார்.

காட்டுத் தீயில் சிக்கிய, ஊஸோஸ், ஒரு மரத்தின் கிளைகளை முறித்து, மரத் தண்டின் மீதேறித் தீயிலிருந்து தப்பக் கடலில் பயணம் செய்தார். நடுத்தரைக் கடலில், ஃபோனிசியர் முதன் முதலாக மேற்கொண்ட பயணம் இதுதான்.

ஃபோனிசியக் கடல் பயணிகளின் சாதனை பற்றியும், துணிகரமான அவர்கள் பயணங்கள் பற்றியும், தெற்கு ஸ்பெயினில் அமைந்திருந்தது என்ற ஊகிக்கக் கூடிய தார்ஷிஷ் என்ற நாட்டுடன் குறிப்பாகவும், மற்ற நாடுகளுடனும் அவர்கள் நடத்திய கடல் வாணிபத்தின் பயனாக ஈட்டிய பெரும் பொருள் பற்றியும் வரலாற்றுச் செய்திகளை, இலியத், ஒடிஸி, தோரா, உகாரித் சாசனங்கள் ஆகியவற்றிலும் புகழ் பெற்ற மற்ற நூல்களிலும் நாம் காணலாம்.

தார்ஸிஷ், ஏராளமான செம்பு, வெள்ளி, ஈயம், தகரம், ஆகிய வளங்கள் நிறைந்திருந்தது. ஆகவே டைர், ஸைடான், ஆகிய இடங்களிலிருந்து ஃபோனிசியர் மேற்கொண்ட கடற் பயணங்கள் தார்ஸிஷை இலக்காகக் கொண்டிருந்தன. அந்நாட்டின் எல்லையற்ற கனிச்செல்வங்களைக் குறிப்பிட்டுக் கிரேக்க வரலாற்று அறிஞரான டியோடோரஸ் சிக்குலஸ் எழுதுகிறார்:

''நமக்குத் தெரிந்து, மிக அதிகமான வளம் மிக்க, வெள்ளிச் சுரங்கங்கள் ஐபீரியர் நாட்டில் தான் இருக்கின்றன. வெள்ளியின் மதிப்பை ஐபீரியர்கள் அறியவில்லை. ஆகவே ஃபோனிசிய வணிகர் மிகச் சிறிய அளவு வாணிபப் பொருட்களைத் தந்து, அவற்றிற்குப் பதிலாக வெள்ளியை வாங்கிக் கொண்டு கிரீஸ், ஆசியாவுக்கும் மற்ற நாடுகளுக்கும் எடுத்துச் சென்று, எல்லையற்ற செல்வம் குவித்தனர். பல ஆண்டுகளாக அவர்கள் நடத்திய இந்த வாணிபம் அவர்களுக்கு ஏராளமான அதிகாரமும் செல்வாக்கும் ஈட்டித் தந்ததுடன், சிசிலியிலும், அண்டைத் தீவுகளான லிபியா, சார்டீனியா, ஐபீரியா, ஆகியவற்றில் பல காலனிகள் நிறுவவும் உதவியது.

மேற்குத் திக்கில் தார்ஸிஷ் நோக்கி மேற்கொண்ட கடற்பயணங்கள் மூலமாக, வட ஆஃப்ரிக்கக் கடலோரப் பகுதி, ஃபோனிசியர்க்கு நன்கு அறிமுகமாயிற்று. அங்கு அவர்கள் சிறு வாணிப முகாம்களை நிறுவி, அம்முகாம்களில் தங்கள் மாலுமிகள் ஓய்வெடுக்கவும், பயணத்திற்கு வேண்டிய பொருள்களைச் சேர்த்துக் கொள்ளவும் அவற்றைப் பயன் படுத்தினர். மேற்குப் பகுதியில் நிறுவப்பட்ட ஃபோனிசிய நிலையங்களில், மிகப் பெரியதாகவும் மிக முக்கியமானதாகவும் அமைந்தது, கார்த்தேஜ். கார்த்தேஜில் முகாம் நிறுவுவதற்கான காரணங்களையும் நிகழ்ச்சிகளையும் விளக்கும் ஒரு வரலாற்றைப் பண்டைய எழுத்தாளர் அளிக்கின்றனர்.

இந்த வரலாற்றின்படி, மேல்கார்ட்டின் தலைமைச் சமய குருவான ஆஸர்பாஸை திருமணம் செய்தவரும், டைர் அரசர் பிக்மாலினியின் சகோதரியுமான எலிஸ்ஸாவால், கார்த்தேஜ் நிறுவப்பட்டது. ஆஸர்பாஸின் செல்வத்தின் மேல் மோகம் கொண்ட பிக்மாலியான் அவரைக் கொலை செய்தார். துயரத்தில் மூழ்கிய எலிஸ்ஸா இளவரசி, டைரிலிருந்து தப்பி ஓட முடிவு செய்தார். மிகுந்த திறமையுடனும் தந்திரமாகவும்,

---

மகமது ஃபான்டார் துனீசியர்; இவர் கார்த்தேஜின் தொல்பொருளாய்வு, கல்வெட்டு ஆராய்ச்சி ஆகியவற்றின் வல்லுநர்; துனீசிலுள்ள தொல்பொருளாய்வு, கலைகள் தேசிய நிறுவனத்தின் தொல்பொருளாய்வு, வரலாற்று ஆய்வுக் குழுவின் பொதுச் செயலாளர்; துனீஸ் பல்கலைக் கழகத்தின் இலக்கிய, சமூகவியல் துறையில் தொல்பொருளாய்வுப் பேராசிரியர்; இவர் துனீசியாவில் நிகழ்ந்த தொல்பொருளாய்வுகள் பற்றி பல நூல்கள் எழுதியுள்ளார். ''கார்த்தேஜ், எலிசாவின் புகழ்மிகு நகரம்'', துனீஸ் 1970 (ஃபினீசியா கார்த்தேஜ் மறுவுலக கொள்கை'',) (துனீஸ் 1970) அராபிய மொழியில் எழுதப்பெற்ற ''ஜுகுர்த்தா'' (1970) ஆகியவை இவருடைய அண்மை வெளியீடுகள்.

ஹனிபாலின் வெற்றிச் சின்னமா?

இவ்வெண்கல மார்புக் கவசம் கி. மு. 3ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஹனிபாலின் படையெழுச்சியின் போது படைவீரனொருவன் இத்தாலியிலிருந்து கார்த்தேஜுக்கு கொண்டுவந்த வெற்றிச் சின்னமாக இருக்கலாம். இஃது இன்றைய நேப்பிள்ஸின் அண்மையிலிருந்த கம்பேனியாவின் கைவினைஞரது திறமையைக் காட்டுகிறது. இதில் கிரேக்க தேவதை பல்லாஸ் அதீனாவின் ரோமானிய வடிவமான மினர்வாவின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. இது துனீசியாவில் சூஸ் அருகில் மரச் சவப்பெட்டி ஒன்றில் கண்டெடுக்கப்பெற்றது.

Bardo Museum, Tunis
Photo Luc Joubert © Archaeologia Viva

எல்லா மனிதரும் கடவுளரும் நுழைந்த நகரம்

அவர் தம் சகோதரனை ஏமாற்றி, அவர் சந்தேகங்களைச் சமாளிப்பதில் வெற்றி கண்டார். டைர் நாட்டுப் பிரபுக்கள் சிலருடன் அவர் சைப்ரஸ் சென்ருர். அங்கு ஜூபிடரின் சமய குருவால் அவர் வரவேற்கப் பட்டார். அவரும், அவரைச் சார்ந்தோரும், ஆஃப்ரிக்காவுக்கு பயணமாகி வருங்காலத்தில் கார்த்தேஜ் நிறுவப்படவிருந்த இடத்தில் இறங்கினர்.

இதை முழுதும் உண்மையான வரலாருக ஏற்றுக்கொள்வது கடினம். ஆயினும் இது கூறும் விவரங்கள், ஃபோனிசிய உலகம்பற்றி நமக்குத் தெரிந்துள்ள விவரங்களுக்கு ஒத்திருக்கின்றன. அந்த அளவில், கார்த்தேஜ் பற்றியும் அதன் நாகரிகம் பற்றியும் இவ்வரலாறு நமக்குச் சில உண்மைகளைப் புலப்படுத்தக்கூடும்.

கார்த்தேஜ் என்ற பெயர், ஃபோனிசியர் ஒருவரின் பெயரான கார்ட் ஹடட்ஸ் என்பதிலிருந்து தோன்றியது. புது நகரம் என்று அப்பெயருக்குப் பொருள். கார்த்தேஜ் கி.மு. 814 ஆண்டு வாக்கில் நிறுவப்பட்டது என்பது பெரும்பான்மையான வரலாறுகளால் ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது. ஆனுல் இந் நகரம் இவ்வளவு தொன்மையானதல்ல என்பது சில வரலாற்று அறிஞர்களின் கருத்து. கார்த்தேஜில் செய்யப்பட்டுள்ள அகழ்வாராய்ச்சிகளின்படி, இவை கி.மு. ஏழாம் நூற்ருண்டை விட முந்திய காலத்தைக் குறிக்கவில்லை. இந்த ஆராய்ச்சியின் முடிவு, பண்டைய நூல்களின் முடிவை உறுதிப்படுத்துவதாயில்லை.

தொல் பொருள் ஆராய்ச்சியாளர் பொறுமையாகவும், எச்சரிக்கையாகவும், உண்மைக்குப் பெரிதும் கட்டுப் பட்டவராகவும் இருக்க வேண்டும். மரபு வழி எண்ணங்கள் வாயிலாக மிகப் பண்டைக் காலம் பற்றிக் கிடைத்துள்ள தகவல்கள் தான் இறுதியான, தவருத, உண்மையென்று வரலாற்று அறிஞன் ஏற்றுக்கொள்ளவும் கூடாது; அந்த விவரங்களில் ஒரே அடியாய் அவநம்பிக்கை கொள்ளவும் கூடாது. பண்டைய நூலாசிரியர்களின் கூற்றைத் தொல் பொருள் இயல் பெரும்பாலும் உறுதிப்படுத்துகிறது. கார்த்தேஜைப் பொறுத்தவரை, தொல் பொருள் ஆராய்ச்சியின் படிப்பினைகளும், இலக்கிய மரபின் செய்திகளும் ஒத்ததாகவே உள்ளன.

தங்கள் பண்டப் பொருட்களைப் புதுப்பிக்கவும், உள்ளூர் மக்களுடன் வாணிபம் செய்யவும், மத்தியதரைக் கடலோர இரு மருங்கிலும் நிறுவிய பல வாணிக முகாம்களைப் போலவே, ஃபோனிசியர் கி.மு. 814இல் ஒரு சிறு முகாமை நிறுவியிருக்கக் கூடும். ஆனுல் தார்ஸிஷின் கனிவளமே அவர்கள் முக்கிய இலக்காக இருந்ததென்று தோன்றுகிறது.

கி. மு. எட்டாம் நூற்ருண்டில், இரு அபாயங்கள் டைர் கடற்பயணிகளை எதிர்நோக்கின. மேற்கு மத்திய தரைப் பகுதியில் கிரேக்கர்கள் தங்கள் காலனிகளை விரிவாக்கிக் கொண்டிருந்த நேரம் அது 750இல், நேப்பிள்ஸ் குடாக்கடலில் கூமேயை கிரேக்கர் நிறுவினர். அதன் மூலமாகத் தான் எட்ரூரியா, கம்பானியா சுரங்கங்களிலிருந்து செப்புக் கனிவளங்கள் எடுத்துச் செல்லப்பட்டன. பதினேழு ஆண்டுகளுக்குப் பின்னர், ஸைரக்யூஸ், கிரேக்கரால் நிறுவப்பட்டது. இந்தப் புதிய கிரேக்கக் குடியிருப்புகள் தங்கள் வாணிக, கடற் தொடர்புப் பாதைகளுக்கு ஆபத்து விளைவிக்கும் என்பதை ஃபோனிசியர் உணர்ந்திருக்க வேண்டும். கிரேக்கச் செல்வாக்கு விரிவடைவதைத் தடுக்கவும் கட்டுப்படுத்தவும் ஏதாகிலும் செய்தாகவேண்டுமென்ற அவசியம் ஏற்பட்டது.

ஃபோனிசிய வர்த்தகர்களுக்கு இரண்டாவது ஆபத்து, அஸிரியாவிலிருந்து எழுந்தது. டைர் நகரங்களின் செல்வத்தைக் கண்டு அஸிரிய அரசர்கள் விரைவில் பொருமையும் பேராசையும் கொண்டனர். ‘கடலோரப் பகுதி அரசர்களின் கப்பம்; ஸிடோனியன்கள், கிபிலைட்ஸ்கள் ஆகியோர் நாடுகள்; கடல் நடுவே அமைந்திருந்த அர்வாஸ் நகரம்; வெள்ளி, தங்கம், ஈயம், வெண்கலம், வெண்கலப் பாத்திரங்கள், பலவண்ண ஆடைகள், லினன் அங்கிகள் பற்றி இரண்டாம் அஸுர்நாசிர்பால் (கி. மு. 883—856) அரசர் குறிப்பிடுகிருர். ‘‘அவர்கள் கப்பத்தை நான் பெற்றேன். அவர்கள் என் பாதங்களை முத்தமிட்டனர்’’ என்று அவர் கூறுகிருர்.

அஸிரியர் பேராசைக்கு அளவே இல்லை. வல்லமையும், சூழ்ச்சித் திறனும் மிக்க இந்தப் பிரபுக்கள் தங்கள் செல்வத்தைப்பறித்து விடுவார்கள் என்ற அச்சத்தில் ஃபோனிசியர் வாழ்ந்து வந்தனர்.

மேற்கு மத்தியதரைப் பகுதியில் ஒரு குடியிருப்பை நிறுவினுல், கிரேக்க ஆதிக்கம் பரவுவதைத் தடுக்கவும் அஸிரிய ஆபத்திலிருந்து பாதுகாப்பு அளிக்கவும் அது பயன்படும் என்று அவர்கள் கருதினர். கி. மு. எட்டாம் நூற்ருண்டின் நடுவில் ‘புதிய நகரம்’ வியத்தகு முறையில் தோன்றி வளர்ந்ததற்கு இதுதான் ஆதாரமாய் அமைந்திருக்கக் கூடும்.

எவ்வாருயினும், கார்த்தேஜ் நிறுவப் பட்டது, என்பது வரலாற்று உண்மை. ஆகவே, கார்த்தேஜ் ப்ற்றியும், அதன் வரலாறு, கலாச்சாரம் பற்றியும் நமக்கு உண்மைகளைப் புலப்படுத்தக்கூடிய மூலாதாரங்களைப் பரிசீலனை செய்து, கார்த்தேஜ் பற்றி நாம் என்ன அறிய முடியும் என்பதைக் காண்போம்.

முதலாவதாகப் பண்டை நூலாசிரியர்களிடமிருந்து நாம் அறியக்கூடியதென்ன? கார்த்தேஜ் பற்றியும் அதன் மக்கள் பற்றியும் கிரேக்கரும், யவனரும் நன்கு அறிந்திருந்தனர். எதிரிகளாகப் போர்க்களங்களிலும், பல நாகரிகங்களின் வளர்ச்சியையும் வீழ்ச்சியையும் கண்ட மத்தியதரைப் பகுதித்துறைமுகங்களில் வாணிபத்தில் போட்டியிட்டவர்களாகவும் அவர்கள் சந்தித்தனர். கார்த்தேஜ் பற்றி நமக்குக் கூறியுள்ள பண்டைய நூலாசிரியர் அனைவரையும் குறிப்பிடுவதென்ருல், அந்தப் பட்டியல் பெரிதும் நீளும். ஆனுல் அவர்களில் ஒரு சிலரை நாம் குறிப்பிடுவோம்.

ஆஃப்ரிக்கத் தங்கத்தை நாடிய கார்த்தேஜ் வணிகரின் வாணிபச்சடங்குகளைக் குறிப்பிட்டு ஹெரடட்டஸ் எழுதியுள்ளது, புகழ்பெற்ற ஒரு வரலாற்றுக் குறிப்பு.

வரலாற்றின் தந்தையெனப் போற்றப்படும் ஹெரடட்டஸ் கூறுகிருர். ‘‘கார்த்



Carthage National Museum - Photo Luc Joubert © Archaeologie Viva

பறவையின் கழுத்தும் தலையும் அமைந்த கைப்பிடியுடைய இப்புனிதக் கத்தியின் செதுக்கு வேலைப்பாடு கார்த்தேஜ் கலையில் காணப்படும் எகிப்தியப் பண்புகளை காட்டுகிறது. கார்த்தேஜியர்கள் தமது பினீசிய முன்னேரிடம் இருந்து உலோகக் கலையை மரபுரிமையாகப் பெற்றனர். முடிவிலா வாழ்வளிக்கும் தாயத்துகளாகிய புனிதக் கத்திகளும் கழுத்தணிகளும் கண்ணுடிப் பதக்க முகமூடிகளும் கல்லறைகளில் வைக்கப் பட்டிருந்தன.

தேஜ் வணிகர் தங்கள் வாணிகப்பொருட்களைக் கடற்கரையில் விரித்து வைத்துத் தங்கள் கப்பல்களுக்குத் திரும்பிச் சென்று, ஆதி குடிசைகளின் கவனத்தை ஈர்க்கப் புகை எழுப்புகின்றனர். நீக்ரோக்கள் கடற்கரையை நெருங்கித் தங்கள் தங்கத்தை அந்த வாணிபப்பொருட்களின் அருகில் வைத்துவிட்டுப் பின் செல்கின்றனர். கார்த்தேஜ் வணிகர் திரும்பி வந்து பார்த்துப் போதுமான அளவு தங்கம் இருந்தால், அதை எடுத்துச் செல்கின்றனர். இல்லாவிடில், தங்கள் கப்பல்களுக்குத் திரும்பிச் சென்று காத்திருக்கின்றனர். அப்பொழுது நீக்ரோக்கள் வந்து, வணிகர்கள் திருப்தி அடையும்வரை, இன்னும் அதிக தங்கத்தை வைத்துச் செல்கின்றனர். இரு சாராரும் அநியாயமாய் நடந்து கொள்வதில்லை. தங்கள் பொருள்களின் மதிப்புக்கு ஈடாய்த் தங்கம் கொடுக்கப்படும் வரை கார்த்தேஜ் வணிகர்கள் தங்கத்தைத் தொடுவதில்லை. வணிகர் தங்கத்தை எடுத்துக்கொள்ளும் வரை, நீக்ரோக்கள் வாணிபப் பொருளைத் தொடுவதுமில்லை”.

மெகலோபோலிஸைச் சேர்ந்த போலிபியஸ் என்ற மற்றொரு கிரேக்க வரலாற்றறிஞர் கார்த்தேஜ் பற்றி நிறைய எழுதியுள்ளார். எலிஸ்ஸா நகரத்தை சிப்பியோசேனை அழித்ததை அவர் நேரடியாகப் பார்த்தவர். மூன்றாம் புனிக் போரின் பார்வையாளர் என்ற முறையில், ரோம், கார்த்தேஜ் ஆகிய இரு நகரங்களுக்கிடையே இருந்த தொடர்பு பற்றி அவர் சிறப்பான அக்கறை கொண்டிருந்தார்: மத்தியதரைப் பகுதியின் அரசிகளான இந்த இரு நகரங்களிடையே இரு உடன்படிக்கைகள் செய்யப்பட்டன: அவற்றின் தேதி, நிபந்தனைகள் ஆகிய விவரங்களை அவர் தந்துள்ளார்: மாசிடோனியாவைச் சேர்ந்த பிலிப்புடன் உடன்பாடு செய்துகொண்ட நேரத்தில், ஹானிப்பல் செய்த சூளுரை பற்றிய தகவலையும் இந்த வரலாற்று அறிஞர் தான் நமக்கு அளிக்கின்றார்.

நாம் குறிப்பிட வேண்டிய மற்றொரு வரலாற்று அறிஞர் டியோடோரஸ் சிக்குலுஸ். சிசிலியில் பிறந்த அவர், அத்தீவைக் கைப்பற்றக் கிரேக்கருக்கும் கார்த்தேஜ் இனத்தவருக்கும் இடையே நடந்த போர்களை சித்திரிக்கின்றார்.

காறான் இனத்தவர் அனைவரிடையும் வழக்கில் இருந்துவந்த நரபலிகள் பற்றிய வரலாற்றையும் அவர் நமக்குத் தருகின்றார். அகத்தோலீஸ் (கி. மு. 310) படையெடுப்பை சமாளிக்க ஆயத்தம் செய்யாமல் படுதோல்வியடைந்த கார்த்தேஜ் இனமக்கள் “தங்கள் தவறுகளுக்குப் பரிகாரம் தேடத் தங்கள் பிரபுக்கள் குடும்பத்திலிருந்து 200 குழந்தைகளைப் பொதுவிடத்தில் பலியிட வேண்டுமென்று உத்தரவிட்டனர்” என்றும், “குற்றம் சாட்டப்பட்ட குடிமக்கள் தாமாக முன்வந்து தங்கள் குழந்தைகளைப் பலியிட்டனர்” என்றும், “இவ்வாறு 300க்கு மேற்பட்ட குழந்தைகள் பலியிடப்பட்டன” என்றும் கி. மு. முதல் நூற்றாண்டில் டியோடோரஸ் குறிப்பிடுகின்றனர்.

யவன வரலாற்று அறிஞர்களில், குறிப்பாக மூவர் பற்றிய நினைவு நம் மனத்திலே எழுகிறது. இரண்டாம் புனிக் போரைத் தத்ரூபமாகச் சித்திரித்து, ஹானிபாலைத் தெளிவாகப்படம்பிடித்துக் காட்டிய லிவி ஃபோனிசியர் பற்றியும் கார்த்தேஜியர் பற்றியும் பெல்லம் ஜுகுர்த்தினம்’ என்ற தமது நூலில் குறிப்பிடும் சாலஸ்ட், நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ள, டைர் இளவரசியான எலிஸ்ஸாவின் வீர சாகச வரலாற்றை எழுதியுள்ள ஜஸ்டின்.

கிரேக்க, லத்தீன் இலக்கியத்தில், கார்த்தேஜ் பற்றிய குறிப்புகள் பல மண்டியுள்ளன. ஆனால் பண்டைய மரபு நூலாசிரியர்கள் தலையாய கவனம் செலுத்தியது கார்த்தேஜ் வரலாற்றில் அல்ல. கார்த்தேஜ் மீது கிரேக்கரும் யவனரும் தொடுத்த போர்களை அவர்கள் சித்திரிக்கப் புகுந்தபோது, கார்த்தேஜ் வரலாறு பற்றியும் அவர்கள் குறிப்பிட வேண்டியதாயிற்று.

இவ்வாறு பண்டைய நூல்களிலிருந்து கார்த்தேஜ் பற்றி நமக்குக் கிடைக்கும் சித்திரம், கார்த்தேஜின் பகைவர்கள் தந்த சித்திரமே. ஆகவே அதற்கு நாம் விளக்கம் காணும்போது, பெரிதும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அவை அனைத்திலும் அடியோடு அவநம்பிக்கை கொள்ள வேண்டுமென்ற அவசியமில்லை. உவகை காழ்ப்பின்றி உள்ளபடியே வரலாற்றை எழுத வேண்டுமென்ற கோட்பாடு, அண்மையில் தான் வரலாற்று அறிஞர்கள் ஏற்றுக் கொண்டுள்ள கோட்பாடு. ஆயினும் புனிக் நாகரிகத்தின் இயல்புகள் சிலவற்றை விளங்கிக்கொள்ள அவர்கள் தவறியதால், பண்டைய வரலாற்று அறிஞர்கள் நமக்குத் தரும் சித்திரம் ஒருதலையானதே.

ஃபோனிசியரிடமிருந்தே அவர்கள் நிலையை அறிந்து கொள்ள நமக்கு வாய்ப்பு கிட்டியிருந்தால், அதுவே மிகச் சிறப்பானதாக இருந்திருக்கும். ஆனால் புனிக் இலக்கியம் பெரும்பாலும் அழிந்துவிட்டது. கார்த்தேஜின் நூல் நிலையம் புகழ் பெற்றது. பண்டைய நூலாசிரியர்கள் அதைப் புகழ்ந்து குறிப்பிட்டுள்ளனர். அவர்களில் பலர் புனிக் நூல்களைப் பயின்றிருந்தனர். முக்கியமாக மூவரைக் குறிப்பிடுவதென்றால், சாலஸ்ட், செர்வியஸ், ஃபெஸ்டஸ் அவெனியஸ் ஆகியோர் புனிக் நூல்கள் பற்றியும் புனிக் ஆவனங்கள் பற்றியும் குறிப்பிட்டுள்ளனர்.

அந்த நூல்நிலையம் நுமிடிய அரசர்களிடம் ஒப்படைக்கப் பட்டது என்றும், பின்னர், இருந்த இடம் தெரியாமலே மறைந்து விட்டது என்றும் மூத்த ப்ளினி கூறுகிறார். வேளாண்மைபற்றி மேகோ எழுதிய நூல்போல, புகழ்பெற்ற புனிக் எழுத்துகளில் சில பகுதிகளே பாதுகாக்கப்பட்டன. “மேகோவுக்கு நம் செனேட் சிறந்த மரியாதை செய்தது. கார்த்தேஜின் வீழ்ச்சிக்குப் பின், நகர நூல் நிலையங்களை ஆஃப்ரிக்க அரசர்களிடம் ஒப்படைக்கச் செனேட் ஆணையிட்டது. ஆனால் கேட்டோ அது போன்ற ஒரு நூலை எழுதியிருந்த போதிலும், குறிப்பாக மேகோவின் 28 புத்தகங்களை லத்தீன் மொழியில் மொழிபெயர்க்க வேண்டுமென்று அது ஆணையிட்டது. புனிக் மொழியில் தேர்ச்சி பெற்றவர்களிடம் அப்பணி ஒப்படைக்கப்பட்டது. உயர் குலத்தைச் சேர்ந்த டிசிலானஸ், முக்கிய மொழி பெயர்ப்பாளராகப் பணியாற்றினார்,” என்று ப்ளினி எழுதுகிறார்.

புனிக் கையெழுத்துப் படிகள் அழிந்து போனதற்கு முக்கிய காரணம் வட ஆஃப்ரிக்காவின் தட்ப வெப்பநிலை. துனீசியாவில் வெப்பம் அதிகமாயிருந்ததால், பாப்பிரஸ் ஏடுகளைப் பாதுகாக்க இயலவில்லை.

ஆனால் செமிட்டிக் இலக்கியமான

வளையங்களின் கடவுளர்

துனீசிலுள்ள பார்டோ பொருட்காட்சி மனையின் இவ்விரு தங்க மோதிரங்களும் கார்த்தேஜ் பொற்கொல்லரின் திறமையையும் நுண்ணறிவையும் காட்டுகின்றன. மேலே: ஒரு கையில் கிலுகிலுப்பையும் மற்றொன்றில் தாமரைப் பூவுமுடைய எகிப்தியக்கலை இயல்புள்ள கடவுள் (கி. மு. 3ஆம் நூற்றாண்டு) கீழே: கார்த்தேஜிய ஹெர்மிஸ்; கார்த்தேஜியரும் கிரேக்கரைப் போலவே இவரை வாணிகம், சொல்வன்மை ஆகியவற்றின் கடவுளாகக் கருதினர். தூதுவராகிய இவரது கைக்கோல் கார்த்தேஜின் நடுகல் பலவற்றில் பொறிக்கப்பட்டுள்ளது.

Photos Luc Joubert © Archaeologia Viva

கடந்த கால கார்த்தேஜ் எங்கே?

From "Les Pheniciens" by Jean Mazel (Robert Loffont, Paris)

தோராவின் மூலம், புனிக் நாகரிகத்தின் சில இயல்புகளை நம்மால் அறிந்து கொள்ள முடியாது. டைர் நகரின் வழித் தோன்றல் கார்த்தேஜ், பெனி இஸ்ரேலின் வரலாற்றையும் பண்பாட்டையும் உருவாக்குவதில் டைர் நகரம் முக்கிய பங்கு கொண்டு செல்வாக்கு செலுத்தியது. 'அரசர்கள் நூல்,' டைர் அரசர் ஹீராம் பற்றியும், இஸ்ரேல் அரசர், டேசிடின் மகன் சாலமன் பற்றியும் நமக்குக் கூறுகிறது. ''டைர் அரசர் ஹீராம் டேவிடிடம் மிகுந்த அன்பு கொண்டவர். டேவிட் அறையில் அவர் மகன் முடிசூட்டப்பட்டார் என்பதை அறிந்த ஹீராம் தம் பணியாளரைச் சாலமனிடம் அனுப்பினர்'' என்று ஐந்தாம் அதிகாரத்தில் கூறப்படுகிறது.

''என் தந்தை டேவிடை எல்லா மருங்கிலும் போர்கள் சூழ்ந்திருந்ததால், அப்போர்களைத் தம் பாதங்களின் அடியில் இறைவன் வீழத்தும் வரை, இறைவன் பெயரில் கோயில் கட்ட அவரால் இயலவில்லை. ஆனல் இறைவன் எனக்கு அமைதி அருளியுள்ளார். எதிரியோ, இடுக்கணோ, என்னை எதிர் நோக்கவில்லை. ஆகவே என் இறைவன் பெயரில் திருக்கோயில் கட்ட நான் முற்பட்டுள்ளேன்......ஆகவே லெபனன் நகரத்திலிருந்து செடார் மரங்களை வெட்டி எனக்கு அனுப்புமாறு உத்தரவிடுங்கள்,'' என்று ஹீராமுக்குச் சாலமன் செய்தி அனுப்பியதாகவும் அந்த அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது.

ஃபோனிசியக் கலாச்சாரம் பற்றிய குறிப்புகள் பல விவிலியத்தில் காணப்படுகின்றன. கார்த்தேஜ் உலகத்தில் எட்டிப்பார்க்க அவை நமக்கு வாய்ப்பு அளிக்கின்றன.

ஆனல் இலக்கியச் செய்திகளை மட்டும் கொண்டு, கார்த்தேஜ்பற்றியகேள்விகள் அனைத்திற்கும் நாம் பதில் கூறமுடியாது. நாம் மற்றஉதவிகளையும் நாடவேண்டும். குறிப்பாகத் தொல்பொருள் அகழ்வாராய்ச்சியாளரின் உதவி தேவை.

மூன்ரும் புனிக் போரின் முடிவில், கார்த்தேஜை அழிக்க, ரோமன் செனேட் ஆணையிட்டது. கி. மு. 146இல் சிப்பியோவின் சேனை இந்த உத்தரவை நிறைவேற்றியது. நகரைச் சூறையாடி அழித்தபின், மீண்டும் துளிர்த்து வளரா வண்ணம், கார்த்தேஜ் மண்ணிலே உப்பைக் கலந்து உழுதனர் யவனப் போர் வீரர்கள்.

ஆனல் அகழ்வாராய்ச்சியாளரைப் பொறுத்தவரை, அதைவிடப் பெரிய ஆபத்தாய் அமைந்தது, மீண்டும் நகரை நிர்மாணிக்கப் பின்னர் செனேட் செய்த முடிவு தான். இந்த முயற்சிகளில் முதல் முயற்சி கி. மு. இரண்டாம் நூற்ருண்டில் மேற்கொள்ளப்பட்டது. 6,000 மக்களைக் குடியேற்றி, 'காலனியா ஜுனேனியா கார்த்தேஜோ'வை நிறுவ லெக்ஸ் ரூப்ரியாவை செனேட் உறுதிப்படுத்தியது. ஆனல் அப்பொழுது வேலை தொடங்கவில்லை. சாதகமான சூழ்நிலைகள் இல்லாததால் வேலைத் திட்டம் கைவிடப்பட்டது. ஓராண்டுக்குப் பின், லெக்ஸ் மினுஸியா, முந்திய உத்தரவை ரத்து செய்தது.

ஆனல் சீசர்கள் காலத்தில், குறிப்பாக அகஸ்டஸ் ஆட்சியில், பண்டைய டைர் நகரம் இருந்த இடத்தில் ஒரு புதிய ரோமன் நகரமே உருவாக்கப்பட்டது.

புனிக் அகழ்வாய்வுக்கு உண்மையில் பேரபத்தாய் அமைந்தது இதுதான். முன்பு சூறையாடியவர்கள் கையில் தப்பி ஒரு சிறிதும், நகரை நிர்மாணிக்கும் பணியாளரால் அடியோடு அழிக்கப்பட்டது. பண்டைய நகரத்தின் சின்னங்களை நிர்மூலமாக்குவதில், தொழிலாளர், சர்வே பணியாளர், கட்டடக் கலைஞர் ஆகியோர் பங்கு கொண்டனர். புனிக் கட்டடங்களிலிருந்து கிடைத்த பொருள்கள், முதல் யவனக் கட்டடங்களுக்குப் பயன்பட்டன. இரண்டாம் நூற்ருண்டில் கார்த்தேஜை வாட்டிய தீயில், இக் கட்டிடங்களும் அழிந்தன.

ஒரு சில துணுக்குகள் இவற்றில் தப்பி நமக்குக் கிடைத்துள்ளன. கடலிலிருந்து லா மால்காவுக்குச் செல்லும் சாலையில் யவனர் பிந்திய காலத்தில் அமைக்கப்பட்ட ஒரு வில்லாவில் அகழ்வாய்வு செய்யப்பட்டபோது, சிறப்பான ஒரு புனிக் கல்வெட்டுச் சாசனம் நமக்குக் கிடைத்துள்ளது. துரதிருஷ்டவசமாக இதில் ஒரு பகுதி தான் காணப்படுகிறது. மூன்றில் ஒரு பகுதி அழிந்து விட்டது. ஆகவே வாசகத்தைப் படிப்பதும் பொருள் காண்பதும் கடினமாகியுள்ளது. இருந்த போதிலும், இந்தச் சாசனக் கண்டுபிடிப்பு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது.

இது போன்ற சிரமங்கள் தான், புனிதச் சின்னங்களை நாடும் அகழ்வாய்வாளரை எதிர்நோக்கியுள்ளன. 1857இல் ப்ளாபே அந்த இடத்துக்குச் சென்று, முக்கிய தொல்பொருள் சின்னங்களாகிய அரண்மனைச் சுவர்கள், ஆலயங்கள் ஆகியவற்றின் அறிகுறிகளைக் கண்டெடுக்க முயன்ருர். ஆனல் அவர் பெரிதும் ஏமாற்றம் அடைந்தார். அகழ்வாய்வாளர் பலர் ஒருவர் பின் ஒருவராய், கார்த்தேஜ் நோக்கி விரைந்தனர். சிறப்பான பல யவனச் சின்னங்களைக் கண்டுபிடித்தனர். ஆனல் புனிக் கார்த்தேஜ் எங்கே?

1878 ஏப்ரல் 7ஆம் தேதியன்று, கார்த்தேஜ் நகரத்தைப் பாதிரியார் ஆல்பிரட் டெலட்டாட்ரே கண்டுபிடித்தார். கல்லறைகளில், விலையுயர்ந்த இறுதிச்சடங்குப் பொருட்கள் பல — பீங்கான்கள், அணிகள், தாயத்துகள், முகமூடிகள் ஆகியவை — கண்டுபிடிக்கப்பட்டன. சிலவற்றில் எழுத்துச் சாசனங்களும் கண்டு பிடிக்கப்பட்டன. இந்த ஆதாரங்கள் போதுமானவையல்ல என்பதை வரலாற்று அறிஞர்கள் எடுத்துக் காட்டுவது நியாயமே. ''இந்த கல்லறைகளில் கண்டுள்ள மண்பாண்டப் பொருட்களை மட்டும் வைத்துக் கொண்டு, கார்த்தேஜின் பொருளாதார வரலாற்றை மீண்டும் உருவாக்க இயலும் என்று நாம் எதிர்பார்க்கக் கூடாது,'' என்று பிரெஞ்சு அகழ்வாய்வாளர் ஸ்டீபன் க்ஸெல் எச்சரிக்கின்ருர்.

கல்லறைகளில் வைக்கப்பட்டுள்ள பொருட்களை பார்க்கும் போது, மரணத்திற்குப் பின்னும் வாழ்வு உண்டு என்பதில் அவர்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர் என்று தெரிகிறது. மற்ற பண்டைய மக்களைப் போலவே, கார்த்தேஜியரும், சவத்தின் அருகே அல்லது சாம்பலின் அருகே, பீங்கான் சாமான்கள், மண்பாண்டங்கள், கிண்ணங்கள் விளக்குகள், இரத்தினக் கற்கள், காதணிகள்,

(தொடர்ச்சி 47ஆம் பக்கம் பார்க்க)

எழுத்துப் புரட்சி

33 நூற்ருண்டுகளுக்கு முன் பினீசியர்கள் 22 அடையாளங்களுள்ள எழுத்துக்களைக் கண்டுபிடித்து மனித நாகரிக வரலாற்றில் ஒரு புரட்சியை ஏற்படுத்தினர். மேலேயுள்ள அட்டவணை பல நூற்ருண்டுகளாக உருவாகிய 15 பினீசிய எழுத்துக்களைக் காட்டுகிறது. 2ஆம் வரிசையில் காணப்படுபவை சற்று மாறுபட்ட கார்த்தேஜிய மொழி (இது கார்த்தேஜில் பேசப்பட்ட பினீசிய பேச்சுவழக்கு மொழி) அடையாளங்கள். பிறகு ஏற்பட்ட மாற்றங்கள் கிரேக்க எழுத்துகளிலும் (3ஆம் வரிசை), இலத்தீன் எழுத்துக்களிலும் (இறுதி வரிசை) காணப்படுகின்றன.

மாயச் சதுரம்

7 வேலைப்பாடுகள் 7 முறை பொறிக்கப் பட்டுள்ள 3-4ஆம் நூற்றுண்டைச் சேர்ந்த இச் சிறு கார்த்தேஜிய தகடு(4 செமீ. சதுரம்) கல்லறை ஒன்றில் கண்டெடுக்கப் பெற்றது. சுண்ணும்புக் கல்லில் செய்யப்பட்டு பச்சை வண்ணம் பூசப்பட்ட இதில் ஒவ்வொரு வரிசையிலும் 7 முறை பொறிக்கப்பட்ட ஒரே உருவமுள்ள 49 சதுரங்கள் உள்ளன. இவை மேலிருந்து). டா (கார்த்தேஜ் ஏற்றுக் கொண்ட எகிப்தியக் கைவினைக் கடவுள்; மீன்; பெஸ் (இறகு முடியணிந்த எகிப்திய பொழுது போக்கு கடவுள்; இதுவும் கார்த்தேஜ் ஏற்றுக் கொண்டது); நீர் ஆம்பல்; தவளை; மான்; முதலை. 7, அதன் பெருக்குத் தொகை 49 ஆகியவற்றின் மாய இயல்புகளைப் பண்டைய மதங்களும் இறையியல்களும் வலியுறுத்தின. கார்த்தேஜிய முகமூடிகளைப் போல் இச்சதுரமும் இறந்தோரைக் காக்கும் தாயத்தாகப் பயன் பட்டிருக்கலாம்.

டானிட்டின் பலிபீடம்

கீழே: டானிட்டின் பலிபீடம் (கி.மு. 4-5ஆம் நூற்றுண்டு); கார்த்தேஜில் கலம்போவில் உள்ளது. ''ஔம்'' (தாய்) என்று அழைக்கப்படும் டானிட், கார்த்தேஜின் முக்கிய பெண்தெய்வம். இது தொடக்கத்தில் பினீசியரது கடவுளாக இல்லையெனினும், பிறகு கார்த்தேஜியர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆஃப்ரிக்க அல்லது பிறநாட்டு தெய்வமாக விளங்கியது. இதுவே கார்த்தேஜின் தாய்க் கடவுளாக, ''கொடுப்பவளாக'' மாறியது. முன்னணியிலுள்ள கோயில் போன்ற கல் அமைப்பானது படிகளுள்ள பலி பீடமாகும். அதன் பின்னுலுள்ள நடுக்கல்லில் டானிட்டின் அடையாளமான ''குவளை'' பொறிக்கப்பட்டு உள்ளது. இக்கடவுள் எப்போதும் அருவமான உருவிலே காட்டப்பெற்றது. (பக்கம் 5, 40ஐப் பார்க்க). கீழே வலப்புறம்: சிங்கத் தலையும் பறவையின் இறகு போன்ற உடையுமுள்ள சிறு பெண்தெய்வம் (கி. மு. முதல் நூற்றுண்டு); இது டானிட் பலிபீடக் காவலாள்.

Photo Georges Viollon © Rapho, Paris





Photo Luc Joubert © Archaelogia Viva

வானவூர்தியிலிருந்து எடுக்கப்பட்ட இப்படத்தில் துனீசின் பழைய முஸ்லிம் நகராகிய மதினவைக் காணலாம். சமயக் கட்டடங்கள், மாளிகைகள், விடுதிகள், சந்தைகள், இரைச்சல் எழும் குறுகிய தெருக்கள் மலிந்த மதின துனீசியத் தலைநகரின் வரலாற்றுச் சிறப்புமிகு நடுவிடமாக இலங்குகிறது.

Photo © Andre Martin



துனீஸ்—இஸ்லாமின் அணிகலன்

ஜியார்ஜஸ் ஃப்ரேடியர்



இரண்டாயிரத்து எண்ணூறு ஆண்டுகளான நாகரிகம் 60 சதுரமைலுக்கும் குறைவான பரப்பளவிலே அடுக்கடுக்காக அமைந்து கிடக்கிறது; கார்த்தேஜ் என்பது அந்த இடம். துனீஸ் என்பது அந்நகரம்.

''கார்தேஜ்'' என்னும் பெயர் வெர்ஜிலிருந்து ஃப்ளாபெர்ட் வரையுள்ளோர் இயற்றிய இலக்கியத்திற்கு எழில் சேர்ப்பதாகும்; சில காட்சிகளின் இன்ப நினைவு ஊட்டுவதாகும். வட ஆஃப்ரிக்காவைச் சேர்ந்த நியூமிடியன்ஸ்கள், காலர்கள், யானைகள் இவற்றோடு வந்த ஹனிபாலின் தனித்திறம், அவரின் ''அழியாத'' ஆனால், பயனற்ற வெற்றிகள்; பிறகு ஆஃப்ரிக்காவிற்கு வந்த ரோமானியர்கள், 'கார்த்தேஜை அழிக்க வேண்டும் என்ற நோக்குடைய ''கேட்டோ'' — இத்தகைய் காட்சிகளை தோற்றுவிக்கின்றன இப்பெயர். கி. மு. 146இல் அது தரைமட்டமாக்கப்பட்டு, முழுதுமாக அழிக்கப்பட்டது. அந்த இடம் சாபக்கேடுற்ற இடமாகியது.

ஆனால், வெற்றி பெற்ற மன்னனின் சாபங்களை பொருளாதாரத் தேவை மிஞ்சிவிட்டது போலும். கி. மு. 44 இல் பண்டைய இடத்தில் நிறுவப்பட்ட ரோமானியர்களின் குடியேற்ற நாடான கார்த்தேஜ் ஒரு நூற்றாண்டிற்குள் 3,00,000பேர்கள் வசிக்கும் முக்கியமான பெரிய நகரமாகி, அங்கு முந்திய நகரை போலவே எண்ணெய், மது, சாயம், கிரேக்கக் கலைப்பொருட்கள் இவற்றிலே வாணிகம் பெருகியது.

ரோமானிய நகர அமைப்பாளர்களின் நேர்வடிவுடைய வீதிகள், நீர்வழிகள், மன்றம், அடுக்குக் கட்டடங்கள், மாளிகைகள். மேலும், வட்டரங்கு, நாடக மேடை, ஆடலரங்கு, கோவில்கள், குளியிடங்கள் இவற்றோடு புதிய கார்த்தேஜ் நிர்மாணிக்கப்பட்டது. ரோம் நகரைத் தவிர்த்த வெளிஉலகில் மிகுந்த சொகுசானவை என்ற புகழ்பெற்ற அந்தோனியன் குளியலறைகளும் அங்கு உண்டு.

ஜியார்ஜஸ் ஃப்ரேடியர் துனீஸ்—கார்த்தேஜ் வளர்ச்சித் திட்ட (யுனெஸ்கோ, ஐ. நா. வளர்ச்சித் திட்ட தனி நிதி) இயக்குநர். இவர் 1947—இல் யுனெஸ்கோவில் சேர்ந்தார். யுனெஸ்கோவின் செய்தித் துறைத் தலைவராகவும் பணியாற்றினார். கிழக்கு, மேற்கு நாடுகளின் பண்பாடுகள் பற்றிய ''என்கௌண்டர்ஸ் அண்டு செலப்ரேவுன்ஸ்'', (எதிர்நோக்கும் பாராட்டுதலும்) 1968, ''ஈஸ்ட் அண்டு வெஸ்ட், டுவார்ட்ஸ் மியூச்சுவல் அண்டெர்ஸ்டாண்டிங்'' (கிழக்கும் மேற்கும், ஒன்றையொன்று அறிதல்) 1959, ஆகியவை இவர் எழுதிய நூல்கள். இவை யுனெஸ்கோ வெளியீடுகள். இப்போது கிடைப்பதில்லை. யுனெஸ்கோ கூரியரில் இவர் அடிக்கடி எழுதுவதுண்டு.

ஆலிவ் மர மசூதியில் தலைநகரின் தோற்றம்

இத்தாலிய வணிகர்கள் அவர்களோடு இணைந்த ப்யூனிக் வணிகர்கள், ரோமானியக் குடியேற்ற நாட்டின் சொற்பொழிவாளர்கள், புலவர்கள், சமயத்தலைவர்கள், படைத்தலைவர்கள் ஆகியோர், பிற்காலத்தில் பேச்சாளர்களையும் சமயவாதிகளையும் கூட்டிவந்த முரட்டுப்படைத் தலைவர்கள், இன்னும் பிற்காலத்தில் பைசான்டின் நாட்டின் கடற்படை வீரர்கள் இவர்களுக்கெல்லாம் ஏற்ற நிறைவமைந்த நகரமாக கார்த்தேஜ் விளங்கியது. ஏழு நூற்றாண்டுகளாக, கார்த்தேஜ் நகரம் புதிதுபுதிதாகச் சீரமைக்கப்பட்ட கனவு நகரமாகப் பொலிந்தது. கி.பி. 698இல் ஹசன் இபின் நோமன் இந்நகரைக் கைப்பற்றிய பொழுதும், தன் முக்கியத்தை உணர்ந்த மிடுக்குடன் அது விளங்கியது. அப்பொழுது எரிமலைக் குழம்பினடியில் நீண்ட நாள் தூங்கிக் கிடந்த பாம்பி நகரத்தை மக்கள் மறந்து விட்டனர். பழமையை ஆராய்வோரும் புலவர்களும் பின் நூற்றாண்டிலே கண்டு கொள்ளும்படி பாம்பே நகரத்தை மூடிப் பாதுகாத்த எரிமலை கார்த்தேஜ் நகருக்கு கிட்டவில்லை. லண்டன், டிரிவிஸ், லியான், நிமிஸ், ரோம், நகரங்களைப் போன்றே கல் சுரங்கமாகவே அந்நகர் ஆகியது. ஆனால். ஐரோப்பிய நகரங்களின் நினைவுச் சின்னங்களை இடித்து அழித்தோர்களைப் போலன்றி, கார்த்தேஜ் நகரிலிருந்து கற்களைக் கெல்லிச்சென்றவர்கள், பாழடைந்த கோவில்கள் நின்ற இடங்களில் வேறெதையும் கட்டவில்லை.

ஹசனும் அவன் வழிவந்தோரும் கார்த்தேஜ் நகரின் கற்களை தொலைவிலுள்ள கைருவான் போன்ற இடங்களில் கட்டுவதற்குப் பயன் படுத்தினர். ஓராண்டன்று, பத்தாண்டன்று, பதின்மூன்று நூற்றாண்டுகளாக தூண்களையும் முகப்புக் கற்களையும் அகற்றிச்சென்று, மசூதி, அரண்மனைகள் கட்டுவதற்கும் சிலைகள் வடிப்பதற்கும் சுண்ணாம்புக் காளவாயில் போடுவதற்கும் வீதிகளில் பதிப்பதற்கும் பயன்படுத்தினர். இது தீயெண்ணத்துடன் செய்யப்பட்டதன்று. இவ்வாறுதான், அலையலையாய் பழையதின் மேல் புதிதாக நாகரிகம் அமைகின்றது; வாழ்வு செல்கின்றது. எதிர்ப்படைகளுக்கு சில வேளைகளில் இடமளிக்கும் நினைவுச் சின்னங்கள் சில, எவ்வாறோ, இன்னும் நிற்கின்றன. கி.பி. 1270இல், புனிதர் லூயி படையெடுத்த பின் எல் மேஸ்தனீர் என்ற சுல்தான் மிஞ்சி நின்ற அனைத்தையும் அழித்து விடுமாறு உத்தரவு இட்டார்.

பழைய நிலையில் இருக்கும் கரை வழியாகச் சென்று, பாதி அழிந்திருக்கும் குன்றுகளின் மேலேறி, மாளிகைகளுக்கும் சிறுதோட்டங்களுக்கும் இடையிலே நடந்து செல்லும் பயணிக்கும் எதிர்ப்படுவது பழைய கார்த்தேஜ் ஆகும். அங்குமிங்குமாக வானோக்கி நிற்கும் கல் தூண்கள், புல் வழியாக எட்டிப் பார்க்கும் பல்நிறப் பளிங்குகள், சாய்க்கப்பட்ட கட்டடங்கள், மணலுக்கும் சரளைக்கும் மேல் நீட்டிக் கொண்டிருக்கும் புதையுண்ட சுவர்கள்—— இவையனைத்தும் பண்டைய நகரத்து முன்னாள் ஒழுங்கமைப்பின் பாழ்டைந்த நினைவை ஊட்டுகின்றன.

ப்யூனிக் தெய்வங்களும் அவற்றைக் காத்து நின்றோர்களும் இறுதியாக அடைக்கலம் புகுந்த பைர்சா குன்று இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. இன்னும் அகழ்வாராய்ச்சி செய்ய வேண்டிய பாழ்வெளி 900 ஏக்கராகும்.

புதிதாக விளக்கங்கண்ட ஒரு மொழியைப் போல், பண்டையக் கார்த்தேஜைக் கண்டுபிடித்து, உயிரூட்டி, புதிய உட்பொருளை நாம் காணலாம். ஆனால், மாளிகைகளை அமைப்போரும், வீடுகளைக் கட்டும் மக்கட்பெருக்கமும் அடைசாந்தினால் அனைத்தையும் மூடி விடுவதற்குமுன், கார்த்தேஜ் நகர் மீது பற்றுடன் பொறுப்புள்ளவர்கள் உறுதியோடு அதைத் தடுக்க வேண்வதற்கான வசதிகளைப் பெற வேண்டும். அவர்களுக்குப் பணவளத்தோடு சட்ட, நிர்வாக நடவடிக்கைகள் எடுப்பதற்கு உதவியும் தேவையாகும். அவர்களுக்குச் சட்டப்படி அதிகாரம் கிடைத்து விட்டால், தேவையான பணம் கிடைக்கும் என்பதற்கு ஐயமில்லை.

பண்பாட்டைப் பேணுவதைப் பற்றிய இக்கட்டுரை அழிக்கப்பட்ட பண்டைய நகரத்தையும், செழிப்பும் வளமுங் கொண்ட இன்றைய தலைநகரத்தையும் குறித்து அக்கறை கொள்ளுவது வியப்பளிக்கலாம். துனீஸ் நகரம் பிறந்தது கார்த்தேஜ் நகரிலிருந்துதான்; அதனாலேயே கார்த்தேஜ் இறுதியில் அழிந்தது. ஆனால், இன்று துனீஸ் நகருக்கு ஆபத்தாக உள்ளது மக்கட் பெருக்கமேயாகும். வரலாற்று முக்கியம் இல்லாத நகரங்கள் மட்டுமே இந்த விசித்திர நிலையிலிருந்து தப்ப முடியும். துனீஸ் நகரமோ வரலாறு கொழிப்பதாகும்: நிர்வாகம், கைத்தொழில், வாணிகம், உலகப் பயணம் இவற்றுக்கு முக்கிய நிலையமாக உள்ளது, துனீஸ். இன்னும் அது விரிவடைந்து வருகிறது. இளவயதினரைப் போல் வளர்ச்சியில் விளையும் வேதனையை அனுபவிக்கிறது.

1925-ல் துனீசின் மக்கள் தொகை 1,86,000; அது 1966இல் 4,70,000 ஆகியது. நகரைச் சுற்றிக் கடலருகே குடியிருக்கும் மக்களைப் புறக்கணித்துவிட்டு நகரத்திற்கு மட்டுமே திட்டமிடுவது பயனற்றதாகும் என்பதை நகர வளர்ச்சித் திட்ட நிறுவனங்கள் சில ஆண்டுகளாக அறிந்துள்ளன. நான்கு ஆண்டுகளுக்கு முன் இந்த ‘‘விரிந்த துனீசின்’’ மக்கள் தொகை 8,00,000; இந்த நூற்றாண்டு இறுதியில் இது இருபது இலட்சமாக உயரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

கதை முழுவதையும் இந்த எண்களே கூறிவிடுவதில்லை. வளர்ச்சி விகிதத்தின் மாபெரும் வேகம் இதனால் தெரியலாம்; ஆனால், நகர வளர்ச்சியின் அடிப்படைக் கூறுகளை இவை காட்டுவதில்லை. நகர வரலாற்றின் சுருக்கம் இக்கூறுகளை ஓரளவு காட்டுவதாகும். இதிலிருந்து, நெருக்கடிகள், தேவைகள், வறுமையும் வளர்ச்சியும் பின்னி நிற்பது, வழக்க முறையில் தீர்வுகாண்பதன் ஆபத்துக்க்ள், தெளிந்த நோக்குடைய முடிவுகளில் பிறக்கும் வழிகள் இவை பற்றி நாம் தெரிந்துகொள்ளுகிறோம்.

கடலினருகே ஒறு சிறிய குன்று. கடலுக்கும் அக்குன்றுக்கும் இடையில் பெரிய ஏரியும் சதுப்புநிலமும். அக்குன்றின் அடிவாரத்தில் காலத்தோடு பிறந்த சிறு கிராமம். இந்த வணிக வழிப்போக்குச் சந்திப்பையும் நாட்டுப்புறச் சந்தையையும் தான் முதலில் ஜாமா சிட்டௌனாவை அல்லது அமைதியான மசூதியை அமைப்பதற்கும், பின்பு நகரத்தை நிறுவுவதற்கும் ஹசனும், அவன் வழிவந்தோரும் தேர்ந்தெடுத்தனர். தொழுகைக்குரிய இப்பெருமனையில் இருந்து வடக்கிலும், தெற்கிலும், மேற்கிலும் தென்மேற்கிலும், செங்கற் சுண்ணாம்புக் கட்டுமானங்கள் ஆறாகப் பெருகி நீண்டன. சந்தைக்கடை வீதிகள், செல்வர்களின் வீடுகள், விடுதிகள், உயர்மட்டத் தொட்டிகள், கிணறுகள், கிடங்குகள், தொழிற்பேட்டைகள், பள்ளிகள், கல்லறைகள், தோட்டங்கள் இவைகளும் வளர்ந்தன. புறமதில்களால் பாதுகாக்கப்பட்ட இரண்டு நகர் புறச்சேரிகள் பெரிய மசூதியை மங்கச் செய்த கோட்டையுடன் இணைக்கப்பட்டிருந்தன; அவை வணிகப் பயணிகளுக்கும் உழவர்களுக்கும் வரவேற்பளித்தன. மற்ற மசூதிகளின் வளைமாடங்களும் சதுரமான கிளைக்கோபுரங்களும் (பின்னால் எண்கோணப் கோபுரங்களாக மாறியவை) வானை முட்டி நின்றன. நெருக்கமான வீடுகளின் ஒளியான மாடிகள் பெரிய மறைவான வீடுகளைப் பாதுகாத்து கடலையும் புனிதக் குன்றுகளையும் நோக்கி நின்றன. இஸ்லாமிய எகிப்து ஏற்றுக்கொண்ட ரோமானியப் பாணியில் அவ்வீடுகள் அமைந்திருந்தன.

துனீஸ் நகரின் வரலாறானது, படைத்தலைவர்கள் தெய்வீக எதேச்சாதிகாரிகள் ஷேக்குகள் ஆளுநர்கள் இவர்கள் வகுத்த கதையாக அதிகம் இல்லாமல், கட்டடக் கலைஞர்களின் கற்பனையில் எழுந்த கதையாக இருப்பது நமக்கு ஆறுதலளிப்பதாகும். தேனீக்கள் போன்ற மக்களின் நிதானமான வளர்ச்சி, உயிருள்ள உறுப்பின் உயிரணுக்கள் பின்னிப் பிணைந்த தேன் கூட்டு அறைகளின் பொறுமையான பெருக்கம், இவற்றின்

வேட்டையின் இன்பங்கள்

ரோமானிய காலத்தைச் சேர்ந்த கார்த்தேஜிய பன்னிறமணி ஓவியங்களில் வேட்டைக் காட்சிகள் பல காணப்படுகின்றன. கி. பி. 2ஆம் நூற்றாண்டில் ஹேட்ரியன் பேரரசன் வனவிலங்கு வேட்டையில் காட்டிய ஈடுபாட்டினால் அது ரோமானிய பெருங்குடி மக்களின் பொழுதுபோக்காக விளங்கியது.

மேலே வலப்புறம் : 5ஆம் நூற்றாண்டின் கார்த்தேஜிய பன்னிறமணி ஓவியத்தில் வேட்டை காட்சியில் ஒரு சிறுபகுதி.

கீழே வலப்புறம்: வேட்டைக் காட்சிகள் மிகுந்த ஞான நீராட்டுத் தொட்டி. 3ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கிறித்துவ மறைத் தந்தையரான புனித சிப்ரியனுக்கு அர்ப்பணம் செய்யப்பட்ட இத்தொட்டி கார்த்தேஜிய கிறித்துவர்கள் வேட்டையாடுவதில் ஈடுபட்டனர் ஏன்பதைக் காட்டுகிறது.

Bardo Museum, Tunis Photo © Luc Joubert

AQVINIVSET PAVLIANAEIVSCVM
VILLAET DEOG RATIASPROLIBVS

மதினா: பதினொரு நூற்றாண்டுகளாகக் கட்டடக்கலை எழில்

வரலாறாக அது உள்ளது. கட்சிப் பூசல்கள், முற்றுகைகள், கண்டபடியான சண்டை சச்சரவுகள் எல்லாம் பழங்கால நாடகப்பாணியை விரும்புவோர்க்கேற்றபடி இருந்தன. ஆனால் கட்டிட வல்லுநர்கள் வனைந்தபடியான, 760 ஏக்கரில் மதில்களால் சூழப்பட்ட துனீசின், துனீஸ் மதினாவின் உண்மையான வரலாறு, அற்பமான நிகழ்ச்சிகளைத் தவிர்த்து பதினொரு நூற்றாண்டுகளை நம் கண்முன் விரிக்கின்றது.

இயல்பாக, அமைதியை நாடுவோர் என்ற பெயர் பெற்ற சமய வாதிகள், சட்ட அறிஞர்கள், கைவினைஞர்கள், வணிகர்கள் இவர்களைக் கொண்ட தலைநகரம் வன்முறையிலிருந்து தப்பவில்லை என்பது உண்மைதான். 1050ஆம் ஆண்டில் எகிப்து நாட்டின் காலிப் ஏவிவிட்ட பென் ஹிலால் பெடூயின்களை தீனி நாடிவரும் வெட்டுக்கிளிக் கூட்டத்தைப் போல படையெடுத்ததைப் பற்றி வரலாற்று ஆசிரியர் இபின் கால்துன் கூறுகிறார். முந்நூறு ஆண்டுகளுக்குப் பின்பு மெரினிட்ஸ் என்ற நாடோடி இனத்தினர் அல்ஜீரிய நாட்டிலிருந்து வந்து நாட்டை ஆக்கிரமித்துக் கொண்டனர். பிறகு, 1534இல் கைராத்-தின்-பார்பாரோசாவின் துருக்கிப் படை வீரர்களும், ஓராண்டு கழித்து, ஐந்தாம் சார்லஸின் கொள்ளைக்கார வீரர்களும் வந்தனர். 17ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 18ஆம் நூற்றாண்டின் துவக்கத்திலும் மீண்டும் நடந்த அல்ஜீரிய ஆக்கிரமிப்புகள் பெருமளவில் இல்லாதவை. எனவே, விரைவில் மறக்கப்பட்டன. மொத்தத்தில், அழிவு நேரிடவில்லை; பழிதீர்த்தோ தெய்வத்தைப் பழித்தோ, சமய வெறிகொண்டோ இடித்தழிக்கும் நிகழ்வுகள் நடைபெறவில்லை. அவ்வப்போது பிற நாட்டுப் போர்களின் விளைவால் நகரத்தின் வளர்ச்சியும் வனப்பேற்றமும் தடையுற்றன. அந்தந்த இடைக்காலத்திற்குப் பின்பு, மீண்டும் கட்டடம் கட்டுவோர், தச்சர், சிற்பிகள், வேய்வோர், பூசுவோர், கண்ணாடி அமைப்போர் இவர்கள் பாடுபட்டு உழைத்தனர்.

இவர்களின் வேலைப்பாடுகள் அநேகமாக முழுதும் அங்கு இருக்கின்றன. அழிந்துபோன கோட்டைச் சுவர்களின் தடையங்களை இன்றும் அகன்ற வீதிகளிலே காணுகிறோம். மறைந்து நிற்கும் அச்சுவர்களுக்குள் அடங்கியுள்ள நகரத்தில் சிறிதளவு நடந்து சென்றாலே அது ஒரு புனிதப் பயணம் ஆகிவிடுகிறது. வீதிகள், சந்துகள், முட்டுச் சந்துகள் இவற்றைக் கடந்து அரண்மனைகள், வழிபாட்டு இடங்கள், மொட்டையாக நிற்கும் கட்டட முகப்புகள், வளைவுகள், இவற்றின் பின்னணியாக வரைவெளிகள் இவற்றைக் காணுகிறோம். இது மட்டுமன்றி, இவற்றைப் புனைந்து நிறுவியோர் நம்மை வரவேற்று நிற்பதைப் போன்ற உணர்வும் அவர்களது கனவாற்றலும் நமக்குப் புலப்படுகின்றது.

இந்த அற்புதங்களைப் ‘புல்டோசர்’ இயந்திரங்கொண்டு தரைமட்டம் செய்யப் போவதாக இன்று திடீரென்று அறிவித்தால் எவரும் அதிசயப்படமாட்டார்கள். கலைப்பேழைகளாக ஒரு காலத்தில் விளங்கிய ஐரோப்பிய நகரங்கள் பல, ‘பண்பாட்டின்’ ஈனக் குரலுக்குச் செவி சாய்க்காத ஈரமற்ற கட்டட நிர்மாணிகளால் இந்த வினாடியில்கூட அழிக்கப்படுகின்றன; அங்கு தற்காலத்திய மட்டமான தரமுள்ளவையே இடம் பெற இருக்கிறன.

பொதுப் பணியில் ஆர்வங்கொண்ட சிலர், போக்குவரத்துச் சிக்கலைத் தீர்ப்பதற்கென துனீசின் தரையைக் குடைவதற்கான திட்டங்களை ஏற்கனவே வகுத்துள்ளனர். இத்திட்டம் அச்சிக்கலைத் தீர்க்க உதவப் போவ்தில்லை. தல ஆள்வையர்களின் நல்லுணர்வுதான் அத்திட்டத்தை நிறுத்திவைத்துள்ளது. வேண்டுமென்றே மேலே பயன்படுத்தப்

Photo © Roger-Viollet, Paris

பூவண்ண வடிவியல்

துனீசில் 19ஆம் நூற்றாண்டில் கட்டப்பெற்ற டார் ஹாசேன் அரண்மனைச் சுவர்க்ளில் காணப்படும் சித்திர வேலைப்பாடு போன்ற சிக்கலான பூவணி வேலை (இடப்புறம்). இன்று இந்த அரண்மனையில் தொல் பொருளாய்வு கலைகள் தேசிய நிறுவனமும் அராபிய இஸ்லாம் பொருட்காட்சி மனையும் உள்ளன. நீண்ட காலமாக கார்த்தேஜின் புறநகர்ப் பகுதியாக இருந்த பண்டைய துனீஸ் கி. பி. 7ஆம் நூற்றாண்டின் அராபிய படையெழுச்சிக்குப் பிறகு தலைநகராக மாறியது. பூவணி வேலைப்பாட்டுக் கலை பாபிலோனிலிருந்து பாரசீகத்துக்குப் பரவியது. அராபியர் அதை வட ஆஃப்ரிக்காவிலும் மேல்நாடுகளிலும் பரப்பினர். வலப்புறம்: துனீசிலுள்ள மதினாவில் நுண் செதுக்கல் வேலைப்பாடுகள் செறிந்த பண்டைய வாயிற்கதவு நகரினுள்ளேயுள்ள இந்நகரின் இஸ்லாமியக் கலை, கட்டடக் கருவூலங்களுள் இஃது ஒன்றாகும்.

நிலைத்து நிற்கும் மாயக் குறிகள்

Photos © Luc Joubert

கி. மு. 4ஆம் நூற்றாண்டின் நடுவில் டானிட் எனும் அன்னைக் கடவுள் பால் ஹாமனுக்குப் பதிலாக கார்த்தேஜின் தலைமைக் கடவுளாக மாறியது. அதன் பலிபீடத்திலுள்ள நடுகல்லில் காணப் படும் உள்ளங்கையும் (இடப்புறம் மேலே), கீழ்நோக்கி வளைந்த பிறைக்குக் கீழேயுள்ள குவளையும் அக்கடவுளின் அடையாளங்கள். (பக்கம் 33-ஐப் பார்க்க). தற்கால துனீசியாவின் இவ் வெழில் கொளுவியில் (கீழே) பிறையும் உள்ளங்கையும் நற்பேற்றின் அடையாளமாக விளங்குகின்றன. இன்று இவ் வேலைப்பாடு மத்தியதரைக்கடல் பகுதிகளில் ‘‘பாத்திமாவின் கை’’ என்றழைக்கப்படுகிறது. இவ்வடையாளங்களின் மதக்கோட்பாடுகள் இப்போது மறைந்துவிட்டபோதிலும், பண்டைய மாயக் குறிகள் எவ்வாறு நிலைத்து நிற்கின்றன என்பதை இவை காட்டுகின்றன.

Photo © Andre Martin

பட்ட ‘‘புனிதப் பயணம்’’, ‘‘காண வருவோர்’’, ‘‘வேலி சூழ் நகரம்’’ என்பன போன்ற சொற்கள் வேறுவகை ஆபத்தைச் சாடையாகச் சுட்டுகின்றன. துனிசின் மதினா மற்ற நகரங்களைப் போன்றதாக இப்பொழுது இல்லையா? விந்தை விரும்புவோர்க்கென ஒதுக்கப்பட்ட இடமா அது? என்ன நடந்துவிட்டது? இந்த வினாக்கள் நம் மனத்தில் எழுகின்றன.

இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேலாக நகரின் கீழ்ப்பகுதியில் பிரான்சுத் துறைமுகம் என்று அழைக்கப்படும் கடல் நுழைவாயிலின் அருகில் ஒன்றின் மேலொன்றாக நெருங்கிய கிடங்குகளை வைத்திருந்த கிறித்துவ ஐரோப்பிய வணிகர்கள் 1860 வாக்கில் நகர்ச் சுவர்களுக்கு வெளியே வந்து சரக்குக் கிடங்குகளையும் குடியிருப்புக்களையும் நிறுவினார்கள். ஒழுங்கு குலைந்த நிலையில், ஆனால் தீங்கு விளைக்காத வகையில், அவர்கள் குடியமர்ந்தனர். இது துனீசின் மாற்றத்திற்கு முன்னோடியாக அமைந்தது. பதினோரு நூற்றாண்டுக் கால அமைதியான வரலாற்றின் முடிவு என்று இதைக் கூறுவதுண்டு. இருபது ஆண்டுகள் கழித்து ஃபிரஞ்சுக் காப்பரசு வந்தது. ஆனால், அது அழிவு ஏதும் செய்யவில்லை; மாறாக, ஃபிரஞ்சுக்காரர்கள் தற்காலக் கட்டடக் கலைஞர்களாக இருந்தனர். குடியேறியவர்கள், துறைமுகத்தினருகே சிதறிக் கிடந்த கிடங்குகளிலிருந்து, அதிகச் செலவில்லாமல், ஆனால், பெருமை உணர்வோடு, பெருந்தோற்றப் பாணியிலே எண்ணியாக்கிய குடியேற்ற அப்புது நகரத்தின் நேரான நிழற்சாலைகளும், நேர் கோண வீதிகளும், கட்டப்பலகை போன்றமைந்த படை முகாம்களும் பழைய துனீசை விட்டுத் திரும்பி ஏரியின் கரையிலே விரிந்து வளர்ந்தன. புது நிர்வாகக் கட்டடங்கள், வங்கிகள், இல்லங்கள், கடைகள், அறை மனைகள், சிற்றுண்டி இல்லங்கள், விடுதிகள், நாடக மன்றங்கள், திரைப்பட மன்றங்கள் இவை ஆண்டுதோறும் பெருகின. 1970இல், ஏரியை முழுமையாகச் சுற்றி இன்னும் கட்டிடங்கள் எழவில்லை; வடக்கும் தெற்குமாக நிழற்சாலைகள் நீண்டு கிடக்கின்றன; வானுயர் வதியம் ஒன்று எழும்பியுள்ளது; புதிய நிலையங்கள் தோன்றிக் கொண்டிருக்கின்றன; சில தொழிற்சாலைகளிலிருந்து புகை எழுகின்றது; சொகுசான மாளிகைகளின் நடுவிலே பல்லடுக்கு விடுதி ஒன்று தலைநிமிர்ந்து நிற்கிறது. அவ்விடுதியின் மறுபுறம், புதிதாகக் கட்டப்பட்ட வருந்தத்தக்கதோர் சிறு நகரம் ஒன்று உள்ளது; இதனால் துனீசின் கவர்ச்சி எதுவும் குறைந்துவிடவில்லை. தற்கால ‘‘ஐரோப்பிய’’ நகரமாக, எவரும் குற்றங்காணாத வகையில், துனீஸ் அமைந்துள்ளது. 19 ஆம் நூற்றாண்டு மிலான் நகரம் அல்லது டல்லெஸ் நகர் சேரிகள் இவற்றின் கவர்ச்சி துனீஸ் நகருக்கு இருக்கிறது.

நிர்வாக வணிக நிலையத்தையும், தற்கால நகர வாழ்வின் அளவுகளையும் அடியோடு மாற்றுவதால், நகர வளர்ச்சிக்குப் புதிய திருப்பம் அளிப்பதால், அந்நகர மத்தியிலிருந்த மக்கள் குறைந்து வருகின்றனர். சமய நிலையமான மதினா தனது அறிவுக்கலைப் பெருமையோடு விளங்கி வந்தது. ஆயினும், நகர் வாழ்வுக்கு உயிரூட்டிய அரண்மனைகளிலிநந்து பெருங்குடி மக்கள் வெளியேறி விட்டனர். அவ்வரண்மனைகளை, தலைநகர் என்ற கானல் நீரால் கவரப்பட்டு தொடர்ந்து வந்துகொண்டிருக்கும் நாட்டுப்புற மக்களுக்கு வாடகைக்கு விட்டுள்ளனர். தற்கால வீடுகளுக்கு அப்பால், தம் முன்னோர்கள் வீட்டின் கீழே உருவாகி வரும் அழுக்கடைந்த சேரிகளைப் பற்றி அவர்கள் அக்கறைப்படுவதில்லை. நிலமற்ற உழவர்கள், வேலையில்லாக் கூட்டத்தினர் இவர்கள் அடிக்கடி சுரண்டப்படுவதையும் மக்கட்பெருக்கத்தையும் பற்றிக் கவலைகொள்ள அவர்களுக்கு நேரமும் இல்லை.

நல்ல வேளையாக இந்தப் போக்குப் பற்றி அக்கறைப் படுவோர் இருக்கின்றனர். துனீசின் மதினா வட ஆப்பிரிக்கா

Photo Georges Viollen © Rapho, Paris

நகைசெய்யும் துனீசியர். துனீசியரது வாழ்க்கையில் கைத்தொழில் சிறப்பிடம் பெற்றுள்ளது. 16,000 முதல் 20,000 கைவினைஞர்கள் தலைமுறை தலைமுறையாகப் பெற்று வந்த பண்டைய கலைகளையும் மரபுகளையும் காத்து வருகின்றனர்.

வில் மிகச் சிறந்தது. அதனால், உலகில் மிகச் சிறந்தவைகளில் ஒன்று என்பதையும், ஆயிரத்து நூறு ஆண்டுகள் ஆக்க வேலையின் பழுதுபடாத பலனாக உள்ள கட்டடக் கலை வளர்ச்சி வியப்பூட்டும் வகையில் தொடர்ச்சியாக உள்ளதற்கு அது ஓர் எடுத்துக்காட்டு என்பதையும் அவர்கள் உணர்ந்துள்ளனர். எல்லாவற்றையும்விட, புறச்சேரிகளோடுள்ள அந்நகரம், சில செல்வக் குடிமக்கள் அதைக் கைவிட்டுப் போய்விட்டாலும், அக்கறை இன்மை, தவறாகப் பயன்படுத்தல் இவை இருந்தாலும், பழங்கால மரபும் தற்கால மாற்றமும் கலந்த கவர்ச்சியோடு மிகத் தனித் தன்மையான வாழ்வைக் கொண்டுள்ளது என்பதும் அவர்களுக்குத் தெரியும். தங்கள் நகரத்திற்குப் பொறுப்பான துனீசியர்கள் இதையெல்லாம் அறிவார்கள். எனவே, இங்குமங்குமாகச் சில நினைவுச் சின்னங்களைப் புதுப்பித்து ஓரிரண்டு மாவட்டங்களைக் காட்சிச் சாலைகளாகவும் வெற்றுக் கட்டடங்களாகவும் மாற்றியமைத்து, பழங்கற்களைப் பாதுகாப்பவர்களாக இருப்பதற்கு அவர்கள் இசைவதில்லை. இது அவர்களின் மனச்சான்றை எளிய வகையில் நிறைவு செய்வதே ஆகும்.

துனீசையும் அதன் புறச்சேரிகளையும் கொண்ட தலைநகரத்தோடு மதினாவிற்கு உள்ள தொடர்புக்கேற்ப ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்பதை அவர்கள் தெளிவாகத் தெரிந்துள்ளனர். நகரை நலியச் செய்வதும் வரலாற்றுப் பெருமைக்கு ஊறு செய்வதுமான ஆபத்துக்கள், சமுதாய, பொருளாதாரக் காரணங்களால் எழுவன. சரியான நகர் வளர்ச்சித் திட்டம் எதுவும் இத்தகைய இடர்ப்பாடுகளைத் தீர்க்க வழி காண வேண்டியதாகும். இந்த மூலகாரணங்களை நாம் மறந்துவிடில், பகட்டற்ற முகப்புக்களைக்கொண்ட மதினாவில், குடிசைகளும், பாழடைந்த பள்ளிகளும், மாட்டுக் கொட்டில்களாக மாறிய கல்லறை மாடங்களும் மட்டுமே மிஞ்சும், அதே நேரத்தில் கார்த்தேஜ் நகரம், மோட்டார் வீதிகளும், நடுத்தர அதிகாரிகளின் மாளிகைகளும், பயணிகளின் 'அரண்மனைகளும்', உயர்பொருள் வணிக நிலையங்களும், கொண்டதாக விளங்கும். இப்பிரச்சினைக்கு இது, நிச்சயமாக, எளிதான தீர்வு வழியாகும்.

இத் தீர்வுவழியை நாம் ஏற்பதற்கில்லை. இத்தகைய குற்றங்கள் என்றும் நடைபெறப் போவதில்லை. 1969இல், மதினா பாதுகாப்புக் கழகமும், தொல்பொருள் ஆராய்ச்சி, கலைகள் பற்றிய தேசிய நிறுவனமும் தூண்டியதால், பொருளாதார வளர்ச்சித் திட்டங்களின் பகுதியாக துனீஸ்-கார்த்தேஜ் வட்டாரத்தில் உள்ள நினைவுச்சின்னச் செல்வங்களைப் புதுப்பித்துப் பாதுகாப்பதற்கென முன்னோடித் திட்டம் ஒன்றை துனீசிய அரசாங்கம் தொடங்கியுள்ளது; மேலும் அந்த அரசு ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் யுனெஸ்கோவிலிருந்து உதவியையும் கோரியுள்ளது; 1971 ஜனவரியில், ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டத்தில் இந்த ஏற்பாடு இறுதியாக ஏற்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கார்த்தேஜ் பரப்பிடத்தை அகழ்ந்து பாழ்பொருள்களைத் தக்க முறையில் காட்சிக்கு வைக்கவும், மதினாவில் பாழடைந்து வரும் மாளிகைகளை வாங்கி அவற்றிலுள்ள மரச்சிற்பங்கள், பளிங்குகள், காரை முகப்புகள் இவற்றைப் புதுப்பிக்கவும் வேண்டுமெனில் நமக்குள்ள ஆள்—பொருள் மூலவளம் அற்பமானதாகும். எனினும், நமது உடனடி நோக்கம் அவ்வளவு காட்சிப் பகட்டு உடையதன்று, எனினும், அது ஆள்வினை ஆர்வத்தில் குறைந்ததன்று. உலக நிபுணர்களையும், ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம், யுனெஸ்கோ பிரதிநிதிகளையும் கொண்ட குழுவினர் பொருளாதாரம், தொல்பொருள் ஆராய்ச்சி இக்கோணங்களில் இருந்து துனீஸ்—கார்த்தேஜ் சிக்கல்களை நுணுகி, ஆராய்ந்து, அதற்கான தீர்வுகளைக் கண்டு, புதுப்பிக்கும் வேலைகளின் ஒழுங்கு வரிசையை உறுதி செய்வார்கள். அமைச்சுத் துறைகள் குழுவின் ஆதரவில் பணியாற்றும் இவர்களுக்கு

(தொடர்ச்சி 47 ஆம் பக்கம் பார்க்க)

(20ஆம் பக்கத் தொடர்ச்சி)

கார்த்தேஜ், டையரிடமிருந்து மரபு வழியாக ஒரு மதத்தைப் பெற்றிருந்தது. அம்மதம் நாகரிகமற்ற, குருதி தோய்ந்த சமயச் சடங்குகளைக் கொண்ட ஒரு கலவையாக இருந்தது. இதன் மூலமாக இயற்கையின் வளங்கள் தங்களுக்குத் தொடர்ந்து கிடைக்கும் வழியை உறுதிப்படுத்திக் கொள்ள முடியுமென்று நினைத்தனர். அத்துடன் பண்பாடும், அறிவுடைமையும் சார்ந்த மதகுருக்களின் சமயத் தொடர்புகளையும் இச்சடங்குகள் பெற்றுத் தந்தன. பல்வேறு நகரங்களிலிருந்தும், கோவில்களிலிருந்தும் வந்த மத குருக்கள் சமயக் கருத்துக்கள் பலவற்றை உருவாக்கினர். பல்வேறு கடவுளர்களின் தொடர்பும், சக்தியும் பற்றி மாறுபட்ட நோக்குகளை இக்கருத்துக்கள் கொண்டிருந்தன.

சான்ருக டையர் நகரத்தைய 'சமயக் கணக்கர்கள்' நகரத்தின் காவல் தெய்வமான மால்கார்ட் என்ற மிக்க சக்தி வாய்ந்ததாகவும், பெருமளவில் பயணங்களை மேற்கொண்டதாகவும் கருதப்பட்ட கடவுளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினர். மற்ற சமயத் தனிக்குழுக்கள் தெய்வங்கள் அனைத்தின் தந்தையும், அரசனுமான எல போன்ற அறிவெல்லைக்கு அப்பாற்பட்ட தெய்வங்களை வழிபட்டனர். கார்த்தேஜிய மத குருக்களில் பெரும்பான்மையோர் பிந்திய நம்பிக்கையைப் பின்பற்றவே நாடினர். நிதோவின் நகரத்தில் மால்கார்ட் கௌரவப்படுத்தப்பட்ட போதிலும், எல் தெய்வமே பெருமைக்குரிய இடத்தைப் பெற்றது. ஸெமித்திய மக்களிடம் நிலவி வந்த ஒரு பண்டைய மரபுக்கு ஒப்பி புனித ஆற்றலைப் பெற்றிருந்ததாக மக்கள் நம்பிய அக்கடவுளின் உண்மைப் பெயர் கூறப்படுவதில்லை. மாருக பிரெஞ்சு அறிஞரான ஜே. ஜி. பெவ்ரியரின் விளக்கத்தின்படி உலகளத்தின் இறைவன் எனப் பொருள்படும் 'பாஆல் ஹம்மான்' என்ற சொற்றொடரையே மக்கள் பயன்படுத்தினர்.

கார்த்தேஜுக்கே ஒரு பயங்கரப் பெயரை வாங்கிக் கொடுத்த பலிகளுக்கு பாஆல் ஹம்மான் பீடாதிபதியாகயிருந்தார் என்பதை இப்பெயர் நினைவூட்டுகிறது. இக்கடவுளைச் சிறப்பிப்பதற்காக, கழுத்து வெட்டப்பட்ட பச்சிளம் குழந்தைகள், கடவுள் சிலையின் பாதத்தில் வளர்க்கப்பட்ட உலையில் தூக்கி எறியப்பட்டன.

பலியிடப்படுவதின் தகுதிக்கொப்ப பலி பயன் தரும் என்று நம்பப்பட்டு வந்ததால், கிரேக்க ரோமர்களிடமிருந்து பண்டைக்கால மக்களெல்லோரும் நரபலி பழக்கத்தை மேற்கொண்டிருந்ததில் வியப்பில்லை. அதிமானுட உலகத்தை மனித உலகோடு இணைக்கும் சமயப் பொறுப்பு அரசனைச் சார்ந்தது என்று கருதப்பட்டதால், அவனுடைய ஆற்றல்கள் குன்ற ஆரம்பித்ததும், அவனையே பலி கொடுப்பதை பண்டைய மக்கள் பலர் ஒரு சடங்காகக் கொண்டிருந்தனர். இதன் மூலமாக அவன் உடைமை முழுவதும், அவனுக்கடுத்துவரும் அரசனுக்குக் கிட்டும் என அம்மக்கள் நம்பினர்.

பலியிடப்பட்டோரின் சாம்பல் 'டோபட்' என்று பெயர் கொண்ட புனிதமானஇடங்களில் புதைக்கப்பட்டு, அந்த பலியை நினைவு கூரும் சின்னங்கள் ஆங்கு எழுப்பப்பட்டன.

கார்த்தேஜிலும் தற்காலம் ஸாலாம்போ என்று அறியப்படும் துறைமுகப் பகுதியிலும் ஆஃப்ரிக்கா, ஸார்பீனியா முதலிய இடங்களிலுள்ள பியூனிய நகரங்களிலும் கண்டெடுக்கப்பட்ட டோபட்கள் நரபலி என்னும் இக்கொடிய பழக்கம் நிலவி வந்ததையும் கார்த்தேஜின், வீழ்ச்சி வரை அது தொடர்ந்து இருந்ததையும் ஐயமற எடுத்துரைக்கிறது. ஆனாலும் இறுதிக்கால கட்டங்களில் மத குருக்கள் குழந்தைக்குப் பதிலாக பலியிடுவதற்கு ஓர் ஆட்டுக்குட்டியை ஏற்றுக் கொள்வதுமுண்டு.

கி. மு. ஆறும் நூற்றுண்டிலிருந்து கி. மு. நான்காம் நூற்றுண்டின் துவக்கம் வரை நீடித்திருந்த மாகோனிட் கால கட்டம் தான் 'பஆல் ஹம்மான்' வழிபாட்டு மரபின் உச்ச நிலையாக இருந்தது. அன்று நகரத்திலிருந்த கட்டடங்கள், சிறுசிறு எகிப்திய பாணி ஆலயங்கள், மடங்களைப் போன்ற சின்னஞ்சிறு உருவமைப்புக்கள் டோபட்களை நிரப்பின. ஓர் உயர்ந்த படிக்கட்டின் மேலே சிறு சிறு எகிப்திய பாணி ஆலயங்களும், மடங்களும் இருந்தன. இவற்றின் முன்னிருந்த பலிபீடத்தில் வாசனைப்பொருள்கள் வைக்கப்பட்டன.

அரசர்கள் தாம் கடவுட் பற்றுக்கும் — ஏன் வெறி பிடித்த பக்திக்கும் — முன் மாதிரியாக இருந்தனர். இவர்களில் இருவர் கி. மு. 480ஆம் ஆண்டில் ஹாமில்கரும், கி. மு. 396ஆம் ஆண்டில் ஹிமில்கரும் தங்களுடைய குறைபாடுகளுக்குக் கருவிகளாகத் தங்களையே பலியிட்டுக் கொண்டனர். சிஸிலியன் போர்களில்



Photo Luc Joubert © Archaeologia Viva Bardo Museum, Tunis

நுண் முகமூடி

இம்முகமூடி 2,500 ஆண்டுகளுக்கு முன் செய்யப் பெற்றது. இது கார்த்தேஜ் வரலாற்றினுல் மண் முகமூடிகளின் உற்பத்தி உச்சநிலையடைந்த மகோனிட் வம்ச காலத்தை (கி. மு. 6-5ஆம் நூற்றுண்டு) சேர்ந்தது. ஏளனச் சிரிப்புடன் காணப்படும் இம் முகமூடிகள் கார்த்தேஜில் மதச்சடங்குகளில் பயன்படுத்தப் பெற்றன. (24ஆம் பக்க வண்ணப் படம் பார்க்க).

National Museum Beirut Photo © Jean Mazel

மேற்கு நோக்கி! நீண்ட தொப்பியணிந்த இம்மெல்லிய மண்பொம்மைகள் கார்த்தேஜியரின் முன்னோர்களைக் காட்டுகின்றன. கி. மு. 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இப்பொம்மைகள் அழிந்துபோன பிப்லாஸ் கோயிலில் கண்டெடுக்கப்பெற்றன. பிப்லாஸ் கி. மு. 1,200 வரை பினீசியாவின் முக்கிய நகராக விளங்கியது. பிறகு அதன் வாணிகச் சிறப்பு குன்றவே பினீசிய துறைமுகமாகிய டயர் புகழ் பெற்றது. பிப்லாஸ் சிற்பி இவ்வுருவங்களைச் செய்து வந்தபோது, டயர் நகர் கப்பலோட்டிகள் மத்திய தரைக்கடலில் ஐபீரியத் தீபகற்பம், வட ஆஃப்ரிக்க மேற்கு முனை வரை ஆய மேற்கு நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்.

பஆல் ஹம்மானுக்கும், இந்த தெய்வங்களுக்கும் பல பலிகள் கொடுக்கப்பட்டன. பலி கொடுக்கப்பட்டோரில் பலர் சிறையிடப் பட்டிருந்தோராவார். கி.மு. 409ஆம் ஆண்டில் ஆட்சி செலுத்திய ஹனிபலைப்போன்று, இந்த அரசர்களில் பலர் கிரேக்கர்கள் மீது சமய-இன வெறுப்புக் கொணடிருந்தனர். ஆனால் கொடிய, இம்மனிதர்கள் விலங்கனைய வலிமை கொண்டு நாட்டுப் பற்றினால் உந்தப்பட்டனர். தங்களுடைய நாட்டை மேற்கு மத்திய தரைக்கடல் பகுதியின் பலமிக்க சக்தியாக உருவாக்கினர். இதே காலத்தில் ஏதன்ஸில் தோற்றுவிக்கப்பட்ட பேரரசுக்கு சமமானதாக, வளமுடையதாக தங்கள் நாட்டை ஆக்கினர்.

ஆனால் அதிர்ஷ்டம் தொடர்ந்து அவர்களுக்கு சாதகமாயில்லை. கி. மு. 550-க்கும் 1480-க்கும் இடைப்பட்ட ஆரம்ப கால கட்டத்தில் கார்த்தேஜ் ஸார்பீனியாவை வெற்றிகொண்டது. இதனால் அருமையான கலைப்பொருள்கள் பலவற்றுக்குத் தாயகமாயிருந்த அந்த வட்டாரப் பண்பாடே அழிவுற்றது. (யுனெஸ்கோ கூரியர் செப்டம்பர் 1966 இதழைப் பார்க்கவும்) சிஸிலி, ஸ்பெயின் ஆகிய நாடுகளின் போனீஷிய நகரங்கள் கார்த்தேஜின் ஆதிக்கத்தை ஏற்றுக் கொண்டன. ரோமுக்கு அறுபது கிலோ மீட்டர் தொலைவிலிருந்த எட்ருஸ்கன் நகரான கேயரிலிருந்த பியூனிக் குடியேற்றமும் பிரகி துறைமுகமும் வட்டார அரசியல் விவகாரங்களில் தலையாய இடம் வகித்தன. எட்ருஸ்கியர்களிடமிருந்து கி. மு. 509 இல் ரோம் விடுதலை பெற்றதும், முதலில் அது மேற்கொண்ட நடவடிக்கை கார்த்தேஜுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டது தான்.

ஆனால் கிழக்கிலும், மேற்கிலும் கிரேக்கர்களின் சக்தி வாய்ந்த ஆதிக்கம் விரிவடையலாயிற்று. ஆறும் நூற்றாண்டின் துவக்கத்தில் பாரசீக நாட்டின் காவலர்களான டேரியஸீம், ஸெர்கெஸும் இந்த ஆதிக்கத்தை ஒழிக்கத் திட்டமிட்டனர். கார்த்தேஜுன் மாகோனிட் மன்னரான ஹாமில்காரும் பாரசீக மன்னர்களுடன் கிரேக்க ஆதிக்கத்தை அழிப்பதை இணைந்து செயல்பட்டிருக்கக் கூடும். ஆனால் பாரசீக, பியூனிக் கடற்படைகள் இரண்டுமே அழிக்கப்பட்டன. ஸலாமீஸில் பாரசீகப் படை தோற்கடிக்கப்பட்ட அதே நாளில் பியூனிக் படை ஹிமேராவில் அழிக்கப் பட்டதாகச் சொல்லப்படுகிறது.

இதன் பின்னர் கார்த்தேஜ் வெளியுலகை விட்டுத் திரும்பி எழுபதாண்டு காலம் தன்னுள்ளே முடங்கிக் கிடந்தது. இதனால் தான் ஆதிக்க சக்தியின் அடிப்படைகளை மாற்றியமைத்துக் கொண்டு தன்னை வலுவாக்கிக் கொண்டது. மாமன்னன் ஹனோ எந்த மத்திய தரைக்கடலைச் சார்ந்த நகரும் அடைந்திராத ஒரு பரந்த நிலப்பரப்பை லிபியர்களிடமிருந்து கைப்பற்றிக் கொண்டான். இன்றைய துனீசியாவின் வட கிழக்குப் பகுதியிலிருந்து ஸ்பாக்ஸ், டாபார்கா வரை இந் நிலப்பரப்பு விரிந்து கிடந்தது.

இச்சாதனை நிறைவுபெற்ற உடனேயே கார்த்தேஜ் தோன்றக் காரணமாகயிருந்த மேற்குப் பகுதிகளின் வாணிபத்தின் மீது ஆதிக்கம் கொள்வதற்காக ஒரு பெரும் கப்பற்படைத் தாக்குதலையே துவக்கி விட்டான்.

இவ்வாறு கார்த்தேஜ் வலிமையும்,

இரு நகர்களின் அழிவு

வளர்ச்சியும் பெற பெலபொன்னேஷியன் போர்களால் கிரேக்கம் பலம் குன்றி வந்தது. ஹனோ மாமன்னர்களின் வழித்தோன்றல்கள் கி. மு. 409இல் தாங்கள் ஹிமேராவில் அடைந்த தோல்விக்கு வஞ்சம் தீர்க்க உரிய காலம் வந்து விட்டதெனத் தீர்மானித்தனர். வெங்கொடுமையான ஒரு திடீர்த் தாக்குதல் ஸெலினேண்டே, அக்ரிஜெண்டோ நகரங்களை அழித்தது. ஆனால் சைரகியூசுக்கு முன்னர் இத்தாக்குதல் தடைப்பட்டது. இரு தரப்பிலும் வெற்றி—தோல்வி காண முடியாத ஓர் இழுபறி நிலையைத்தான் குருதி தோய்ந்த இந்த அலைக்கழிப்புப் போராட்டம் உண்டாக்கிற்று. கார்த்தேஜில் போர்க் களைப்பும், அலுப்பும் பரவலாயிற்று. விரைந்து வந்த ஒரு குழுவினர் போரையும், அதை நடத்தி வந்த அரச வம்சத்தையும் எதிர்க்கத் தலைப்பட்டனர். இறுதியில் கி. மு. 470ஆம் ஆண்டு வாக்கில் இக்குழு கடைசி மாகோனிட் அரசனிடமிருந்து அதிகாரத்தைப் பறித்துக் கொண்டது.

ரோமாபுரியுடன் நடந்த முதற்போரின் இறுதிவரை கார்த்தேஜை ஆண்ட மேற்குடியாளர்கள் ஆட்சி மெதுவாக நிறுவப்பட்டது. இருப்பினும் இந்த ஆட்சி தோன்றுவதில் இடையிடையே தடைகள் இருக்கத்தான் செய்தன. கி. மு. 330ஆம் ஆண்டில் அரிஸ்டாட்டில் செய்த கூறுபாட்டாராய்ச்சியின் பயனாக இந்த ஆட்சியின் தன்மைபற்றி நமக்குத் தெரிய வருகிறது. உண்மை அதிகாரம் பிரபுக்களடங்கிய ஒரு குழுவின் கைகளிலும், அதிலும் மேலாகப் பயங்கரப் பெயர் பெற்ற நூற்று நால்வர் கொண்ட ஓர் உரிமைக் காவலர் குழுவிடமும்தான் இருந்தது. புது ஆட்சியைத் தோற்றுவிக்க முயன்றோர் வஞ்சகம், திறமையின்மை என்ற குற்றச்சாட்டுக்காளானோர் எவரையும் இக்குழு இரக்கமின்றி அழித்தது.

சமயத்துக்கும், அரசுரிமைக்கும் இருந்த நெருங்கிய தொடர்பின் காரணமாக, இப்புரட்சியுடன் சமயச் சீர்திருத்தமும் இணைந்தே வந்தது. ஐந்தாம் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்து இதுவரை கேள்விப்பட்டிராத ஒரு புதிய தேவதையும் பஆல் ஹம்மானுக்கருகே தோன்றலாயிற்று. இந்த தேவதை ''கார்த்தேஜின் தேவி''யாக அறியப்பட்டு, அதன் சக கடவுளான பஆல் ஹம்மானையும் விட முக்கியத்துவம் பெறலாயிற்று. இது வானங்கள் மீதும், குறிப்பாக சந்திரன் மீதும் ஆட்சி செலுத்துவதாக நம்பப்பட்டது. இந்த தெய்வம்தான் வளத்தை அருள் செய்தது. இறந்துபட்டோர் நிம்மதியாகத் தூங்குவதையும் இது தான் கண்காணித்தது. பஆல் ஹம்மானை விடக் கொடுமையில் குறைந்த இத்தேவதையை கிரேக்க ஹீராவுடனும், ரோம ஜுனோவுடனும் ஒப்பிடலாம்.

சிஸிலியிலும், தெற்கு இத்தாலியிலும் தேவதைகள் முக்கிய இடம் வகித்தன. கார்த்தேஜ் மக்களும் தங்கள் சமயம் மேற்கூறிய நாடுகளின் மத இயலுக்கு ஒப்ப இருக்க வேண்டுமென விழைந்தனர். இது தான் ''கார்த்தேஜின் தேவதை'' முக்கிய இடத்தைப்பிடித்துக் கொள்வதற்கு சிறப்பான ஒரு காரணமாகயிருந்தது. கி. மு. 396ஆம் ஆண்டில் கிரேக்கர்களின் தானிய தேவதைகளான டெமட்டரையும், கோரேயையும் கூட அதிகார பூர்வமாக கார்த்தேஜில் புகுத்தினர். இத் தேவதைகள், மறு உலகின் கண்ணிகளிலிருந்து எப்படித் தப்புவது என்று தங்கள் பக்தர்களுக்கு போதித்துக் கொடுக்குமாம்.

கார்த்தேஜில் கி. மு. நான்காம் நூற்றாண்டில் சமய நடவடிக்கைகளின் தீவிரமும், உட்சிக்கல்களும் எந்தஅளவுக்கு இருந்தன என்பதை டோபட்களில் கண்டுபிடிக்கப்பட்ட ஒப்பனைகளும், அலங்காரங்களும் ஒருவாறு புலப்படுத்துகின்றன. ஒரு கோடும், வட்டமும் அதற்குள் ஒரு முக்கோணமும் கொண்டது டானிட்டான் சின்னம் என்பது. இது போன்ற அடிக்கடி காணப்படும் சின்னங்கள் தெய்வீகத்தின் பேராற்றலைக் குறிப்பதாகக் கருதப்பட்டது.

கி. மு. முன்னூறாம் ஆண்டு வாக்கில் தான் கார்த்தேஜ் செல்வ நிலையின் உச்சத்தை யடைந்தது. சிஸிலியிலும், இத்தாலியிலும் கிரேக்க ஆதிக்கம் தளர்ச்சியுறலாயிற்று. ஆஃப்ரிக்கா முழுவதையும் அலெக்ஸாண்டரின் பேரரசோடு இணைத்து விட வேண்டுமென்று திட்டமிட்ட அவருடைய வழித் தோன்றல்கள் ஒருவரோடொருவர் போரிட்டுக் கொண்டு தங்கள் சக்தியைச் சிதற விட்டனர்.

அலெக்ஸாண்டருக்கு அடுத்து வந்த அவருடைய இராணுவத் தலைவர்களின் பரம்பரையினர் எகிப்திலும், பண்டைய போனீஷியாவிலும் லாகைத் வம்சம் எனும் பெயரால் ஆட்சி புரிந்து வந்தனர். இவர்கள் பண்பாட்டில் அநேகமாக கிரேக்கர்களாகவே ஆகிவிட்டனர். இவர்களுடன் நெருங்கிய நட்பார்ந்த தொடர்பை கார்த்தேஜ் மக்கள் ஏற்படுத்திக் கொண்டனர். தங்களுடைய மொழியையும், பண்பாட்டையும் இழக்காமலேயே, கிரேக்கப் பண்பாடும், நீல நதி, சிரியா, சிறிய ஆசியா ஆகியவற்றின் நாகரிகங்களும் இணைந்து தோற்றுவித்த புதுச் சிந்தனைகளையும், புதிய கலை வடிவங்களையும் கார்த்தேஜ் மக்கள் தயங்காது ஏற்றுக் கொண்டு அவற்றை மேற்கத்திய நாடுகளிலும் பரப்பினர்.

இதற்கிடையில் கி. மு. நான்காம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இத்தாலியில் ஓர் அசாதாரணமான அரசியல் மாற்றம் நிகழ்ந்தது. அதுவரை பொருளாதார, பண்பாட்டு வாழ்வில் பின் தங்கியிருந்த முக்கியமில்லாத ரோம், எட்ரூரியா, கம்பனியா, கிரேசியா மாக்னாப் பகுதிகளில் வாழ்ந்திருந்த பண்டைய நாகரிக மக்களையும், அப்பென்னீன்சில் பாதி காட்டுமிராண்டிகளாக வாழ்ந்திருந்த கூட்டத்தாரையும் குறுகிய காலத்தில் அடக்கியாண்டது.

ரோமாபுரியின் இந்தத் திடீர் எழுச்சியை பியூனிக் அரசு ஓர் அபாயமாகக் கருதவில்லை; அதற்கு தூர நோக்கு இல்லை யென்றும் குற்றம் சாட்ட முடியாது. புதிய இராணுவ—விவசாய அரசு ஒன்றுக்குத்தான் நெடுங்காலம் பல ஒப்பந்தங்களின் மூலமாக நட்புறவு கொண்டிருந்த ஒரு பெரும் வணிக, கடலாதிக்கமுள்ள குடியரசுடன் சச்சரவிட வெளிப்படையான காரணங்கள் எதுவுமில்லை.

ஆனால் இத்தாலியுடன் ஓர் அரசியல் அமைப்பாக இணைந்திருந்த பல அங்கங்கள் ரோமை விட முன்னேற்றம் அடைந்திருந்தன. இவைஇத்தாலியுடன் இணைந்ததனால் தங்கள் சுதந்திரம் குறுகிவிட்டது; அதனால் அக்காலத்தில் மிக வலிமை வாய்ந்த நாட்டுடன் வாணிபம் செய்து ஈட்டக்கூடிய இலாபங்கள் இல்லாதொழிந்தன. எனவே தங்களுக்கு இழப்பீடு வேண்டுமெனக் கோரின.

இலத்தீன் மக்களுடன் உறவு கொண்ட ஆஸ்கான் சமுதாயத்தைச் சார்ந்த கம்பனியர்கள் இக்கோரிக்கையில் தீவிரமாக யிருந்தார்கள். இவர்களின் முக்கிய நகரம் காபூவா. இவர்களில் சில கூட்டத்தினர் நான்காம் நூற்றாண்டு காலத்திலேயே சிஸிலியில் மெல்லப் புக முயன்றதுண்டு.

கம்பனியர்கள், கிளாடியை போன்ற ரோமாபுரியின் உயர்குடியினர் சிலரைத் தங்கள் கோரிக்கையில் சேர்ந்து கொள்ளும்படி வசப்படுத்திக் கொண்டனர். இந்த ரோமானோ—கம்பனியன் குழு, கிரேக்கர்களும், கார்த்தேஜ் மக்களும் பாதுகாவல் உறுதி யளித்திருந்த மெஸ்ஸினாவை வஞ்சகமாகக் கைப்பற்றிய கம்பனிய கொள்ளைக் கூட்டத்தாருடன் சேர்ந்து கொணடது. இவ்வாறு தான் கி.மு. 2647ஆம் ஆண்டில் சில சூழ்ச்சிக்காரர்களும், ஒழுக்க வரம்பற்ற தன்னலக்கரார் சிலரும் ஒன்றிணைந்து தோற்றுவித்த ஒரு சச்சரவு மத்தியதரைக்கடல் பகுதி முழுவதின் விதியையும் நிர்ணயித்து, கார்த்தேஜையும் அழிவுக்குக் கொண்டு வந்தது.

போராகக் கிளர்ந்தெழுந்த இச்சச்சரவை ரோமர்கள் முதலாம் பியூனிக் போர் என அழைப்பர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பாராளுமன்ற ஆட்சியாளர்களைப் போல, பியூனிக் உயர்குடியாளரும் நீண்ட ஒரு போரைத் தாங்கும் துணிவும், தெம்புமற்றவர்களாக இருந்தனர். இப்போர் துவக்கத்தின் சில ஆண்டுகளில் கார்த்தேஜின் கூலிப்படையை விட ரோம இராணுவம், மேம்பாடுடையதாக உறுதிப்படுத்தி சிஸிலி முழுவதையும் கைப்பற்றியது. ரோம் கடற்படையும், கார்த்தேஜின் கடற்படைக்குச் சமமானது என்று நிரூபித்தது. இது ஒரு வகையில் வியப்புக்குரியதாக இருக்கலாம். ஆனால் ரோமுக்கு கடற்படை மரபு இல்லையென்றாலும், இத்தாலியிலிருந்த கிரேக்கக் குடியேற்றங்களின் கப்பல் தளங்களும், கிரேக்கக் கடலோடிகளும் அவர்கள் கைவசங்களில் தானிருந்தனர்.

இருப்பினும் ஆஃப்ரிக்காவில் கால் வைக்க வேண்டுமென்று கம்பனியன் ரெகுலஸ் செய்த முயற்சி ஒரு பேரழிவில்தான் முடிந்தது. பியூனிக் நகரங்கள் சிஸிலியில் கூட உறுதியாக ஒன்றிணைந்து நின்றன. ஆனால் இருபதாண்டுப் போருக்குப் பிறகு கி.மு. 241ஆம் ஆண்டில் கார்த்தேஜின் தோல்வியை உறுதிப்படுத்திய அம்சங்கள் அதன் பொருளாதாரச் சீர்குலைவும், வெளிநாட்டுறவில் அதற்கிருந்த அச்சங்கலந்த போக்கும், நூற்று நால்வர் குழுவின் பயங்கரத்தால் செயலிழந்து விட்ட அதன் இராணுவத் தலைமையுமேயாகும்.

தோல்விக்கு ஆட்சிக்குழு தான் பொறுப்பு; தன் தவறுகளுக்கு அக்குழு

(தொடர்ச்சி 46ஆம் பக்கம் பார்க்க)

ஜீன் பெரின்

தற்கால பௌதிகத்தின் முன்னோடி

பியர் ஆகெர்

19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் பௌதிகத்துறையில் மாபெரும் முன்னேற்றங்கள் ஏற்பட்டன. கதிர் இயக்கம், மின்னணு, ஆற்றல் அலைவீச்சு, சார்பியல், அணு உட்கரு போன்ற கருத்துகள் தோன்றின. இதனால் அறிவியலில் புதிய பிரிவுகள் கிளைத்தன. இவை ஒவ்வொன்றும் தனித் துறையாக இருக்கக்கூடியவை.

இவ்வரிய வளர்ச்சியில் பிரெஞ்சு பௌதிக அறிஞரான ஜீன் பெரின் முக்கிய பங்கு பெற்றார். இவ்வாண்டு இவரது நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகிறது.

அவர் இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் எதிர் மின்வாய் கதிர்களின் துகள் இயல்பை விளக்கி, இவற்றை எதிர் மின் ஏற்ற ஊர்திகளென, அதாவது எலெக்ட்ரான்களெனக் காட்டினார். இந்த எலெக்ட்ரான்கள் தொழில், செய்தித் தொடர்பு துறைகளில் புரட்சியை ஏற்படுத்தின.

இக் கண்டுபிடிப்பின் சிறப்பிற்கு இரு காரணங்கள் உள்ளன. பல்கலைக் கழகப் படிப்பை அப்போதுதான் முடித்த 25 வயதுள்ள இளம் விஞ்ஞானி இதைக் கண்டுபிடித்தார். 10 ஆண்டுகளாக பௌதிக அறிஞரிடையே நிலவிய கருத்து இதனால் முடிவடைந்தது.

மின் ஆற்றலின் துகள் இயல்பை, ‘‘மின் ஏற்ற அணுக்களை’’ விளக்கிய பின் ஜீன் பெரின் அதைவிட ஆழ்ந்த ஆய்வைத் தொடங்கினார். அப்போது எல்லாப் பொருள்களையும் அமைக்கும் அணுக்களை ஆயத் தொடங்கினார்.

பெரினின் ஆய்வுக்கு முன்னால் பௌதிக அறிஞர்கள் அணுக் கொள்கையையும் தற்காலிகமாகவே ஏற்றுக்கொண்டிருந்தனர். அவர்கள் வாயுக்களின் இயக்க ஆற்றல் பற்றியும் பேசி வந்தனர். ஆனால் பெரினின் விளக்கத்திற்குப் பிறகு அணுவைப் பற்றிய ஐயம் எவர்க்கும் எழவில்லை.

திரவப் பொருளில் உள்ள எல்லாத் துகள்களும், அணுவாகவோ, கூட்டணுவாகவோ, பால்மத்தின் அணுத் துகள்களாகவோ இருப்பினும் ஒரே வகையான ஆற்றல் விதிகளுக்கு உட்படவேண்டும் என்று பால்ட்ஸ்மன், மாக்ஸ்வெல், வான் டெர் வால்ஸ் ஆகியோர் கருதிய முடிவிலிருந்தே அவர் தமது ஆய்வைத் தொடங்கினார். அஃது அளவை மாற்றுவதாக இருந்ததேயொழிய இயக்க ஆற்றல்களில் மாற்றம் ஒன்றுமில்லை; ஆகவே அதே இயக்க விதிகளும் செயல்படும்.

நீரில் மிதக்கும் காளான் துகளை சாதாரண நுண் பெருக்கியால் காணும்போது கண்டுபிடிக்கக்கூடிய பிரௌன் இயலியக்கத்தை இதற்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம். 6 கோடி அளவிற்கு அளவைப் பெரிதும் மாற்றியதால், 1 மில்லி மீட்டரின் $\frac{1}{10}$ பகுதி உயரத்திற்கு பால்ம அணுத் துகள் பரவுவதை 6 கிலோ மீட்டர் உயரத்திற்கு காற்றின் கூட்டணுக்கள் பரவுவதுடன் ஒப்பிட முடிந்தது.

நுண் பெருக்கியினால் அளக்கும்போது 1 லிட்டர் காற்றிலுள்ள கூட்டணுக்களின் எண்ணிக்கையை கணிக்க முடிந்தது. நாம் இப்போது அவோகாட்ரோவின் எண்ணிக்கை — ஒரு கிராம் கூட்டணுவிலுள்ள கூட்டணுக்களின் எண்ணிக்கை (எடுத்துக் காட்டாக 2 கிராம் ஹைட்ரஜன்), அதாவது ஏறக்குறைய 6,00,000 மில்லியன் மில்லியன் மில்லியன் எண்ணிக்கை—என்பதைதான் ஜீன்பெரின் முதன் முறையாகக் கணித்தார். பெரின் பிறகு பல பிற அணுக்கள், கூட்டணுக்கள் பற்றி ஆயத் தொடங்கினார். உதாரணமாக சோப்பு நுரைகளிலும் நீர்ப்பரப்பின் மேல் பகுதிகளிலும் உள்ள தனிக் கூட்டணுவின் வரிசைகளை செய்முறைகள் மூலம் விளக்கினார். பல்வண்ண ஒளி எழல், மேல்பரப்பு மின்னூட்டம், கூழ்நிலைப் பொருள்கள் ஆகியவை பற்றி பல ஆய்வுக் கட்டுரைகள் வெளியிட்டார். இவை அவரது கற்பனைத் திறனையும், ஆய்வுத் திறமையையும் காட்டின.

அவர் கருத்துகள் காலத்துக்கு முற்பட்டவையாக இருந்தன. 1901இல் அவர் அணுவைக் கோளாக அமைத்துக் காட்டத் திட்டமிட்டார். 1921இல் அவர் வெப்ப அணுக்கரு இயக்கத்தினால் விண்மீன்களின் ஆற்றல் தோன்றுகிறதெனக் கருதினார்.

கவர்ச்சிமிகு பேராசிரியரும் ஆய்வுக்கூட இயக்குநருமான பெரின் பல இளைஞர்களை ஆய்வுத்துறைக்கு கவர்ந்திழுத்தார்.

ஜீன் பெரினின் சிறந்த அறிவியல் சாதனைக்காக 1916இல் அவருக்கு பௌதிக நோபெல் பரிசு வழங்கப் பெற்றது. அறிவு வளர்ச்சிக்குத் துணை புரிகின்றவர்கள் அவரைப் பாராட்டுவதற்கு இது மட்டும் காரணமன்று. பிற நாடுகளுக்கு எடுத்துக் காட்டாக விளங்கக்கூடிய பிரெஞ்சு மத்திய தேசிய ஆய்வுக்கூடம் 2ஆம் உலகப்போருக்கு முன் நிறுவப்படுவதற்கு அவர் முக்கிய காரணமாக இருந்தார். மேலும் அறிவியலை மக்களிடையே பரப்பத் துணைசெய்த பாரிஸ் ஆய்வு நிலையத்தை நிறுவுவதற்கும் அவரே காரணமாக இருந்தார்.

விஞ்ஞானம் பலரது முயற்சியால் வளர்கிறது என்றும், ஆகவே அது மனித இனத்தின் பொதுச் சொத்தாக இருக்கவேண்டும் என்றும் கருதிய அவர் தம் வாழ்நாள் முழுவதும் அறிவியலை அனைவரும் அறியச் செய்து அனைவரின் நலனுக்காக அதை வளர்ப்பதில் அயராது உழைத்து வந்தார்.

பியர் ஆகெர் பன்னாட்டு அறிவியல் நிறுவன அமைப்பு நிரந்தரக் குழுவின் தலைவர். இக்குழு யுனெஸ்கோவின் உதவியுடன் அமைக்கப்படுகிறது. பிரெஞ்சு பௌதிக அறிஞரான இவர் ஐரோப்பிய விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் முன்னாள் பொது இயக்குநரும், ரோமிலுள்ள பன்னாட்டு கணக்கீட்டு நிலையத் தலைவரும் ஆவார். 1948-முதல் 1959 வரை யுனெஸ்கோ இயற்கை அறிவியல் துறை இயக்குநராகப் பணியாற்றினார். இவருடைய நூல்களுள் யுனெஸ்கோ வெளியிட்ட ‘‘கரண்ட் டிரென்ட்ஸ் இன் சைன்டிபிக் ரிசர்ச்’’ (அறிவியல் ஆய்வில் இன்றைய போக்குகள்) எனும் நூல் முக்கியமானது. (3ஆம் பதிப்பு, யுனெஸ்கோ, பாரிஸ்)

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அநேகமாக உச்ச எல்லையை எட்டிவிடும் என்பதை நாம் ஏற்றுக் கொண்டால், முறையாக நிர்மாணிக்கப்பட்ட நகர்ப்புற வீடுகளின் அபிவிருத்திக்கும் நாம் திட்டமிடலாம். அதில் தொல்பொருளாய்வு இடங்களும் திறந்தவெளிகளும் உள்ளடங்கும். அது பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாகவும், பகுதிக்குச் சமத்துவம் வழங்குவதாகவும் இருக்கும்.

துனீசிய - கார்த்தேஜ் திட்டத்தின் கணிப்பின்படி, 1985இல் மக்கள் தொகை பின்கண்டவாறு இருக்கும்:

○ துனீசியாவை இடமாகக் கொண்டு வாழ்வோர் — 13,00,000

○ வடபால் கடற்கரையோரப் பகுதியை இடமாகக் கொண்டு வாழ்வோர் — 2,20,000

○ தென்பால் கடற்கரையோரப் பகுதியை இடமாகக் கொண்டு வாழ்வோர் — 1,70,000

அதாவது 1985இல் மொத்தம் 16,90,000 பேர் குடியிருப்பர்.

இத் துனீசிய நகர்ப்புற அமைப்பில், மதினாவுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய மைய நகரமென்ற பங்கையும் செயல்வேகம் மிக்கது என்கிற இடத்தையும் மீண்டும் பெற்றுத்தர, புத்துயிர் அளிக்கும் திட்டமொன்றையும் மேற்கொள்ள வேண்டும். 'குடியேற்றப் பட்டண'த்திற்கும், 'அரபுப் பகுதி'க்கும் இடையே உள்ள வித்தியாசம் மறைந்துவிடும்; 'சிறு குடில் பட்டண'க் குடியிருப்பு மேலும் பரவாமல் போவதுடன், நிலையும் தலை கீழாகி விடும்.

முரண்பாடில்லாமல் ஒரு மொத்தமாகப் பெறும் வகையில் கார்த்தேஜை வரலாற்று ரீதியில் காப்பாற்றி, தொல்பொருளாய்வின் எஞ்சிய பொருள்களுடன் இணைத்து வைக்க முடிந்திருந்தால், கட்டுப்படுத்தப்பட்டு, சரியாக அமைக்கப்பட்ட நகர்ப்புற வளர்ச்சியாலும், தொல்பொருள் ஆய்வு மண்டலத்தின் அபிவிருத்தியாலும் வடபால் கடற்கரையோரப் பகுதியில் சாதகமான பொருளாதார விளைவுகள் ஏற்பட்டிருக்கும்.

நாடு பெற்றுள்ள பரந்த சுற்றுலா வசதிகளுடன் துனீசியாவை இணைத்து, தொழில் மண்டலத்தை ஒட்டினாற் போல் அமையும் தென்பால் கடற்கரையோர நகர்ப்புற பகுதியானது, கேப்-பான் என்னும் பிரம்மாண்டமான கடற்கரை வரை நீண்டு விரிந்து கிடக்கும்.

இவ் வியற்கைக் காட்சிகளுக்கு நேர் மாறாக, துனீசியாவே, பார்வையாளருக்கு, நகர்ப்புற அமைப்பால் கலாச்சார ஆர்வத்தைத் தூண்டும்.

கலாச்சார ஆதாரங்களை, வர்ங்கும் பொருள்களாகவோ அன்றி மூலப் பொருள்களாகவோ இனி காண இயலும். அவ்வாறு ஆதாரங்கள் வளர்ச்சியடைந்துள்ளதால், மூலதனத்தை அதில் முதலீடு செய்வதற்கு நியாயமிருக்கிறது. எனவே இலாபமும் நேரடியாகச் சுற்றுலாப் பொருளாதாரத் துறையிலும், மற்றும் நகர்ப்புற வளர்ச்சியினால் காணும் துணை விளைவுகளில் மறைமுகமாகவும் கிடைக்கின்றது.

இவ்வாறு புராதனச் செல்வங்களின் துனீசிய கார்த்தேஜிய பாரம்பரியத்தைப் புனர் நிறுவனஞ்செய்வது, பிரதானமாக, பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்காகத்தான் என்றாலும், இப்படி அணுகினால்தான், கார்த்தேஜைக் காப்பாற்றுந் தொல் பொருளாய்வுப் பிரச்சினைக்கும் சரி, பியூனிய மற்றும், ரோமநகரங்களை ஆராயத் தொடருவதை உறுதிப் படுத்திக் கொள்வதற்குஞ்சரி, ஒரு வழி கிடைக்கும்.

இப்போதுங் கூட, மிகவும் விரிவான ஆராய்ச்சி துவங்குவதற்காகக் காத்திருக்கிற அதே நேரத்தில், தொல்பொருளாய்வு மண்டலத்தைப் பாதுகாப்பதற்கான வழி முறைகளையும் மேற் கொள்ள இயலும். சில இடங்களை, அங்கே கட்டடங்களை நிர்மாணிப்பதற்குத் தற்காலிகமாகவோ அன்றி நிலையாகவோ தடுக்கப்பட்டவையெனப் பிரிக்கலாம்; கட்டுப்படுத்தப்பட்ட வளர்ச்சி தேவைப்படும் இடங்களென மற்ற இடங்களைப் பட்டியலிடலாம். நிதி வசதி கிடைத்தவுடன், நகரின் வரலாற்றில் பல்வேறு கால கட்டங்களைக் குறித்து முறையானதொரு-மொத்தமான ஆராய்ச்சிக்கு திட்டமிட்டால், எந்த இடங்கள் உண்மையில்தொல் பொருள் ஆய்வு மதிப்பு வாய்ந்தவை என்பதை அவ் ஆய்வு தீர்மானித்துவிடும். இவ்விதம், மற்ற இடங்களில் கட்டிடங்களைக் கட்டுவதற்கும் அத் திட்டம் அனுமதிக்கும்.

தொல் பொருளாய்வு இடம், கார்த்தேஜ் மற்றும் வரலாற்றுப் பட்டணமான துனீசிய மதினா ஆகியவை சீரழிந்து வருவதை அலசிப் பார்க்க முயன்று கொண்டிருக்கும் அனைத்துலக மற்றும் துனீசிய வல்லுநர்களை எதிர்நோக்கியுள்ள பணியைப்பற்றித் தெரிந்து கொள்வதற்கு, இச் சுருக்கமான ஆய்வுக் குறிப்பு சில விவரங்களைத் தருகிறது.

ஆயினும் தோண்டி எடுத்தல், காப்பாற்றுதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் ஆகிய பணிகட்குத் தேவைப்படும் நிதியை, ஓர் அனைத்துலக இயக்கம் மூலம் பெறும்போது தான், இணைந்த அபிவிருத்திக்கு அவ் வல்லுநர்கள் தந்துள்ள கருத்துருவை நடைமுறையாக்க முடியும்.

இதில் துனீசிய அரசின் வேண்டுகோள் ஒட்டிய யுனெஸ்கோவின் ஒத்துழைப்புத் தான், கார்த்தேஜைக் காப்பாற்றுவதில், தீர்மானிக்கும் அம்சமாக இருக்கும்.

தமிழில் : தெசிணி

(44ஆம் பக்கத் தொடர்ச்சி)

சரியான தண்டனையையும் பெற்றுக் கொண்டது. பெருநிலக்கிழார்களால் நெடுங்காலம் இரக்கமற்றுச் சுரண்டப்பட்டு வந்த லிபியன் பாட்டாளி மக்களையும், உழவர்களையும் தங்களோடு சேர்த்துக் கொண்டு ஒரு சமுதாயப் புரட்சியைத் தோற்றுவித்தனர் இராணுவ சேவையிலிருந்து விடுவிக்கப்பட்ட கூலிப் பட்டாளத்தினர். இப்புரட்சியில் ஆட்சிக்குழு வாரிச் செல்லப்பட்டது.

குடியரசு தன் மீட்சிக்கு சிஸிலியப் போரில் பெரும் இராணுவத் தலைவராகப் புகழ் எய்திய இளம் படைத்தலைவரான ஹாமில்கார் பர்க்காவுக்குக் கடமைப்பட்டிருக்கிறது. ஆனால் தோல்விக்குக் காரணமாக யிருந்த ஆட்சிக் குழுவை மீண்டும் அரசு கட்டிலில் அமர்த்தும் நோக்கம் பர்க்காவுக்கு யில்லை. மாறாக ஹாமில்கார் பர்க்கா ஸ்பெயினில் ஒரு சுதந்திர அரசைத் தோற்றுவித்தான். ரோம் ஆட்சிக் குழுவின் கண்காணிப்பினால், அதன் வளர்ச்சி துவக்க காலத்திலேனும், தடைப்படாமலிருக்கும் வகையில் போதிய தொலைவில் இப்புதிய அரசை அவன் அமைத்துக் கொண்டான். கி.மு. 228ஆம் ஆண்டில் அவன் மறைந்தபோது தன் மக்களுக்கும், மருமகனுக்கும் ஒரு பரந்த அரசையும், எடுக்க எடுக்கக் குறையாத கனிவளமிக்க சுரங்கங்களையும், தலைவர்களுக்கு உளத்தூய்மையுடன் கட்டுப்பட்டிருந்த ஓர் இராணுவத்தையும் அவன் விட்டுச் சென்றான்.

பத்தாண்டுகளுக்குப் பிறகு, தன் மைத்துனன் கொலை செய்யப்பட்டதும், இவையனைத்தையும் பாரம்பரிய சொத்தாக பெற்றுக் கொண்ட ஹானிபல் ரோம் மீது வஞ்சம் தீர்ப்பதற்கெனத் தன் தந்தை தீட்டியிருந்த திட்டத்தை நிறைவு படுத்தினான்.

இத்தாலியின் உள்நாட்டு அரசியல் பற்றி அவன் நன்கறிந்திருந்தான். மேற்கு மத்தியதரைக் கடற்பகுதிகளின் சந்தைகள் அனைத்தையும் தங்களுக்குத் திறந்து விட்ட அந்த வெற்றியின் முழுப் பயனையும் அடைந்து கொண்ட பின்னர், கிரேக்கர்களும். கம்பெனியர்களும் லாட்டியம் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தையும், ரோம் வணிகர்களின் பேராசையையும் பற்றி அவர்கள் கவலைப்பட ஆரம்பித்துள்ளனர் என்பதையும் ஹானிபல் உணர்ந்திருந்தான். ரோமின் கூட்டுறவிலிருந்து அபாயமில்லாமல் விலகிக் கொள்ள முடியுமானால், கிரேக்கர்களும் கம்பெனியர்களும் நிச்சயமாக விலகியிருப்பார்கள். அவர்களின் வெளியேற்றம் ரோமின் கடற்படை வலுவைக் குறைத்து, இத்தாலிக்கு வெளியே அதைச் சக்தியற்றதாக்கிவிடும்.

இவ்வாறு வெளியேற வேண்டுமானால் இராணுவத்தின் பலத்தைத் தளரச் செய்ய வேண்டும். செல்டிக் பகுதியிலிருந்து ஏராளமான வீரர்களைக் கொண்டு ரோம் இராணுவத்தை முறியடிக்க ஹானிபல் திட்டமிட்டான்; அவனுடைய திட்டத்தின் ஒவ்வோர் அம்சமும் திறம்பட அமைந்திருந்தது.

எனினும் மூன்றாண்டுகளுக்குள் வெற்றியின் வாயிலுக்கு வந்து விட்ட அவன் திட்டம் எப்படித் தோல்வியுற்றது என்பதை இங்கு விளக்க இயலாது. ரோம் இத்தாலியை மீண்டும் கைப்பற்றிற்று. சிப்பியா வெற்றிகரமாக ஆஃப்ரிக்காவில் இறங்கினான். கி.மு. 201 ஆம் ஆண்டில் நடந்த போருக்குப் பிறகு வெற்றி பெற்றோர்களின் நிபந்தனைக்கு கார்த்தேஜ் கட்டுப்பட வேண்டியதாயிற்று.

ஆனால் இந்நிபந்தனைகள் கடுமையாக இருக்கவில்லை. சிப்பியோவும், ரோமின் பெரும்பான்மை ஆட்சிக் குழுவினரும், ஆஃப்ரிக்காவுக்கு வெளியே தன் ஆட்சியை விரிவுபடுத்த விடாது கார்த்தேஜைக் கட்டுப்படுத்த வேண்டும், என்றென்றும் அது ரோமாபுரியின் ஆதிக்கத்துக்கு உள்ளடங்கியதாக இருக்க வேண்டும் என விரும்பினர். அவர்கள் கார்த்தேஜை அழித்துவிட விரும்பவில்லை. கி.மு. 170ஆம் ஆண்டு வாக்கில் தான் கேட்டோவும் அவன் கட்சியும் கார்த்தேஜை அழிப்பதுதான் ரோமுக்கு உகந்தது என்ற கருத்தை ரோம் ஏற்கும்படிச் செய்தனர்.

ரோமின் போக்கில் எப்படி இந்த திடீர் மாறுதல் ஏற்பட்டது என்பது குறித்து பல விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன. ஆனால் கார்த்தேஜின் உள்நாட்டு அரசியல் நிலைதான் இதற்குக் காரணமாக இருந்தது என்பது என் கருத்து.

ஜமாவுக்குப் பின்னர் சிறிது காலம் தன் நாட்டை ஆள முயன்ற ஹானிபல் கூட இம் மறுமலர்ச்சிக்குத் துணை செய்தான்! ஆனால் ரோமில் நிலவியதோ கடுமையான சமுதாய அமைப்பின் மீது நிறுவப்பட்ட அரசியல். அது நேரடி

Edited and published by N. D. Sundaravadivelu for the Southern Languages Book Trust, 458, Poonamallee High Road, Madras-10 and printed by B. Venugopal Reddy at Prasad Process Private Limited, Madras-26.

1970, 'யுனெஸ்கோ கூரியர்' இதழ்கள்

12 JUL 1973

ஜனவரி

அதிர்வுகளின் சிற்ப வடிவம்: அதிர்வு அலையியல்: அதிர்வுகளின் வடிவம் (ஹான்ஸ் ஜென்னி). க்வாசார்களும் அனைத்துலகங்களின் பிறப்பும் (ஜியார்ஜி மார்க்ஸ்). சிலந்தியின் கூடு - அரியதொரு கட்டட அமைப்பு (பெர்ட் இடக்டேல்). மற்றும் எட்டுப்பக்க வண்ணப்படங்கள்.

பிப்ரவரி

கல்வியில் நெருக்கடியான கட்டம்: 1970 பன்னாட்டுக் கல்வி ஆண்டு (லியோ ஃபெர்னிக்). கல்வி யாருக்கு? எப்படி? (பியர் ராண்டியர்). கல்விக்கும் அழிவுக்குமிடையே போட்டி (ஹோவர்டு ப்ராபின்). புதிய உலகை எதிர்நோக்கும் வருங்கால மாணவன் (ரெனே ஹபாஹி). தேவைக்கு மிகுதியான ஆசிரியர்களா? (ஜான் செஸ்வாஸ்). சோவியத் பள்ளிகளின் புதிய நோக்கு (இயோகி ஃப் நெக்காம்கின்) கல்வி பற்றிய கேள்வி (பால் லென்கிராண்டு).

மார்ச்

உலக வளர்ச்சிக்குரிய புதிய திட்டமுறை: (பியர்சன் அறிக்கை): 'வளர்ச்சியில் கூட்டாளிகள்' (லெஸ்டர் பி.பியர்சன்). வளர்ச்சிக் குறைவால் மாறிவரும் புதிய தோற்றம். தேவையில்லாக் குழந்தைகள் இனி வேண்டாம். வேலையின்மைப் பெருக்கம். பசுமைப் புரட்சி.

ஏப்ரல்

விண்வெளி ஆய்வால் விளைந்த பிற பயன்கள்: விண்வெளி ஆய்வால் விளைந்த பிற பயன்கள் (ஜெனே கிரிகோரி) பாபேலுக்கு அப்பால். முதல் உலக சமுதாயத்திற்குப் போடப்படும் அடித்தளம் (ஆர்தர் சி. கிளார்க்). மற்றும் உலகக் கலைக் கருவூலங்கள்.

மே

பீஸ்டம்: முதல் பண்டைய கிரேக்க சுவரோவியங்கள் கண்டுபிடிக்கப்படுதல் (மைக்கேல் கானில் லக்கோஸ்ட்). கெய்ரோ (அப்துல் ரஹ்மான் ஜக்கீ). சான் அகஸ்டின் (ஃபர்னுண்டோசான்ஜ்). லெப்பென்ஸ்கிவீர் (ஜீன்வைடல்)

ஜூன்

புற்றுநோய்: புற்றுநோய் நமது நிலையென்ன? (ஜான் ஹிகின்சன்). சிகரெட்டும் புற்றுநோயும் (சர் ஜார்ஜ் காட்பெர்). புகை பிடிப்பதன் தீமைகள் (ராபர்ட் எம். டெய்லர்). உயிரணுவின் மறைபொருளை ஆய்தல் (நிக்கொலாஸ் ஓடர்ட்செங்கோ).

ஜூலை

நீரை நாடிச் செல்லும் மனிதன்: மனிதனின் தணியாத நீர் வேட்கை (ரேமாண்ட் எல். நேஸ்). பாண்டானுல் (நியூட்டன் வெலோசோ கார்டிரோ). அமெரிக்கப் பண்பாட்டில் புதுமையும் பழைய மரபும் (சார்லஸ் சி. மார்க்). கழுகு-விண்வெளிக் கலம் (ஜே. பாட்ரோசினியோடி சூசா)

ஆகஸ்ட்

லெனின், ஜாவாவின் கலை: லெனினும் கல்வி அறிவியல் பண்பாடும் (மேரி-பியர் ஹெர்ஸாக்) லெனினும் அறிவியல் வளர்ச்சியும் (ம்ஸ்டிஸ்லாவ் கெல்டிஷ்). ஜாவாவின் கலையும் கட்டடங்களும் (ஹிரோஷி டைஃபுக்கு). பண்டைய பெருங்கண்டத்தின் அடையாளங்களை ஆய்தல் (பெஹ்ர்மன்)

செப்டம்பர்-அக்டோபர்

மனிதனும் வன்முறையும்: மனிதனின் வன்முறை பற்றிய ஆய்வு (டான் பெஹ்ர்மன்). அமைதியுள்ள சமுதாயம்-நெருக்கடிச் சிக்கலா? (பால் லேஹாசன்). பாபேல் கோபுரம் (ஃப்ரெட்ரிஷ் ராகெட்). இயற்கையை அழிக்கும் மனிதன் (ஊதாண்ட்).

நவம்பர்

முடிவு காணவேண்டிய பத்தாண்டுகள்: வளர்ச்சியில் நெருக்கடி (மால்கம் எஸ். ஆதிசேஷையா). சித்தியர்களின் பொற்குவை (அலெக்ஸாண்டர் கர்பிச்னிக்கோவ்). இக்காலத்திற்கேற்ற பொருட்காட்சி மனைகள் (காமரான்).

டிசம்பர்

அரிய பறவை: வெறிபிடித்த பண்டைக்காலப் போட்டி (பிலிப் நோயல் பேக்கர்). நுண்ணுயிர் இரசாயனப் படைக்கலங்களின் பயங்கரம் (பெர்ட் வி. ஏ. ரோலிங்).

யாகவோ, மறைமுகமாகவோ தன் கட்சியாளர்களுக்குப் பெரும் இலாபங்களை ஈட்டிக் கொடுத்து வந்தது. எனவே இத்தகைய ஒரு கட்டத்தில் தங்கள் அமைப்புக்கு ஊறு செய்யக்கூடிய-மக்கள் ஆதரவு பெற்ற-ஆட்சி முறை வேறெங்கும் உருவாவதை ரோம் விரும்பவில்லை. புரட்சியின் நாற்றங்கால்கள் ஆகிவிட்டன என்ற காரணத்தால் கி. மு. 146ஆம் ஆண்டில் கோரிந்து, கார்த்தேஜ் ஆகிய இரு நகரங்களையுமே ரோம் ஆட்சிக்குழு அழித்தது.

பல காலம் தெரியாமலும், சில காலம் மர்மமாகவும் ஆஃப்ரிக்காவின் கடற்கரைகளில் ஒட்டிக் கொண்டிருந்த இந்த ஆசிய நகரத்தின் தலைவிதி இவ்வாறு தான் உருவாகியிருந்தது. இத்தகைய விடா உறுதியும்; தேவைக்குத் தகுந்தவாறு தன்னை மாற்றியமைத்துக் கொள்வதில் அளப்பரிய ஆற்றலும் கார்த்தேஜ் படைத்திருந்ததெல்லாம் வீணுக்குத் தானு? கார்த்தேஜின் மொழியும், பண்பாடும் கி. பி. நான்காம் நூற்றுண்டு வரை அழியாதிருந்தன. அது வரை தன்னையழித்த ரோமில் கார்த்தேஜ் முக்கிய ஒரு பாகம் வகித்துத் தான் வந்தது.

அதன் பாரம்பரியம் வேரிடங்களுக்கும் மாறி மாறிக் கிடைத்துள்ளது. கார்த்தேஜின் சீடர்களாகவும், குடிமக்களாகவும் இருந்த பெர்பரி மக்களுக்கு இது கிட்டிற்று. அவர்கள் மூலமாக இன்று இஸ்லாமியக் கிழக்குக்கும், கிறித்திவ மேற்குக்குமிடையே பாலமாக விளங்கி வரும் துனீசியாவுக்கும் கார்த்தேஜ் பாரம்பரியத்தின் ஒரு பகுதி கிடைக்கத் தான் செய்தது.

தமிழில் : எம். அப்துல் வஹ்ஹாப்

(32ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆடைப் பிடிப்புகள் ஆகியவற்றை வைத்தனர். பெண்கள் அடக்கம் செய்யப்பட்ட கல்லறைகள் பலவற்றில் கழுத்துப் பட்டைச் சங்கிலிகள், வெண்கலக் கண்ணுடிகள் ஆகியவை வைக்கப்பட்டிருந்தன. ஆனுல் அந்தக் கல்லறைகள் அலங்காரப் பொருட்களால் அணி செய்யப்படவில்லை.

சாலம்போ அருகிலும், ஹமில்கார் அருகிலும், இரு சிறிய தேவாலயங்களின் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இச் சின்னங்கள், விரிவானவையாய் இல்லாத போதிலும், கலசங்கள் போன்ற பல பொருட்கள் சன்னிதானங்களில் காணப்பட்டதுடன், கார்த்தேஜிய சமயம் பற்றி நாம் ஓரளவு அறிந்து கொள்ள வாய்ப்பளிக்கின்றன.

வீட்டுக் கட்டடக்கலை பற்றி அவ்வளவாக நமக்குத் தகவல் கிட்டவில்லை. புனிக் தலைநகரத்தில் பல அடுக்கு மாடிகள் கொண்ட வீடுகள் இருந்ததாகச் சில பண்டைய நூலாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். பைர்லா மலைச்சரிவிலும், கம்மார்த் கடலோரத்திலும் அண்மையில் நடைபெற்ற அகழ்வாய்வுகள் மூலம், காப்பான் தீபகற்பத்தில் புகழ் பெற்ற யுனிக் ஊரான கெர்கோனேயில் அண்மையில் நாம் அகழ்வாய்வில் கண்டுபிடித்தது போன்ற கார்த்தேஜியக் குடியிருப்புக்கள் இருந்ததாக நாம் அறியமுடிகின்றது.

இது போன்ற இலக்கிய, அகழ்வாய்வு, கல்வெட்டுச் சாசன, மூலங்களின் துணையோடு, கார்த்தேஜின் பண்டைய வரலாற்றை மீண்டும் படம்பிடித்துக் காட்ட வரலாற்று அறிஞன் முயல்கின்றுன்.

தமிழில் : கா. திரவியம்

(41ஆம் பக்கத் தொடர்ச்சி)

முதன்மையான வேலை ஒன்று உண்டு. அந்தப் பிரதேசத்தின் நகர வளர்ச்சிக்கான இணைந்திசையும் விஞ்ஞான முறைத்திட்டம் ஒன்றை வகுத்து துனீசிய அதிகாரிகளுக்கு இவர்கள் கொடுக்க வேண்டும். இந்தக் கட்டத்தில் தான், உலக நாடுகளின் உதவி, நினைவுச் சின்னங்களையும் பரப்பிடங்களையும் சீர்படுத்திப் பாதுகாப்பதற்குக் கிடைக்கும் என நம்பலாம்; அந்நம்பிக்கைக்கு இடமிருக்கிறது.

"பாரிஸ் நகரம் ஆபத்தில் உள்ளது. அதன் பண்புக்கும் மதிப்புக்கும் ஆதாரமான முகப்புக்கூறுகள் அழிக்கப்பட்டு, அந்நகரம் தன்னழிவுப் பாதையில் செல்லுவதாகத் தோன்றுகிறது. எவரும் இதை உணர்ந்ததாகவோ இப்போக்கைத் தடுத்து நிறுத்துவதற்கு ஏதும் செய்யப்பட்டதாகவோ தெரியவில்லை" இவ்வாறு பிரஞ்சு நாட்டுச் செய்தி இதழ் ஒன்றில் சில மாதங்களுக்கு முன் தலைசிறந்த நகர்த்திட்ட நிபுணர் ஒருவர் எழுதியிருந்தார்.

ஐரோப்பாவிலும் பிற இடங்களிலும் உள்ள மற்றச் செய்தி இதழ்களும் மற்ற நகரங்களின் கதியைப் பற்றி இவ்வாறு வருந்தி எழுதலாம். தலைக்கு ஆண்டொன்றுக்கு 100 டாலர் மட்டுமே வருமானம் உடைய நாட்டின் தலைநகரமான துனீஸ் இதில் வழிகாட்டினுல் அது ஒரு பெரிய சாதனையாகும். ஏனெனில், ஒழுங்கமையாத நகர வளர்ச்சியினுல் விளையும் அழிவை அந்நகரத் தலைவர்கள் சரியான நேரத்தில் தெரிந்துகொண்டனர்.

தமிழில் : சண்முகசுப்பிரமணியம்

REGD. NO. M. 8276

துனீசின் பேரெழில்

மசூதிகள், சந்தைகள், விடுதிகள், வீடுகள் மலிந்த துனீசின் மதீனா 11 நூற்றாண்டுகளாக நிலவிய இஸ்லாமியக் கலை, கட்டடக் கலை ஆகியவற்றின் கருவூலமாகத் திகழ்கின்றது. மதீனாவைப் பேணி அதை துனீசியாவின் பண்பாட்டு வருவாய்க்களனாக மாற்ற யுனெஸ்கோவும் துனீசிய அரசாங்கமும் பெருந்திட்டமொன்றில் ஈடுபட்டுள்ளன. (4ஆம், 35ஆம் பக்கங்களைப் பார்க்க) இத் தூபி 17ஆம் நூற்றாண்டின் யூசுப் டே மசூதியின் கொடுமுடியாக மிளிர்கின்றது.

Photo Jacques Perez, A. S. M., Tunis